வருடாந்த அறிக்கை - 2017

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை

உள்ளடக்கம்

கூட்டிணைந்த தகவல்கள்	2
எமது பதவியணி பற்றிய விபரம்	3
தலைவரின் செய்தி	4 - 5
பணிப்பாளர் நாயகத்தின் செய்தி	6 - 7
எமது தூரநோக்கும் செயற்பணியும்	8
செயலாற்றுகை	9 - 32
நிதிக் கூற்றுக்கள்	33 - 42
கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை	43 - 55
கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை தொடர்பான பதில்கள்	56 – 72
இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தினது 14 (2) (இ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி தயாரித்து வழங்கும் கணக்காய்வு அறிக்கை	73 - 81
2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை நிலைபெறுதகு வலு அதிகா சபையின் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதி அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு விசாரணைகளுக்கான பதில்கள்	82 - 87

கூட்டிணைந்த தகவல்கள்

அதிகார சபையின் பெயர்

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை

சட்டமுறையான அந்தஸ்துகள்

இது 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை சட்டத்தினால் தாபிக்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டிற்கான முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் பற்றிய விபரம்

திரு கீர்த்தி விக்ரமரட்ன	தலைவர்	இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை
திருமதி மாலனி குமாரிஹாமி	உறுப்பினர்	மின்வலு சக்தி அமைச்சு
திரு பீ.என். தமிந்த குமார	உறுப்பினர்	மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு
திருமதி ஐ.ஜே. அபேரட்ன	உறுப்பினர்	கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு
திரு டீ.வி. பந்துலசேன	உறுப்பினர்	கமத்தொழில் அமைச்சு
திரு கே.பீ. குருகே	உறுப்பினர்	நியமன உறுப்பினர்
திரு டப்ளியூ.ரீ.எச். ருச்சிர விதான	உறுப்பினர்	மகாவலி அமைச்சு
பொறியியலாளர் டீ.டீ. ஆரியரட்ன	உறுப்பினர்	நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சு
திரு ஏ.எம்.ஆர்.ஜே.கே. ஜயசிங்க	உறுப்பினர்	போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு
திரு எஸ். தர்ஷன்	உறுப்பினர்	நிதி அமைச்சு
திருமதி ஆர்.பி.ஆர். அமரசிங்க	உறுப்பினர்	விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு
திரு தமித குமாரசிங்க	உறுப்பினர்	இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
பொறியியலாளர் டீ.டீ. ஆனந்த நிமல்	உறுப்பினர்	நியமன உறுப்பினர்
திருமதி பர்ஷானா அனிப்	உறுப்பினர்	நியமன உறுப்பினர்
திரு ஏ.எம்.சி. பெரேரா	உறுப்பினர்	நியமன உறுப்பினர்
திரு ஹிரான் அஜித் கருனாரட்ன	உறுப்பினர்	நியமன உறுப்பினர்
திரு ஜி. மஹேந்திர பெரேரா	உறுப்பினர்	நியமன உறுப்பினர்
திரு ஜி. விஜித்த நந்த குமார	உறுப்பினர்	நியமன உறுப்பினர்
பொறியியலாளர் சரத் ஜயதிலக்க	உறுப்பினர்	நியமன உறுப்பினர்
திரு சந்திரசிறி செனவிரட்ன	உறுப்பினர்	நியமன உறுப்பினர்

2017 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உறுப்பினர்கள் பற்றிய விபரம்

திரு எஸ். தர்ஷன்	தலைவர்	நிதி அமைச்சு
திருமதி பர்ஷானா அனிப்	உறுப்பினர்	நியமன உறுப்பினர்
திருமதி பீ.ஏ.டீ.ஏ. அபேவர்த்தன	உறுப்பினர்	மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு அமைச்சு
திருமதி எச்.ஏ.டீ. சந்தானி	உறுப்பினர்	கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்
திருமதி மாலனி குமாரிஹாமி	உறுப்பினர்	மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு அமைச்சு

2017 ஆம் ஆண்டிற்கான பதவியணி பற்றிய விபரம்

எமது அதிகார சபை ஒப்பீட்டளவில் புதிய ஒரு நிறுவனமாகும். இதில் மொத்தம் 103 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். எமது பதவியணி பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.



பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
கட்டிடத்தொகுதி இலக்கம் 05, 01-வது மாடி, BMICH,
பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி இலக்கம்: 0112677445
தொலைநகல் இலக்கம்: 0112682534
மின்னஞ்சல் முகவரி: info@energy.gov.lk
இணையத்தள முகவரி: www.energy.gov.lk

தலைவரின் செய்தி

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் தலைவர் என்ற ரீதியில், 2017 ஆம் ஆண்டின் செயற்பாடுகளினது செயலாற்றுகை மீளாய்வுக்கு இந்த செய்தியை விடுப்பதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சக்தி என்பது நாட்டின் அபிவிருத்திற்கு தேவையான ஆரம்ப நுகர்வுப் பொருட்களில் ஒன்றாகும். ஆகையால், சக்தித் துறையில் ஆகக்கூடிய சாத்தியமான பொருளாதார நன்மைகளை பெற்றுக் கொள்ளக் கூடிய அத்தகைய ஒரு வழியில் சக்தி விநியோகம் மற்றும் சக்திற்கான கேள்வி ஆகியவற்றை அனுகூல முறையில் முகாமை செய்வது முக்கியமானதாகும். இதற்கு அதிக முன்னுரிமையை அளிப்பதனூடாக, சக்தியின் நிலைபெறுதகுதன்மை நாட்டின் அபிவிருத்தியில் முக்கியமான ஒரு பொருளாதார பரிமாணமாக இனங்காணப்படுகின்றது.

சக்திப் பாவனையின் வரலாற்று முழுதிலும், நிலைபெறுதகு சக்திக்கு இலங்கை உரிய கவனத்தை செலுத்தியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுவதற்கு விரும்புகின்றேன். சக்தியைப் பாதுகாப்பது என்பது நிலைபெறுதகு சக்தியின் முக்கியமான அங்கங்களில் ஒரு அங்கமாகும். இந்தக் கரும விடயம் கலாசார ரீதியில் எமது மக்களுக்கு பொறுப்பு சாட்டப் பட்டுள்ளது. வளங்கள் சூழலுக்கு வெளியிடப்படுவதற்கு முன்னர் அத்தகைய வளங்களிலிருந்து ஆகக்கூடிய சாத்தியமான நன்மைகளை பெறும் நிமித்தம் நாம் பயன்படுத்தியிருக்கின்றோம். அது எமது வாழ்க்கைப் பாணியில் அங்கமாக விளங்கியது. பின்னர், சக்தி வளங்களுக்கு வரும் போது, சில காலத்திற்கு முன்னர் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியினூடாக எமது மொத்த சக்தித் தேவையை எம்மால் பூர்த்தி செய்ய முடிந்தது. இருப்பினும், குறிப்பாக பாரிய அளவான நீர்வலு வளங்கள் பயன்படுத்தப் பட்டதையடுத்து, இலங்கை ஏனைய சக்தி வளங்களுக்கு மாற வேண்டியிருந்தது.

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தினூடாக இலங்கை நவீன சக்திப் பாவனையில் நிலைபெறுதகு சக்திப் பயணத்தில் நகர்வதற்கு வலிமையான முன்னெடுப்புத் திட்டங்களை மேற்கொண்டுள்ளது என்பதை நான் அறிவேன். நாம் வழமையாக பாரம்பரிய சக்திப் பாதுகாப்பு பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பழக்கப்பட்டிருந்தாலும், பாரம்பரிய அணுகு முறைகளினூடாக இன்றைய சூழ்நிலைக்கு தேவையான அத்தகைய சக்திப் பாதுகாப்பு முறையை எம்மால் பிரயோகிக்க முடியாது. சக்திப் பாவனையை சரியாக முகாமை செய்வதனூடாக சக்திப் பாதுகாப்பை செயற்படுத்தும் நிமித்தம் எமக்கு நவீன தொழில் நுட்பம், சட்டவாக்க அணுகு முறைகள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, அறிவு மற்றும் விழிப்புணர்வு என்பன அவசியமாகும். அதே போன்று, சக்தி வளங்களின் பாவனையிலும், நாட்டின் சக்திற்கான எதிர்கால தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு, சுதேசிய மீளப்புதுப் பிக்கத்தகு சக்தி வளங்களை அனுகூலமாக பயன்படுத்துவதற்கு நவீன அணுகு முறைகளுக்கு நகர்வதும் எமக்கு அவசியமாகும்.

நாட்டில் பாரியளவு நிலைபெறுதகு சக்தி செயற்படுத்துகைக்கு தேவையான வேலைச்சட்டகம் விதிக்கப்பட்டுள்ளதன் கண்ணோட்டத்தில் நோக்கும் போது, கடந்த காலத்தில் செயற்படுத்தப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தில் எம்மால் மகிழ்ச்சி அடைய முடியும். அது எதிர்காலத்தில் நிலைபெறுதகு சக்தியின் அபிவிருத்தி அடைந்த ஒரு கட்டத்திற்கு உகந்த ஒரு தளமாக அமையும். கூறப்பட்ட

பின்னணியில், செயற்பாடுகளை வலுப்படுத்த அவசியம் யாதெனில், நன்கு ஒருமுகப்பட்டிருக்கின்ற ஒரு விதத்தில் நாட்டில் நிலைபெறுதகு சக்தியை செயற்படுத்துவதன் தனித்துவமான முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்வதாகும். உலகத்தின் சக்தி நெருக்கடிக்கு சூரிய சக்திக் களஞ்சிய முறைமை (சூரிய சக்திக் கலன்) நிரந்தர தீர்வை வழங்கும் என நான் நம்புகின்றேன்.

நாட்டில் நிலைபெறுதகு சக்தி முன்னெடுப்புகளை மேற்கொள்வதில் ஒத்துழைப்பை நல்கிய மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சருக்கும், ஏனைய சகல அக்கறையுடைய தரப்புகளுக்கும் எனது மனதார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கீர்த்தி விக்ரமரட்ன
தலைவர்

பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை (இ.நி.வ.அ.ச.) நாட்டை சக்தி நிலைபெறுதகு தன்மைக்கு கொண்டு செல்வதற்கு வழிகாட்டும் முக்கிய தேசிய நிறுவனமாகும். இ.நி.வ.அ.ச. 2007 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. இதன் தாபிப்பு நாட்டின் சக்திப் பயணத்தில் முக்கிய ஒரு மைல்கல்லாக விளங்கியது. உலக கவனம் சக்தியை பகுத்தறிவு ரீதியில் பயன்படுத்தும் எண்ணக்கருவில் படிப்படியாக ஒருமுகப்பட்டு வருவதை புரிந்துகொண்ட நாம், நிலைபெறுதகு சக்தி முன்னெடுப்பு நிரலில் ஒட்டுமொத்த நாடும் காணப்படுவதையிட்டு எம்மால் மகிழ்ச்சி அடைய முடியும். இது வரை செயற்படுத்தப்பட்டுள்ள செயற்பாடுகள் எதிர்காலத்தில் உரிய விடயத்தில் இலங்கை ஒரு முதன்னிலை நாடாக மாறுவதற்கு உகந்த ஒரு சூழலை ஏற்படுத்துகின்றன.

மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தி மற்றும் சக்தி முகாமைத்துவம் ஆகிய இரண்டு பெரும் கருப்பொருள்களின் கீழ் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களையும், அதே நேரம் அறிவு மற்றும் திறமுறைப் பிரிவுகளிலும் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களையும் கொண்டு, குறித்த காலப் பகுதியில் அடைந்த சாதனைகள், 2017 ஆம் ஆண்டு, அந்த ஆண்டிற்கான இ.நி.வ.அ.ச. இன் செயற்பாடுகளில் சிறந்த ஒரு முன்னேற்றத்தை காண்பித்துள்ளன என்பதில் நாம் மகிழ்ச்சி அடைய முடியும். புதிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அடிப்படையிலான சக்தி உற்பத்திக் கொள்ளளவு 450 மெ.வொ. அளவை விஞ்சி வருவதால், புதிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களை பயன்படுத்தி 10% வீத மின்சாரத்தை உற்பத்தி செய்தல் என்ற அடிப்படை இலக்கை நாடு விஞ்சிவிடலாம். அதே போன்று, ஒழுங்குறுத்துகை மற்றும் வசதி சார்ந்த தலையீடுகள் போன்ற வழிகளில் செயற்படுத்தப்பட்டிருந்த சக்தி வினைத்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களினூடாகவும் அதே நேரம் கைத்தொழில், வர்த்தக, மற்றும் நியதிச்சட்ட சபைகள் மற்றும் வீட்டுத் துறை என்பவற்றிலும் செயற்படுத்தப்பட்ட அவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களினூடாவும் மின்சாரம், எரிபொருள் எண்ணெய் மற்றும் எரிவிறகுகள் என்பவற்றின் நுகர்வை அதிகளவில் குறைக்கும் குறிக்கோளை அடைய முடிந்தது. இவை தவிர, குறிப்பாக கொள்கை, திறமுறைத் திட்டம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் முதலிய விடயங்களில் எதிர்கால ஒருமுகப்பாட்டுடன் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் எதிர்காலத்தில் குறுங்கால மற்றும் நீண்டகால அடிப்படைகளில் நோக்கெல்லையும் மற்றும் கருப்பொருளும் அடங்கிய பிரிவுகளை மேம்படுத்தும் பொருட்டு உகந்த ஒரு சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும்.

நாட்டில் நிலைபெறுதகு சக்தி அபிவிருத்தி சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குவதில் ஒன்றிணைந்து செயற்பட்ட சகல அக்கறையுடைய தரப்புகளுக்கும் எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். நாடு சக்தி நிலைபெறுதகுதன்மையை நோக்கிய ஒரு பயணத்தில் நீண்ட காலம் பயணிக்க வேண்டியிருப்பதால், அக்கறையுடைய சகல தரப்புகளிடமிருந்தும் கிடைக்கும் உதவி ஒத்தாசைகள் எமது எதிர்கால வெற்றியின் அடிப்படைத் தேவைப்பாடாக விளங்கும். எனவே, சக்தி நிலைபெறுதகுதன்மையை நோக்கி நாட்டை நகரச் செய்வதற்கான எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்களில் உதவி

ஒத்தாசைகளை நல்குமாறு ஏனைய அனைத்துத் தரப்புகளிடமும் பணிவாய் கேட்டுக் கொள்கின்றேன்.

ரஞ்ஜித் சேபால
பணிப்பாளர் நாயகம்

எமது தூரநோக்கு

இலங்கையை சக்திப் பாதுகாப்புடைய ஓர் நாடாக விளங்கச் செய்தல்.

எமது செயற்பணி

சிறந்த நிலைபெறுதகு செயன்முறைகளை பின்பற்றி இயற்கை வளங்களையும், மனித வளங்களையும் மற்றும் பொருளாதார செல்வத்தையும் பாதுகாத்து, இலங்கை சக்தி பாதுகாப்பை அடைவதற்கு வழிகாட்டும் தேசிய அபிவிருத்தி பயணத்தில் ஆய்வு செய்தல், வசதிகளை ஏற்பாடு செய்து வழங்குதல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் அறிவு முகாமைத்துவத்தைப் பிரயோகித்தல் ஆகியவற்றினூடாக சுதேசிய சக்தி வளங்களை அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் சக்தி வளங்களை பாதுகாப்பதற்கும் தேசத்திற்கு அதன் முயற்சிகளில் வழிகாட்டுதல்.

இலங்கை நிலை பெறுதகு வலு அதிகார சபையின் செயலாற்றுகை

1. இ.நி.வ.அ.ச. இன் முக்கிய குறிக்கோள்களும் மற்றும் செயற்பாடுகளும்

இலங்கையின் தேசிய சக்திக் கொள்கையும் மற்றும் திறமுறைத் திட்டங்களும் தேசிய மற்றும் தனிப்பட்ட ஆகிய இரண்டு கண்ணோட்டங்களிலிருந்தும் வருகின்ற சக்திப் பாதுகாப்பில் கடுமையாக வலியுறுத்தி நிற்கின்றன. குறித்த இந்தக் கொள்கை எல்லா நேரங்களிலும் எல்லா பிரஜைகளுக்கும் நம்பத் தகுந்த, சுமக்கக் கூடிய விலையில் தூய சக்தியை கிடைக்கச் செய்வதற்கு எதிர்பார்க்கின்றது.

இலங்கை நிலை பெறுதகு வலு அதிகார சபை (இ.நி.வ.அ.ச.) நாட்டில் சகல வகையான மீளப் புதுப்பிக்கத்தகு சக்திகளின் அதிகரித்த நுகர்வு மற்றும் நிலை பெறுதகு பாவனை என்பவற்றை ஊக்குவிக்கின்ற மிக முக்கிய பிரதான அரச நிறுவனமாகும். இலங்கையின் சக்தித் துறை சுமக்கக் கூடிய விலைகளில் முழு நாட்டிற்கும் இடையறாத மின்சார விநியோகத்தை வழங்குவது தொடர்பில் குறிப்பாக தற்பொழுது பல சவால்களை எதிர்நோக்கி வருகின்றது. அனல் மின்னுற்பத்திற்காக இறக்குமதி செய்யப்படும் கனிய எண்ணெய்களில் அதிகம் நாடு தங்கியிருக்கின்ற காரணத்தால் அது பொருளாதாரத்தில் பல பாதகமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. இந்த நிலைமையைத் தவிர்த்துக் கொள்ளும் நிமித்தம் அரசாங்கம் பின்வரும் திறமுறை திட்டங்களை வகுத்தமைத்துள்ளது:

- இறக்குமதி செய்யப்படும் கனிய எண்ணெய்களுக்கு ஒரு பிரதியீடாக **2020** ஆம் ஆண்டளவில் புதிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மூலங்களைப் பயன்படுத்தி **20%** வீத க்றிட் மின்சாரத்தை உற்பத்தி செய்தல்.
- சக்திப் பாதுகாப்பு சார்ந்த நடவடிக்கைகளை செயற்படுத்துவதன் ஊடாக **2020** ஆம் ஆண்டளவில் மொத்த சக்தி நுகர்வில் **10%** வீதம் வரை குறைத்தல்.

இ.நி.வ.அ.ச. நாட்டின் சக்திப் பாதுகாப்பை உறுதிசெய்யும் அதே வேளையில் இந்த இலக்குகளை உணர்த்துவதற்கு பல திறமுறைத் திட்டங்களை செயற்படுத்தியுள்ளது.

- சகல வகை மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வகைகளினதும் பாவனையை அதிகரித்தல்
- சக்திப் பெறுமானச் சங்கிலிகள் அனைத்திலும் சக்தியின் வினைத் திறனையும் மற்றும் சக்தியின் பாதுகாப்பையும் மேம்படுத்துதல்
- நாட்டின் சக்தி முறைமையை கணிய எண்ணெய் தளத்திலிருந்து நிலையான ஒரு சக்தித் தளத்திற்கு பரிவர்த்தனை செய்வதை ஊக்குவிக்கும் நிமித்தம் அவசியமான கொள்கைகளையும் மற்றும் திறமுறைத் திட்டங்களையும் வகுத்தமைத்தல்
- நாட்டில் நிலையான சக்தி முதலீடுகளுக்கு உகந்த ஒரு சூழலை ஏற்படுத்துதல்
- புதிய நிலைபெறுதகு சக்தித் தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் அத்தகைய தொழில் நுட்பங்களை ஊக்குவித்தல்
- நிலையான வாழ்க்கை நிலையையும், வதிவிடங்களையும், அயல் நிலைமைகளையும் ஏற்றுக் கொள்ளும் வகையில் பொதுமக்களை ஊக்குவித்தல்

மொத்த மின்சார உற்பத்தியில் **10%** புதிய மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி **(**பு.மீ.பு.ச.**)** என்ற வரையறையை எம்மால் தற்பொழுது தாண்ட முடிந்துள்ளது. இந்த நிலைமை **2020** ஆம் ஆண்டளவில் பு.மீ.பு.ச. சக்தியைப் பயன்படுத்தி **20%** மின்சார உற்பத்தி இலக்கை அடையும் பயணத்தில் திருப்திகரமான ஒரு திருப்பு முனையை சுட்டிக் காட்டுகின்றது.

ஒழுங்குறுத்துகை சார்ந்த தலையீட்டு நடவடிக்கைகளிலும் மற்றும் சக்தி வினைத் திறன் வாய்ந்த சேவைகள் துறையை வலுப்படுத்துவதிலும் ஒருமுகப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள் சக்திப் பாதுகாப்புப் பிரிவில் செயற்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த நிகழ்ச்சித் திட்டங்கள், கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு **4** கருப் பொருள் பிரிவுகளில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

- மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தி - தேசிய மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி இலக்குகளை அடைவதில் நேரடியாக சம்பந்தப்படுவது இதன் குறிக்கோளாகும்.

  (விஷேட கருப் பொருள்**: REACT -** மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி நடவடிக்கைகள்**)**
- சக்திப் பாதுகாப்பு மற்றும் சக்தி முகாமைத்துவம் - தேசிய மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி இலக்குகளை அடைவதில் நேரடியாக சம்பந்தப்படுவது இதன் குறிக்கோளாகும்.

  (விஷேட கருப் பொருள்**: EnMaP -** சக்தி முகாமைத்துவத் திட்டம்**)**
- அறிவு சார் முகாமைத்துவம்- சக்தியை மதித்து உணரக் கூடிய ஒரு சமூகத்தை நோக்கி சக்தி தொடர்பான கல்வி சார் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது இதன் குறிக்கோளாகும்.

  (விஷேட கருப் பொருள்**: SEEK -** சக்தி சார்ந்த அறிவின் ஊடான நிலைபெறு தகு சக்தி**)**
- திறமுறைத் திட்டம் - நாட்டில் நீண்ட கால நிலைபெறு தகு சக்தியை தாபிப்பதற்கு உதவும் பொருட்டு கொள்கை சார்ந்த தலையீட்டு நடவடிக்கைகளை வகுத்தமைத்தல், அதே நேரம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி **(**ஆ.அ.**)**, தலையீடுகள், தொழில் நுட்பம் சார்ந்த பேச்சுவார்த்தை முதலியவற்றை மேற்கொள்ளல்.

(விஷேட கருப் பொருள்**: SAFE -** எதிர்கால சக்திற்கான நிலைபெறு தகு பிரவேசம்**)**

2. இலங்கையில் சக்திப் பாதுகாப்பின் தற்போதைய நிலையும் மற்றும் 2017 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்திய புதிய பரிகார நடவடிக்கைகளும்

சக்தி வினைத்திறன் மேம்பாடு (EnMAP இன் கீழ்)

1 <u>சக்தி முகாமைத்துவ முறைமைகளின் தாபிப்பு</u>

இ.நி.வ.அ.ச. ISO50001 எனும் சக்தி முகாமைத்துவ முறைமைகளை அறிமுகப்படுத்தி, அதனூடாக வர்த்தகம், கைத்தொழில், மற்றும் வீடு ஆகிய துறைகளில் சக்திப் பாதுகாப்புக்கு வசதியளித்து உதவுகின்றது.

- ✓ எல்லாமாக தனியார் துறையில் 205 சக்தி முகாமையாளர்களுக்கும் மற்றும் 16 சக்திக் கணக்காய்வாளர்களுக்கும் மதிப்பு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ஜனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட SP/PCMD/6/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், அரச துறையில் ஏறக்குறைய 150 சக்தி முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டன.



2 <u>நியமங்களையும் ஒழுங்குவிதிகளையும் அறிமுகப்படுத்துதல்</u>

கைத்தொழில், வீடு மற்றும் வர்த்தகம் ஆகிய துறைகளில் சக்தி வினைத் திறனை முகாமை செய்யும் பொருட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தி சரியான ஒழுங்குறுத்துகை தலையீட்டு நடபடிமுறைகளை வகுத்தமைப்பதற்கு இ.நி.வ.அ.ச. மூலம் வித்தியாசமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விபரம்	முன்னேற்றம்
CFL மின்குமிழ்கள்	CFL மின்குமிழ்களுக்கான சக்தி முத்திரையிடல் பற்றிய திருத்திய நியமங்கள் அடங்கிய ஆவணம் வெளியிடப்பட்டது. திருத்திய நியமங்கள் தொடர்பான ஒழுங்குவிதிகள் அடங்கிய ஆவணம் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.
குளிரூட்டிகள்	சக்தி முத்திரையிடல் தொடர்பான நியமங்களின் நகல் அறிக்கை தயாரிக்கப்பட்டு இலங்கை நியமங்கள் மற்றும் கட்டளைகள் நிறுவகத்திற்கு (இ.நி.க.நி.) அனுப்பி வைக்கப்பட்டது. இது விரைவில் வெளியிடப்படும்.

குளிர்சாதனப் பெட்டிகள்	ஏனைய நாடுகளிலிருந்து அதையொத்த நியமங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு புதிய ஒரு நியமங்கள் தொகுப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. முழு அளவில் சக்தி முத்திரையிடும் திட்டம் அமுல்படுத்தப்படுவதற்கு முன்னர், குறித்த குளிர்சாதனப் பெட்டிகளுக்கான ஆகக் குறைந்த சக்தி செயல் திறன்கள் (MEPS) அடங்கிய ஆவணமும் தயாரிக்கப்படும்.
LED மின்குமிழ்கள்	தன்னார்வ ரீதியான சக்தி முத்திரையிடும் திட்டம் தயாரிக்கப்பட்டு LED மின் குமிழ்களுக்காக செயற்படுத்தப்பட்டது. ஒரு கட்டாய அடிப்படையில் அந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்கான ஒழுங்குவிதிகள் அடங்கிய நகல் ஆவணம் விரைவில் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
கணனிகள்	சக்தி முத்திரையிடல் தொடர்பான நியமங்களின் நகல் அறிக்கை தயாரிக்கப்பட்டு இலங்கை நியமங்கள் மற்றும் கட்டளைகள் நிறுவகத்திற்கு (இ.நி.க.நி.) அனுப்பி வைக்கப்பட்டது. இது விரைவில் வெளியிடப்படும்.
கூரை மின்விசிறிகள்	பரிசோதனை ஆய்வுகூட உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அத்தகைய பரிசோதனை வசதிகளின் நிறுவுகைப் பணி நிகழ்ந்து வருகின்றது.

- ✓ சக்தி வினைத் திறன் வாய்ந்த கட்டிடங்கள் தொடர்பான திருத்திய செயன்முறை விதிக்கோவையை நடைமுறைப்படுத்துவதற்கு ஓர் ஒழுங்குவிதி - 2018 ஆவணம் தயாரிக்கப்பட்டது. ஒரு கட்டிட தரப்படுத்தல் முறைமை அடங்கலாக உடனடியாக செயற்படுத்தும் நிமித்தம் முழுமையான ஒரு செயற்படுத்துகைத் திட்டம் தயாரிக்கப்பட்டது.
- ✓ இலங்கையிலுள்ள நிலைபெறுதகு சக்தி வதிவிடங்கள் தொடர்பான வழிகாட்டல் ஆவணம் - 2018 அச்சிடும் நிமித்தம் மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டது.

3 <u>ஆலோசனை மற்றும் உசாதுணை சேவைகள்</u>

இ.நி.வ.அ.ச. கைத்தொழில், வர்த்தக மற்றும் அரச துறை நிறுவனங்களுக்கு அவற்றின் சக்தி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளக் கூடிய வகையில், விசாரணைகளுக்கு பதில்களை அளித்தல், வேண்டுகோளின் பேரில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல், ISO 50001 சக்திக் கணக்காய்வு விடயங்களை கவனித்தல் முதலியவற்றினூடாக உதவுகின்றது. சக்திக் கணக்காய்வு சார் செயற்பாடுகளில் வாடகை அடிப்படையில் பயன்படுத்தக் கூடிய நன்கு பராமரிக்கப்படுகின்ற ஒரு கருவிசாதன களஞ்சியம் காணப்படுகின்றது.

- ✓ ISO50001 சக்திக் கணக்காய்வுகள் எட்டு நிறுவனங்களில் நடத்தப்பட்டன.
- ✓ சக்தி சார்ந்த சேவைகளை வழங்கும் 44 கம்பனிகள் (ESCOs) சக்தி வினைத் திறன் மேம்பாட்டு (EEI) வகுதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்டன. சக்திக் கணக்காய்வு சார்ந்த சேவைகளையும் (EAS) மற்றும் தொழில் நுட்ப சேவைகளையும் வழங்கும் தரப்புகளினதும் மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட ESCO களினதும் பட்டியல் இணையத் தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.
- ✓ நடமாடும் ஒரு சக்திக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் களுத்துறை STF பயிற்சிப் பாடசாலையில் நடத்தப்பட்டது.
- ✓ விரிவான ஒரு சக்திக் கணக்காய்வு வடமேல் மாகாண ITN எந்திர மற்றும் உபகரணங்கள் அதிகார சபையில் நடத்தப்பட்டது.

- ✓ விரிவான சக்திக் கணக்காய்வு UCSC நிலையத்தில் (கொழும்புப் பல்கலைக்கழகம்) மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.
- ✓ கொழும்பில் அமைந்துள்ள பாதுகாப்பு பாடசாலையிலும், பெலவத்தை மற்றும் செவனகல கரும்புத் தொழிற்சாலைகளிலும் விரிவான சக்திக் கணக்காய்வை நடத்துவதற்காக உசாதுணை சேவை, பயிற்சி மற்றும் தொழில் நுட்ப உதவி என்பன வழங்கப்பட்டன.
- ✓ தேர்ந்தெடுக்கப்பட்ட 4 ESCOs களினால் பத்து சக்திக் கணக்காய்வுகள் மத்திய மாகாணத்திலுள்ள அரச நிறுவனங்களில் நடத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டன.
- ✓ அரச வைத்தியசாலைகளிலும் மற்றும் அரச நிறுவனங்களிலும் பதினாறு சக்திக் கணக்காய்வுகளை நடத்தும் முகமாக பொருத்தமான ESCOs களை தேர்ந்தெடுப்பதற்கான கேள்வி மனு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
- ✓ கருவி சாதனங்களை வாடகைக்கு கொடுக்கும் நாட்களின் எண்ணிக்கை 1,200.

4 <u>சாதனைகளுக்கான விருதுகள் வழங்கல்</u>

புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் அறிவை பரம்பல் செய்தல் ஆகிய குறிக்கோளுடன் 'விதுல்கா' சக்திக் கண்காட்சி நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துவதனூடாக ஊக்குவிப்பு சார்ந்த தேசிய மட்ட செயற்பாடுகளில் இ.நி.வ.அச. ஈடுபட்டு வருகின்றது. இது, சக்திப் பாதுகாப்பு விடயத்துடன் சம்பந்தப்படுகின்ற உற்பத்திகளையும் மற்றும் சேவைகளையும் ஊக்குவிக்கும் நிமித்தம் சக்தித் துறை நிறுவனங்களுக்கும், சக்தி உபகரணங்களை வழங்கும் தரப்புகளுக்கும், உற்பத்தித் தரப்புகளுக்கும், புத்தாக்குநர்களுக்கும் மற்றும் கல்விமான்களுக்கும் தனியான பிரத்தியேகமான ஒரு வாய்ப்பை அளிக்கும்.

'விதுல்கா' தேசிய சக்திக் கண்காட்சி நிகழ்ச்சித் திட்டம் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை BMICH மண்டபத்தில் நடத்தப்பட்டது. மீளப்புதுப்பிக்கத்தகு சக்தித் தொழில் நுட்பங்கள், சக்தி முகாமைத்துவம், தலையீட்டு நடவடிக்கைகள் உள்ளடங்கிய ஆறு வர்த்தக மற்றும் நிறுவன கண்காட்சிக் கொட்டகைகள் குறித்த சக்திக் கண்காட்சி நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடங்கியிருந்தன. இந்தக் கண்காட்சி நிகழ்ச்சித் திட்டம் தொழில் நுட்பங்கள், உற்பத்திகள், சேவைகள் என்பன பற்றிய தகவல்களை பொது மக்களுக்கு வழங்க உதவியது.

5 <u>துறை சார்ந்த குறித்த சக்தி முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்கள்</u>

இ.நி.வ.அ.ச. சக்தி முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களை மாகாண மட்டத்தில் தயாரித்து, நடைமுறைப் படுத்துவதற்கு உதவுகின்றது.

- ✓ தேயிலைத் தோட்டத் துறையிலுள்ள 60 தொழிற்சாலை முகாமையாளர்கள் மற்றும்

தொழிற்சாலை உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு தென் மற்றும் மத்திய மாகாணங்களில், சக்தி முகாமைத்துவம் தொடர்பான இரண்டு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டன. மதிப்பீட்டு அறிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. குறித்த நிகழ்ச்சித் திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பயிற்சி நிறுவகனத்தினால் (SLEMA) நடத்தப்பட்டது.

6 <u>பொது மக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும்</u>

- ✓ ஊடகவியலாளர்களுக்கு முதலாம் கட்ட சக்தி மற்றும் சுற்றாடல் பாடநெறி நடத்தப்பட்டு வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது. குறித்த பாடநெறியை வெற்றிகரமாக பின்பற்றி நிறைவு செய்த பதினேழு ஊடகவியலாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. குறித்த பாடநெறியின் இரண்டாம் கட்டப் பாடநெறி நிகழ்ச்சித் திட்டம் 2017 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆம் திகதி BMICH மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டது. பதினைந்து ஊடகவியலாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இந்தப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிறைவு செய்யப்படும்.
- ✓ சக்திப் பாதுகாப்பு தொடர்பான பல கட்டுரைகள் 'நவலிய' செய்திப் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டுள்ளன.
- ✓ சூரிய சக்தி தொடர்பான பல கட்டுரைகள் 'விதுசர' செய்திப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

7 <u>ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளல்</u>

இலங்கையில் சக்தி முகாமைத்துவ செயன்முறைகளின் அபிவிருத்திற்கு புதிய மற்றும் புத்தாக்க தொழில் நுட்பங்களை பிரயோகிப்பது தொடர்பான சாத்தியம் பற்றி ஆராய்வதற்கான முன்னெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- ✓ சக்தியின் செயல் திறனை சரியாக மதிப்பிடுவதில் உதவக் கூடிய வகையில் தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தின் (TRI) உதவியுடன் மேம்படுத்தப்பட்ட குழாய், ரேடியேற்றர்கள், படிமுறைப்படுத்தல் கட்டுப்பாட்டு மற்றும் பரவல் பொறிமுறை அடங்கலாக தேயிலை உலர்த்தும் தரமான ஒரு முன்மாதிரி இயந்திரம் வடிவமைக்கப்பட்டது. இது தொடர்பாக TRI உடன் கைச்சாத்திடும் முகமாக ஒரு பு.ஒ. தயாரிக்கப்பட்டுள்ளது.

8 <u>முன்னோடிக் கருத் திட்டங்களைத் தாபித்தல்</u>

சக்தியின் உச்ச பயன்பாட்டிற்கு கிடைக்கக் கூடிய மிகவும் சிறந்த முறையியலாக விளங்கும் ஒரு சக்தி மூலத்திலிருந்து சமகாலத்தில் மின்சாரத்தை உற்பத்தி செய்தல் மற்றும் பயனுள்ள விதத்தில் வெப்பமேற்றல் மற்றும் குளிராக்கல் ஆகிய நோக்கங்களின் நிமித்தம் ட்ரை-மின்னுற்பத்தி அல்லது இணைந்த குளிராக்கல் வெப்பமேற்றல் மற்றும் சக்தி (CCHP) சாதனம் சிபாரிசு செய்யப்படுகின்றது. இதனை பயன்படுத்தி 80% வீதத்திற்கும் அதிகளவு சக்தி வினைத் திறன்களை அடைய முடியும். இந்த நிலையில், இ.நி.வ.அ.ச. ஹோட்டல் கைத்தொழில், புடவை மற்றும் ஆடைக் கைத்தொழில் மற்றும் கைத்தொழில் வலயங்கள் முதலியன போன்ற துறைகளுக்கு இந்த ட்ரை-மின்னுற்பத்தி சாதனத்தை அறிமுகப்படுத்தும் சாத்தியம் பற்றி ஆராய்ந்து வருகின்றது. பிரேரணைகளை தேர்ந்தெடுப்பதற்கான இறுதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

9 <u>இயக்கச் செயற்பாட்டுக் கேள்வி சார் முகாமைத்துவ (ODSM) நிகழ்ச்சித் திட்டம்</u>

மின்சக்தித் துறையில் கவனம் செலுத்தி அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு, ஒரு சில முக்கிய பிரிவுகளில் கவனம் செலுத்தினால், ஐந்து வருட காலத்திற்கு 135 பில்லியன் இ.ரூ. முதலீட்டின் அடிப்படையில், 2020 ஆம் ஆண்டளவில் 1895 ஜி.வொ.ம. (28 LKRB அளவு) ஆண்டு மின்சாரத்தை சேமிக்க முடியும் என சுட்டிக் காட்டுகின்றது. இலங்கை மின்சார சபையின் 2014-2039 ஆண்டுகளுக்கான நீண்ட கால மின்னுற்பத்தித் திட்டத்தின் கேள்வி சார் முகாமைத்துவ (DSM) விடயத்திற்கு அடிப்படையை வழங்கிய இந்த எண்ணக்கரு செயற்படுத்துகைக்கான ஆகக் குறைந்த ஆகுசெலவு வாய்ந்த தெரிவாக காணப்பட்டது. இந்த எண்ணக் கருவின் பிரகாரம், வர்த்தகம், வதிவிடம் மற்றும் கைத்தொழில் ஆகிய துறைகளில் ஒன்பது முக்கியமான பிரிவுகளை செயற்படுத்தும் முகமாக, ஒரு தேசிய நெறிப்படுத்தல் குழுவின் வழிகாட்டலில், சக்திக் கேள்வி சார் முகாமைத்துவத்திற்கான ஜனாதிபதி சிறப்பு செயலணி இ.நி.வ.அ.ச. இன் கீழ் தாபிக்கப்பட்டது. அதன் கீழுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் சிறப்புச் செயலணியினதும் மற்றும் ஒரு நெறிப்படுத்தல் குழுவினதும் வழிகாட்டலில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

முக்கிய பிரிவு	மேற்கொள்ளப்பட்ட பணிகள்
சக்தி வினைத் திறன் வாய்ந்த குளிரூட்டிகள்	சக்தி வினைத் திறன் பாவனை வாய்ந்த குளிரூட்டல் சாதனம் தொடர்பான ஒரு சுற்றறிக்கை மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சின் ஊடாக வெளியிடப்பட்டது. அரச துறையிலுள்ள சக்தி முகாமைத்துவ உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிமித்தம் இரண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் (நாடளாவிய ரீதியில்) நடத்தப்பட்டன. அத்துடன் மேல் மாகாணத்திலுள்ள சக்தி முகாமைத்துவ உத்தியோகத்தர்களுக்கும் அத்தகைய விழிப்புணர் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.
சக்தி வினைத் திறன் வாய்ந்த குளிர்சாதனப் பெட்டிகள்	இலங்கையின் சந்தையிலிருந்து கட்டம் கட்டமாக சக்தி வினைத் திறனற்ற குளிர்சாதனப் பெட்டிகளை ஒழிப்பது தொடர்பான ஒரு நகல் ஒழுங்குவிதி ஆவணம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அது நிகழ்ச்சித் திட்டத்தினது அக்கறையுடைய தரப்புகளினால் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது. சக்தி வினைத் திறனற்ற குளிர்சாதனப் பெட்டிகளுக்கு பதிலாக சக்தி வினைத் திறன் வாய்ந்த குளிர்சாதனப் பெட்டிகளை பிரதியிடுவதற்கான ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.
சக்தி வினைத் திறன் வாய்ந்த அதி குளிர்சாதனப் பெட்டிகள்	ESCOs களுக்கான 2017 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. அதி குளிர்சாதனப் பெட்டிகளின் தரவுகள் சேகரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. டெக்ஷோல் (ப்ரைவட்) லிமிற்றட் மற்றும் CBL ஆகிய நிறுவனங்களின் பொறியியலாளர்களுடன் குறித்த நிகழ்ச்சித் திட்டத்திற்கான ஒரு திட்டத்தைத் தயரிக்கும் வகையில் அவர்களின் உள்ளீடுகளை பெற்றுக் கொள்ளும் நிமித்தம் கலந்துரையாடப்பட்டது.
சக்தித் வினைத் திறன் வாய்ந்த மோட்டார் இயந்திரங்கள்	இந்த நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு லெகோ நிறுவன பிராந்தியத்திலிருந்து ஒரு சில கைத்தொழில்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. 50 கைத்தொழில்கள் அடங்கிய ஒரு கொத்தணியில் நடத்தப்படுவதற்காக மதிப்பாய்வு திட்டமிடப்பட்டு வருகின்றது.
மின்னி எரியும் மின் குமிழ்களை ஒழித்தல்	'சக்தி' என்றழைக்கப்படும் LED மின் குமிழ்கள் பகிர்ந்தளிப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் சராசரியாக மாதாந்தம் 90 கி.வொ.ம. அளவு சக்திக்கு குறைந்த மின்சாரத்தை நுகர்கின்ற வீட்டு மின் சக்தி வாடிக்கையாளர்கள் இந்தத்

			திட்டத்தினது இலக்குக் குழுவாகும். இ.மி.ச. , லெகோ ஆகியவற்றின் பிரதிநிதிகளினூடாக, தகுதியுடைய மின் சக்தி நுகர்வோருக்கு 10 மில்லியன் LED மின் குமிழ்களை பகிர்ந்தளிக்க உத்தேசிக்கப்படுகின்றது. மின் குமிழ்களின் செலவுகள் வட்டியின்றி 24 மாத தவணைக் கட்டணங்களில் மீளறவிடப்படும். LED மின் குமிழ்களை விநியோகிப்பதற்கு பொருத்தமான ஒரு விநியோக தரப்பை போட்டிக் கேள்வி நடைமுறையினூடாக தேர்ந்தெடுக்கும் கரும விடயம் நிறைவடைந்துள்ளது. கண்காணித்தல். சேவைக் கணிப்பீடுகள், LED மின் குமிழ்களை மீளிடத் தவறுதல் மற்றும் பிற்பட்டகால மதிப்பீடு முதலிய அம்சங்கள் நிமித்தம், பங்குபற்றிய கணக்குக் காட்டுநர்கள் விபரம், திருப்பி ஒப்படைக்கப்பட்ட மின்னி எரியும் மின் குமிழ்கள் விபரம், மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட LED மின் குமிழ்கள் விபரம் முதலிய விபரங்கள் சேகரிக்கப்படவுள்ளன. கையால் பிடித்தெடுக்கக் கூடிய உபகரணங்களுக்கும் மற்றும் ஆவணப் படுத்தலுக்கும் தேவையான அன்ட்ரொயிட் அப் மற்றும் சம்பந்தப்பட்ட மென்பாகம் என்பன அடங்கலாக மின் குமிழ்களை பகிர்ந்தளிக்கும் திட்டம் முழுமையாக தயாரிக்கப்பட்டு நிறைவடைந்துள்ளது.
		பசுமைக் கட்டிடம்	சக்தி வினைத் திறன் வாய்ந்த கட்டிடங்கள் தொடர்பான திருத்திய செயன்முறை விதிக்கோவை 2018 ஆவணத்திற்கு இணங்க ஒரு கட்டிட தரப்படுத்தல் முறைமை அடங்கலாக உடனடியாக நடைமுறைப்படுத்த தேவையான முழுமையான அமுலாக்கல் திட்டம் தயாரிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட அரச கட்டிடங்களில் 350 மில்லியன் இ.ரூ. நிதியை செலவிட்டு, கூரையின் மேல் வைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய சூரிய சக்தி முறைமைகளை நிறுவுவதற்கான ஒரு உத்தேச திட்டம் தயாரிக்கப்பட்டது. ஏழு பௌதீக கொத்தணிகளிலும் மற்றும் நான்கு சேவை வழங்கும் தரப்புகளிலும் சம்பந்தப்படுகின்ற பெறுகை விடயம் நிறைவு செய்யப்பட்டது.
		ஸ்மார்ட் இல்லம்	இலங்கையிலுள்ள நிலைபெறுதகு சக்தி வதிவிடங்கள் தொடர்பான வழிகாட்டல் ஆவணம் - 2018 அச்சிடும் நிமித்தம் மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டது. 1500 மில்லியன் இ.ரூ. நிதியை பயன்படுத்தி, கூரையின் மீது நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய ‘சூரியபள சங்கிராமய’ எனும் நிகழ்ச்சித் திட்டத்தை ஊக்குவிக்கும் முகமாக வட்டி

	அடிப்படையிலான ஒரு கொள்வனவுத் திட்டம் செயற்படுத்தப்பட்டது. 2017 ஆம் ஆண்டு இறுதி அளவில் பன்னிரெண்டு வங்கிகள் இந்தத் திட்டத்திற்கு காத்திரமாக பங்களித்துள்ளன.
ஏனையவை (1) (பாடசாலை சித்திரக் கலைப் போட்டி)	✓ மாகாண விஞ்ஞான/சித்திரக்கலை கல்வி பணிப்பாளர்களுக்கான விழிப்புணர்வு/தகவல் சேகரிப்பு நிகழ்ச்சித் திட்டம் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 ஆம் திகதி நடத்தப்பட்டது. ✓ போட்டியும் அதன் மதிப்பீடும் நிறைவு செய்யப்பட்டுள்ள அதே வேளையில் வெற்றியாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். ✓ கண்காட்சி நிகழ்ச்சித் திட்டமும் மற்றும் விருது வழங்கும் வைபவ விழாவும் 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதியில் நடத்தப்பட்டன.
ஏனையவை (2) (பல்கலைக்கழகங்களுக்கு தேவையான சக்திக் கேள்வி சார் முகாமைத்துவம் தொடர்பான பாடவிதானத்தைத் தயாரித்தல்)	✓ பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கான நிகழ்ச்சித் திட்டம் 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 08 ஆம் திகதி நடத்தப்பட்டது.

ஒன்பது சக்தி வினைத்திறன் தொழில் நுட்பப் பிரிவுகளின் கீழ் குறித்த நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதனூடாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2020 ஆம் ஆண்டளவில் சக்தி சேமிப்பு இலக்குகளை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்த நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வருமாறு:

	தொழில் நுட்பம்	**2020 ஆம் ஆண்டளவில் ஆண்டு சக்தி சேமிப்பு (ஜி.வொ.ம.)**
1	சக்தி வினைத் திறன் வாய்ந்த குளிரூட்டிகள்	84
2	சக்தி வினைத் திறன் வாய்ந்த ஒளியேற்றல்	250
3	சக்தி வினைத் திறன் வாய்ந்த குளிர்சாதனப் பெட்டிகள்	161
4	சக்தி வினைத் திறன் வாய்ந்த அதி குளிர்சாதனப் பெட்டிகள்	41
5	சக்தி வினைத் திறன் வாய்ந்த மோட்டார் இயந்திரங்கள்	[illegible]
6	மின்னி எரியும் மின் குமிழ்களை பாவனையிலிருந்து ஒழித்தல்	139
7	சக்தி வினைத் திறன் வாய்ந்த மின் விசிறிகள்	298
8	பசுமைக் கட்டிடங்கள்	43
9	ஸ்மார்ட் இல்லங்கள்	139
	மொத்தம்	**1,243**

	நிலையான சக்திக் கொள்கைகளையும் மற்றும் திறமுறைத் திட்டங்களையும் தயாரித்தல் (SAFE இன் கீழ்)
1	<u>சக்தித் தகவல்கள் பகுப்பாய்வு</u> ✓ 2016 ஆம் ஆண்டிற்கான இலங்கை சக்திச் சமநிலை ஆவணம் தொகுக்கப்பட்டுள்ளது. அது அச்சிடப்பட்டு வருகின்றது. 2016 ஆம் ஆண்டிற்கான தரவுகளைக் கொண்டு இணையத் தளம் இற்றைப்படுத்தப்பட்டது. ✓ சக்திச் சமநிலை இணையத் தளம் இற்றைப்படுத்தப்பட்டது. ✓ இறுதிப் பாவனையாளர் சக்தி நுகர்வு மதிப்பீடுகள் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் பற்றிய நாடலாவிய மதிப்பாய்வுக்கான மதிப்பாய்வுத் திட்டம் புள்ளி விபரங்கள் திணைக்களத்தின் உதவியுடன் வகுத்தமைக்கப்பட்டது. அறிக்கை, தொகுப்புக் கட்டத்திலுள்ளது.
2	<u>நிலைபெறுதகு சக்தித் தொழில் நுட்பக் காப்பகங்கள்</u> ✓ பேராதெனிய பல்கலைக்கழ பொறியியல் பீடத்தின் மின்சார மற்றும் இலத்திரனியல் பிரிவின் கூட்டொத்துழைப்பில், பாரிய அளவான சூரிய சக்தி அபிவிருத்தியில் தொழில் நுட்பம் சார்ந்த தலையீட்டு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய இரண்டு உயர் ஆராய்ச்சிக் கருத் திட்டங்களின் ஒரு வருடம் வெற்றிகரமாக நிறைவடைந்தது. - இலங்கையில் பாரிய அளவான PV முன்னேற்றம் அடங்கிய சக்தி விநியோக பாதுகாப்பு - ஒரு மைக்ரோ க்றிட்டினூடாக PV இன் சக்தி வினைத் திறன் பயன்பாடு
3	<u>தேசிய சக்தி மாநாடு</u> ✓ இந்தத் தேசிய சக்தி மாநாடு 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19, 20 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது. சக்தி வினைத் திறன் மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி ஆகிய இரண்டு கருப்பொருள்களின் கீழ் 25 ஆராய்ச்சிக் கருத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. இந்தப் பிரிவுகளில் தேசிய நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஆ.அ. உள்ளீடுகளை பெற்றுக் கொள்வதற்கான முறையியல்கள் பற்றியும் கொள்கை ஆக்குநர்களினதும், ஆராய்ச்சியாளர்களினதும், கைத்தொழிலாளர்களினதும் கல்விமான்களினதும் பங்குபற்றலில் கலந்துரையாடப்பட்டது. உயிரணுத்திணிவுச் சக்தி பற்றிய 'தேசிய புத்தாக்க' ஆயமும் உயிரணுத் திணிவுச் சக்தித் துறையுடன் தொடர்புடைய நவீன புத்தாக்கங்களை மதிப்பீடு செய்தது.

	அறிவு முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் (SEEK திட்டத்தின் கீழ்)

1 சக்தி தொடர்பான ஒரு கல்வி நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரித்தல்

- ✓ பாடசாலை சக்திக் குழுக்கள் நிகழ்ச்சித் திட்டம்தான் சக்தி தொடர்பான கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய நிகழ்ச்சித் திட்டமாகும். நாட்டில் விருப்பமான ஒவ்வொரு பாடசாலையையும் உள்ளடக்கி மொத்தம் 3,000 சக்திக் குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன.
- ✓ **2016** ஆம் ஆண்டிற்கான பாடசாலை சக்திக் குழுக்களுக்கு விருதுகள் வழங்கும் வைபவம் 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 28 ஆம் திகதி அதிதிகள் பலரின் முன்னிலையில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.
- ✓ சக்தி சார்ந்த தலையீட்டு நடவடிக்கைகள், கண்காட்சி நிகழ்ச்சிகள், கருத் திட்டங்கள், ஆராய்ச்சிகள், மதிப்பாய்வுகள், டிஜிட்டல் சார் சுவரொட்டிகள், குறுங்-படச்சுருள்கள், நாடகம், விவாதங்கள் என்பன தொடர்பான புத்தாக்க அணுகு முறைகளின் பாவனையை ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் பிரத்தியேகமாக பங்களித்த மாணவர்களுக்கு பணப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.
- ✓ ஒன்பது மாகாணங்களை உள்ளடக்கிய 88 அரச பாடசாலைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 550 மாணவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. மேலும், ஒன்பது மாகாணங்களிலுள்ள சக்தி பற்றிய பாடத்தை சிறப்பாக கற்பித்திருந்த ஆசிரியர் ஆலோசகர்களுக்கும் அதே நேரம் கல்வி உதவிப் பணிப்பாளர்களுக்கும்/கல்விப் பிரதிப் பணிப்பாளர்களுக்கும் SEC நிகழ்ச்சித் திட்டத்திற்கு அவர்கள் காட்டிய அர்ப்பணிப்பை மதிக்கும் முகமாக அவர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

பாடசாலை சக்திக் குழுக்களுக்கான விருதுகள் வழங்கல் - 2016

2 தொடர்பாடல் நிகழ்ச்சித் திட்டம்

- ✓ BMICH மண்டபத்தில் ஜனாதிபதி செயலகம் நடத்திய 'திரசார லங்கா' எனும் கண்காட்சி நிகழ்ச்சித் திட்டத்திலும் மற்றும் திருகோணமலையில் தேசிய இளைஞர் மன்றம் நடத்திய கண்காட்சி நிகழ்ச்சித் திட்டத்திலும் அதிகார சபை பங்குபற்றியது.

- ✓ **07** பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்களிலும் அதிகார சபை பங்குபற்றியது.
- ✓ புதிய தரவுகள் உள்ளடங்கிய 'தெதுலன மக' எனும் 'அடு விதுலி பிலக்கட்ட மக' என்ற நிகழ்ச்சித் திட்டம் மீளவரையப்பட்டது.
- ✓ சக்தி ஊடகவியலாளர் விருதுகளுக்கான ஊடக வழிகாட்டல் ஆவணம் ஏற்கெனவே களணிப் பல்கலைக்கழகத்தின் வெகுஜன தொடர்பாடல் பிரிவினால் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கு ஊடக அமைச்சினது செயலாளரின் அங்கீகாரம் கிடைக்கவுள்ளது.
- ✓ அதிகார சபை கேகாலை நகரில் சுற்றாடல் தின நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்பாடு செய்து அதில் பங்குபற்றியது.

BMICH மண்டபத்தில் நடைபெற்ற 'திரசார லங்கா கண்காட்சி' - பங்குபற்றுநர்களுக்கான செயற்பாடுகள்

3. 2017 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கருத் திட்டங்கள்

	மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தி (REACT இன் கீழ்)
1	<u>வளங்கள் ஒதுக்கீடும் மற்றும் அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகளும்</u> வர்த்தக அளவிலான கருத் திட்டங்களுக்கு சுதேசிய RE இன் அபிவிருத்தியை துரிதப்படுத்தும் நிமித்தம் ஒன்-க்றிட் மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கருத் திட்டங்களுக்கு, இ.நி.வ.அ.ச. சக்தி அனுமதிப் பத்திரங்களையும் (EP) மற்றும் தற்காலிக அங்கீகாரங்களையும் வழங்குகின்றது. 2017 ஆம் ஆண்டு வரை உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்ட மொத்த சக்திக் கொள்திறன் கருத் திட்டங்கள் பற்றிய சுருக்க விபரம் கீழ்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மூலம்	கருத் திட்டங்களின் எண்ணிக்கை	நிலையான சக்தி உற்பத்திக் கொள்திறன்கள்
நீர்	186	362.61 மெ.வொ.
காற்று	15	128.45 மெ.வொ.
உயிரணுத் திணிவு	10	32.6 மெ.வொ.
சூரியவொளி	8	51.36 மெ.வொ.

2	<u>தொழில் நுட்ப அபிவிருத்தியும் மற்றும் ஆராய்ச்சியும்</u> ✓ பலர்கொட, சீதா எலிய, கலமெட்டிய, முல்லிபுரம், சிலாவத்துறை. நடுக்குடா, பூனாகரி மற்றும் கொக்கிலாய் கடற்கரை ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள காற்று சக்திக் கோபுரங்களிலிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. ✓ சக்தி வளங்களை வரைபடமாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சிதா எலிய, புத்தளம், சூரியகந்தை, யாழ்ப்பாணம் மற்றும் பூனாகரி காற்று சக்திக் கோபுரங்களுக்கான மேலெந்த வாரியான சக்தி வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன. ✓ காற்று சக்திக் கோபுரங்களின் பராமரிப்பு ஒப்பந்தத்திற்கான பெறுகை நடபடிமுறை நிகழ்ந்து வருகின்றது.
3	<u>சூரியபள சங்கிராமய</u> ✓ 2017 ஆம் ஆண்டு இறுதியளவில் சூரிய சக்தி மின்சார சேவைகளை வழங்குகின்ற 296 தரப்புகள் இ.நி.வ.அ.ச. இல் பதிவு செய்யப்பட்டன. ✓ ஏற்கெனவேயிருக்கின்ற மின்சார முறைமைக்கு 270 கி.வொ. மின்சாரத்தை சேர்த்து 'ரிவி அருண' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 135 சூரிய சக்தி முறைமைகள் சமய வழிபாட்டு ஸ்தலங்களில் நிறுவப்பட்டன. ✓ SLSI இன் கூட்டொத்துழைப்பில் சூரிய சக்தி PV தொடர்பான பதினேழு நியமங்கள் பிரசுரிக்கப்பட்டன. சேவை வழங்கும் தரப்புகளுக்கு மூன்று தொழில் நுட்ப வேலையரங்குகளும் மற்றும் ஒரு வேலையரங்கும் நடத்தப்பட்டன.

- ✓ இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 100 மெ.வொ. சக்தி மைல்கற்களின் சாதனை நிகழ்வு மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்ளின் மேன்மையான பங்குபற்றலில் கொண்டாடப்பட்டது

4 <u>நன்கொடை நிதியிடப்பட்ட கருத்திட்டங்கள்</u>

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் (ஆ.அ.வ.) நிதியிடப்பட்ட இரண்டு பெரும் RE அபிவிருத்திக் கருத் திட்டங்கள் இ.நி.வ.அ.ச. மூலம் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அத்தகைய கருத் திட்டங்கள் தற்பொழுது நிகழ்ந்து வருகின்றன. இந்த இரண்டு கருத் திட்டங்களும் பின்வருமாறு:

1. வீட்டுக் கூரையில் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய சூரிய மின்சக்தி உற்பத்திக் கருத் திட்டம்
2. தோட்டத் துறை நுண் நீர்வலு புனரமைப்பு மற்றும் மீள்சக்தியூட்டல் கருத் திட்டம்

கூரையின் மீது நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் கருத் திட்டம்

இலங்கையில் பொட்டோவொல்டிக் அடிப்படையிலான மின்சார உற்பத்தியை வலுப்படுத்தும் மற்றும் பிரபல்லியப்படுத்தும் நோக்கில் இ.நி.வ.அ.ச. அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் சூரிய சக்தி உற்பத்தி PV முன்னோடிக் கருத் திட்டங்களை செயற்படுத்தி

வருகின்றது. தனியார் துறைப் பிரிவு விடயம் முதன்னிலை வகிக்கும் தொழில் நுட்பப் பல்கலைக்கழகங்களின் பொறியியல் பீடங்களில் அடிப்படை ரீதியாக ஒருமுகப்படுகின்றது. பின்வருவன இந்தக் கருத் திட்டத்தின் கீழ் நிறைவு செய்யப்பட்ட குறித்த செயற்பாடுகளை சுட்டிக் காட்டுகின்றன.

- ✓ தேசிய க்றிட் மின்சார முறைமைக்கு 200 kwp மின்சாரத்தை இணைக்கக் கூடிய வகையில் பேராதெனிய பல்கலைக்கழகம், மொரட்டுவப் பல்கலைக்கழகம், ருஹுணு பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களில் கூரையில் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய நான்கு சூரிய சக்தி PV முறைமைகள் நிறுவப்பட்டன.
- ✓ கூரையில் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய 22 சூரிய சக்தி முறைமகள் தனியார் துறை நிறுவனங்களில் நிறுவப்பட்டன. இவற்றிலிருந்து தேசிய க்றிட் மின்சார முறைமைக்கு 1800 kwp மின்சாரம் சேருகின்றது.

மின்சார உதவி, மின்சார விநியோக நம்பத்தகுதன்மை மேம்பாட்டுக் கருத் திட்டம்

இந்தக் கருத் திட்டம், அடிப்படை ரீதியில் வட மாகாணத்தின் நைனாதீவு, அனலைதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய பகுதிகளில் வசிக்கும் குடும்பங்களின் ஜீவனோபாயங்களை மேம்படுத்துவதில் ஒருமுகப்படுகின்றது.

'இலங்கையில் சக்தி உற்பத்தி மற்றும் இறுதிப் பாவனையாளர் பிரிவு அம்சங்களில் நிலைபெறுதகு உயிரணுத் திணிவுச் சக்தி உற்பத்தியையும் மற்றும் நவீன உயிரியல் சக்தித் தொழில் நுட்பங்களையும் ஊக்குவித்தலும் மற்றும் பொருத்தமான தணிப்பு நடவடிக்கை' என்ற தலைப்பில் UNDP/GEF/FAO ஆகியவற்றின் மூலம் நிதியிடப்பட்ட கருத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தக் கருத் திட்டத்திற்கான ஒரு செயற்படுத்தும் பங்காளித்துவ தரப்பாக இ.நி.வ.அ.ச. தொழிற்படுகின்றது. பின்வரும் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டிருந்தன.

'நிலைபெறுதகு உயிரணுத் திணிவுச் சக்தி உற்பத்தியையும் மற்றும் நவீன உயிரியல் சக்தித் தொழில் நுட்பங்களையும் ஊக்குவித்தல்'

- ✓ இந்தக் கருத் திட்டத்தின் கீழ், ஹோமாகம பிரதேசத்தில் ஒரு எரிவிறகு களஞ்சியத்தைத் தாபிக்கும் கரும பணி 2017 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது. மொனராகல் மற்றும் குருனாகல் ஆகிய பகுதிகளில் மேலும் இரண்டு அத்தகைய எரிவிறகு முனையங்களை தாபிப்பதற்கான பணிகளும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. பாரிய அளவான கைத்தொழில்களிலும் மற்றும் SME தொழில் முயற்சிகளிலும் 24 உயிரணுத் திணிவுச் சக்திக் கருத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டன.
- ✓ ஆரம்ப மட்டத்தில் எரிவிறகு தாவரங்கள் வளர்க்கும் தரப்புகளின் நன்மைகளை கருத்திற் கொண்டு அத்தகைய தாவரங்கள் வளர்ப்பு தொடர்பான ஒரு கைந்நூல் வெளியிடப்பட்டது.
- ✓ 600 ஹெக்டேயர் காணியில், தெங்கு பயிர்ச் செய்கை சபையுடன் இணைந்து எரிவிறகு தாவரங்களை வளர்ப்பதற்கான ஆரம்ப செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- ✓ தேயிலைத் தோட்டத் துறைத் தொழிற்சாலை உத்தியோகத்தர்களுக்கு உயிரணுத் திணிவுச் சக்தி பற்றிய முழுமையான ஒரு 3-நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

நடத்தப்பட்டது.

கருத் திட்டத்திற்கான ‘**இலங்கையில் சக்தி உற்பத்தி மற்றும் இறுதிப் பாவனையாளர் துறைகளில் தேசிய ரீதியில் பொருத்தமான தணிப்பு செயல்நடவடிக்கை (NAMA)**’

அதி சக்தி வினைத்திறன் மோட்டார் முன்னோடிக் கருத்திட்டங்கள், சூரிய சக்தி PV நெட்-மீற்றரின் மற்றும் உயிரணுத் திணிவுச் சக்தி ஆகியவற்றின் முழு அளவிலான செயற்பாடுகள் இதன் கீழ் செயற்படுத்தப் பட்டன.

சக்தித் துறைக்கான ஒரு MAC வளையி தயாரிக்கப்பட்டது. அந்த வளையி தொடர்பான விபரங்கள் வேலையரங்குகளினூடாக அக்கறையுடைய தரப்புகளுக்கு பரம்பல் செய்யப்பட்டன. சக்தித் துறை பற்றிய NAMA தலையீட்டு நடவடிக்கைகளில் பல தகவு திறன்கள் தொடர்பான பகுப்பாய்வும் மற்றும் தடைகள் தொடர்பான பகுப்பாய்வும் பற்றிய ஒரு வேலையரங்கு நடத்தப்பட்டது. 40 உயிரணுத் திணிவுச் சக்தி உள்வாங்கி சாதனங்கள் நிறுவப்பட்டன. தேயிலைத் தொழிற்சாலைகளில் VFDs களை நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது. உயிரணுத் திணிவுச் சக்தி உள்வாங்கி சாதனங்கள் நிறுவுகையில் தரக் கட்டுப்பாடு பற்றிய ஐந்து வேலையரங்குகள் மாகாண சபைகளில் நடத்தப்பட்டன.

பயனுள்ள சக்திப் பாவனையை ஊக்குவிப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல், மின்சாரத்தைப் பாவிக்கக் கூடிய புதிய தொழில் முயற்சிகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் பெண்களின் வாழ்க்கைப் பாணியை மேம்படுத்துதல் என்பன இந்தக் கருத் திட்டத்தின் குறிக்கோள்களாகும். இந்தக் கருத் திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்தும் நிமித்தம் உசாதுணைத் தாபனம் தேர்ந்தெடுக்கப்படும்.

5 <u>சக்திப் பேட்டை அபிவிருத்தி</u>

புவியியல் நிலைமைகளின் காரணமாக, இலங்கையில் பல அமைப்புகளிலான மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்கள் காணப்படுகின்றன. சூரிய சக்தி மற்றும் காற்று சக்தி என்பன இவற்றுக்கு இடையில் காணப்படும் அத்தகைய சக்தி வளங்களாகும். இலங்கை புவி

மத்திய கோட்டில் அமைந்திருப்பதால், அதற்கு வருடந்தம் சூரிய ஒளி கிடைக்கின்றது. அதே போன்று, உலர் வலய வெப்பநிலை காணப்படுவதாலும் மற்றும் இலங்கை இந்து சமுத்திரத்தில் அமைந்திருப்பதாலும் அதற்கென்றே பிரத்தியேகமான காற்று வளங்களும் அதிகமாக இருக்கின்றன. இந்த அமைப்பு சார்ந்த நிலைகள் நாட்டிற்கு அதிகளவான மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களை பெற்றுத் தருகின்றன. சூரிய சக்தி வள வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு கடந்த காலங்களில் வெளியிடப்பட்டுள்ளன. காற்று வளங்கள் வரைபடம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

காற்று சக்தி வளத்தைப் பொறுத்த வரையில், இ.நி.வ.அ.ச. நடத்திய சூரிய சக்தி சாத்தியம் தொடர்பான அண்மை கால ஆய்வு மன்னார், அம்பாறை, மொனராகல், அம்பாந்தோட்டை, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களிலுள்ள 11 ஸ்தலங்களில் மொத்தம் 1,100 மெ.வொ. சாத்தியம் காணப்படுவதாக இனங்கண்டுள்ளது. மேலும், 2003 ஆம் ஆண்டில் தேசிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி ஆய்வு கூடத்தினால் (NREL) தொகுக்கப்பட்ட காற்று சக்தி வள தேசப்படங்கள் தொடர்பான ஆவணத்தின் மூலமாக கற்பிட்டிக் குடா வடக்கு பகுதியிலிருந்து மன்னார் தீவுகள், யாழ் குடா நாடு வரையான வடமேல் கடலோரப் பகுதிகளிலும், நாட்டின் மத்திய மாகாணத்தின் உட்புறப் பகுதியாகிய மத்திய மலைநாட்டுப் பகுதியில் அதிகளவிலும், அதே நேரம் சபரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் பாகங்களிலும் என மூன்று முக்கிய பிரதான பிராந்தியங்களில் சிறந்த காற்று வளங்கள் காணப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. மிகச் சிறந்த காற்று வளங்கள் சாத்தியமுடைய ஏறக்குறைய 5,000 கி.மீ.^{2} காற்று சக்தி வளப் பிரதேசங்கள் இலங்கையில் காணப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்த காற்று வளப் பிரதேசங்களில் ஏறக்கறைய 4,100 கி.மீ.^{2} நிலப் பரப்புகள் தரைப் பகுதியில் அமைந்துள்ளன. காற்று வள நிலங்கள் இலங்கையின் மொத்த நிலப் பரப்பில் (65,600 கி.மீ.^{2}) ஏறக்குறைய 6% வீதத்தை பிரதிபலிக்கின்றது. கி.மீ.^{2} பரப்பளவுக்கு 5 மெ.வொ. என்ற ஒரு பாரம்பரிய எடுகோளை பிரயோகித்து, இந்தக் காற்று வள நிலப் பகுதி 20,000 மெ.வொ. நிலையான சாத்தியமான சக்திக் கொள்திறனுக்கும் அதிகமான கொள்திறனுக்கு உதவக்கூடும். இது வரை நிறுவப்பட்ட நிலையான மொத்த சக்திக் கொள்திறன் 128 மெ.வொ. ஆகும். மற்றைய 101 மெ.வொ. சக்தி உற்பத்திப் பொறித் தொகுதிகள் நிர்மாண கட்டத்திலுள்ளன. பூனாகரி இனங்காணப்பட்ட மற்றுமொரு ஸ்தலமாகும். ஆகையால், இங்கு 100 மெ.வொ. அளவுக்கும் அதிகமான சக்தி உற்பத்தி சாத்தியம் காணப்படுகின்றது.

அரச மற்றும் தனியார் துறை சக்தி உற்பத்தித் தரப்புகுளுக்கு நன்மைகளை பெற்றுத் தரக் கூடிய திட்டமிடப் பட்ட காற்று மற்றும் சூரிய சக்தி அபிவிருத்திக் குறிக்கோள்கள் அடங்கிய 'சக்திப் பேட்டைகள்' எண்ணக்கரு உருவாக்கம் முதல் முதலில் 2009 ஆம் ஆண்டு இ.நி.வ.அ.ச. மூலம் முன்மொழியப்பட்டது. இந்த நிலையில், இ.நி.வ.அ.ச. வள மதிப்பீடுகள், நிலங்கள் சுவீகரித்தல், சுற்றாடல் மற்றும் ஏனைய அங்கீகாரங்களை பெறல், மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணித்தல் முதலிய விடயங்களை மேற்கொள்ளும். இறுதியாக, பிரகடனப்படுத்தப்பட்ட பகுதியில், முதலீட்டுத் தரப்புகள் அவற்றின் மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளை நிர்மாணிக்கும் வகையில் போட்டிக் கேள்வி நடைமுறையினூடாக முதலீட்டுத் தரப்புகளை தேர்ந்தெடுக்கும்.

	பூனகரி காற்று சூரிய சக்தி சக்திப் பேட்டை நாட்டில் முதல் பாரியளவான சக்திப் பேட்டையாக விளங்கும் பூனகரி காற்று சூரிய சக்திப் பேட்டையின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. ஒரு கருத் திட்ட நெறிப்படுத்தல் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த நெறிப்படுத்தல் குழுவின் முதலாவது கூட்டம் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி நடத்தப்பட்டது. பொருத்தமான நிலஅளவை பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பின்வரும் நிலப் பகுதிகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றன. 1) பூனாகரி பகுதியில் கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரை ஓரமாக 200 மீற்றர் விசாலமான கடலோரப் பிரதேசம். 2) 2 x 100 மெ.வொ. உத்தேச சூரிய சக்தி மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளுக்கு தேவையான நிலப் பரப்பு. கருத் திட்டத்தின் சுற்றாடல் தாக்க மதிப்பீடு (சு.தா.ம.) தொடர்பான பேச்சுவார்த்தைகள் மத்திய சுற்றாடல் அதிகார சபையுடனும் கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்துடனும் இடம்பெற்று வருகின்றன. இந்தப் பேச்சுவார்த்தைகள் நிறைவு பெற்ற பின்னர் சு.தா.ம. தொடர்பான நியதிக் குறிப்புகள் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வெளியிடப்படும்.

4. எதிர்காலத்தில் செயற்படுத்தப்படவுள்ள புதிய பரிகார நடவடிக்கைகள்

இலங்கையின் நகல் தேசிய சக்திக் கொள்கை மற்றும் திறமுறைகள், மற்றும் ஏனைய கொள்கை சார்ந்த தலையீட்டு நடவடிக்கைகள் என்பவற்றுக்கு இணங்க, மின்சாரம் கணிய எண்ணெய்யை பாரிய சக்திக் காவியாக பிரதியிடக் கூடிய நிலையான சக்திக்கான பாரிய பரிவர்த்தனையை நோக்கி இலங்கை நகர்ந்து வருகின்றது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள விஷேட திருப்புமுனைகளை தாண்டிச்செல்கின்ற இந்த முன்னெடுப்புத் திட்டங்கள், இலங்கை 2020 ஆம் ஆண்டளவில் ஒரு காபன் நடுநிலை நாடாக மாறும் என்பதை உறுதிசெய்யும்.

திருப்புமுனை	காலப் பகுதி	நிலை
புதிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி (NRE) 10% மின்னுற்பத்தி இலக்கை அடைதல்	2016	திட்டமிடப்பட்டிருந்த காலத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்னர் அடையப்பட்டுள்ளது.

புதிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி (NRE) 20% மின்னுற்பத்தி இலக்கை அடைதல்	2020	துரிதப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
2010 ஆம் ஆண்டிலிருந்து மின்சார நுகர்வில் 20% வீதத்தை சேமித்தல்	2020	ஜனாதிபதி சிறப்புச் செயலணி நியமிக்கப்பட்டு, ஒன்பது பிரிவு நிகழ்ச்சித் திட்டங்கள் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
கணிய எண்ணெய்யில் இயங்கும் வாகங்களின் பாவனையை 2040 ஆம் ஆண்டளவில் ஒழித்தல்	2040	கொள்கை சார்ந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
கொழும்பு சுற்றுப்புறத்திற்கு ஓடும் புகையிரதங்களை மின்சாரமயமாக்கல்	2021	கருத் திட்டம் திட்டமிடப்பட்டவாறு நிகழும்
கூரையில் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய 200 மெ.வொ. PV மின்சக்தி உற்பத்திக் கொள்திறனை வெளியிடுதல்	2020	ஒரு வருடமும் மூன்று மாதங்களிலும் 100 மெ.வொ. இலக்கு அடையப்பட்டுள்ளது.

அண்ணளவாக மொத்தம் முன்னூறு பில்லியன் இ.ரூ. பெறுமதியான இந்த முதலீடுகளை உணரத்தும் நிமித்தம், அடுத்து வரும் தசாப்தத்தில் அரசாங்கம் உட்கட்டமைப்பு வசதிகளிலும் மற்றும் முறைமைகளிலும் அண்ணளவாக முப்பது பில்லியன் இ.ரூ. நிதியை செலவிடுவதற்கு நேரிடும்.

5. ஏனைய பிற பாரிய அபிவிருத்திகள்

எதிர்பார்க்கப்பட்ட சக்தி பரிவர்த்தனையை உணர்ந்து அதன் இலக்கை அடையும் பொருட்டு, உட்கட்டமைப்பு வசதிகளிலும், முறைமைகளிலும் மற்றும் மனித வளங்களிலும் கணிசமான முதலீடுகளை எதிர்வரும் ஆண்டுகளில் முதலீடு செய்ய வேண்டியிருக்கும். கணிய எண்ணெய் இறக்குமதிகள் மீது ஒரு செஸ் வரியையும் அறிமுகப்படுத்துவதன் மூலமாகவும் மற்றும் மின்னுற்பத்திற்காக பயன்படுத்தப்படும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியிலிருந்து ஒரு அரச கட்டணத்தை அறவிடுவதன் மூலமாகவும் தேவையான நிதி சார்ந்த வளங்களை ஊக்குவிக்கும் நிமித்தம், இ.நி.வ.அ.ச., குறித்த சட்டத்தில் சட்ட ஏற்பாடுகளை முன்மொழிவதற்கு திட்டமிட்டு வருகின்றது. தங்குதடையின்றி சக்திப் பரிமாற்றத்தை இயலச் செய்வதற்கு சக்தித் துறைக்கு இடையிலான ஒரு ஒழுக்கை அந்த முன்மொழிவுகள் உறுதிசெய்யும். அநேகமாக நிலைபெறு சக்தித் துறைக்கான அந்த நிதி ஒழுக்கு பற்றிய விபரம் கீழே சுருக்கமாக தரப்பட்டுள்ளது.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் கணிய எண்ணெய்யிலுள்ள சக்தி அளவின் பேரில் இ.ரூ.0.01/GJ அளவான ஒரு செஸ் வரியை விதித்தல்.

எரிபொருள்	விற்பனை விலை இ.ரூ. இற்கு சேர்க்கப்படும் செஸ் வரி	2016 ஆம் ஆண்டிற்கான இறக்குமதிகளுக்கு அநேகமாக செலவாகும் தொகை* இ.ரூ. (மில்லியன்)
விமான எரிபொருள்	லீற்றர் ஒன்றுக்கு 0.34	330
தானியக்க டீசல்	லீற்றர் ஒன்றுக்கு 0.38	696

LP எரிவாயு	கி.கி. ஒன்றுக்கு 0.44	153
நிலக்கரி	கி.கி. ஒன்றுக்கு 0.24	577
மசகெண்ணெய்	கி.கி. ஒன்றுக்கு 0.43	727
மொத்தம்		2,483

(*2016 ஆம் ஆண்டிற்குரிய உண்மையான இறக்குமதிப் பெறுமானங்களின் அடிப்படையில்)

உற்பத்தி செய்யப்படும் ஒரு கி.வொ.ம. மின்சாரத்திலிருந்து இ.ரூ. 0.50 அரச கட்டணத்தை அறவிடுதல்:

கருத் திட்டத்தின் வகை	15+ஆண்டுகள் மெ.வொ. இற்கான இயக்கச் செயற்பாட்டுக் கொள்ளளவு	அநேகமாக உற்பத்தி செய்யப்படும் மின்னுற்பத்தி கி.வொ.ம./ஆண்டு	அரச கட்டணம் இ.ரூ. - மில்லியனில் - இ.ரூ.R0.50/கி.வொ.ம.
உயிரணுத் திணிவுச் சக்தி	-	-	-
பாரிய நீர்வலு	1,227.00	3,536.69*	1,768.35
சிறிய நீர்வலு	31.24	115.67	57.84
சூரிய சக்தி	-	-	-
காற்று சக்தி	3.00	8.41	4.21
மொத்தம்		3,660.77	1,830.39

*குறிப்பு: சராசரி மின்னுற்பத்தி அடிப்படையில்: 2000-2016

6. எதிர்வுகூறல்கள், பிரச்சினைகள் மற்றும் விடயங்கள்

அனுகூலமான நிலையை பாதுகாத்துக் கொள்ளும் நிமித்தம் ஆரம்ப சக்தி விநியோகத்திலும் மற்றும் மின் உற்பத்தியிலும் மட்டுமன்றி, மீளப்புதுப்பிக்கத்தகு சக்திப் பங்கிலும், அதே நேரம் இந்தப் பங்குகளை அதிகரிப்பதிலும் இலங்கைக்கு சாத்தியமிருக்கின்றது. எனினும், சமூகப் பிரச்சினைகள், சட்ட வரையறைகள் மற்றும் தேசிய மின்சார செலுத்துகை க்றிட் முமையில் காணப்படும் சக்திக் கொள்திறன் மட்டுப்பாடுகள் என்பவற்றின் காரணமாக, 2012 ஆம் ஆண்டு முதல் மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கைத்தொழில் பாரிய தடைகளை எதிர்நோக்கி வந்தது.

பல சமூக-அரசியல் காரணங்களினால், சிறிய நீர்வலு கருத் திட்டங்களுக்கான பொது மக்கள் எதிர்ப்பு கடந்த ஒரு சில ஆண்டுகளில் அதிகரித்து, நாட்டின் அநேகமான பாகங்களில் அந்தக் கருத் திட்டங்களை செயற்படுத்த இயலாத அளவுக்கு மாறியது. இத்தகைய தடைகளினால் சக்தி அபிவிருத்தித் தரப்புகள் அனுபவித்த நீண்ட காலத் தாமதங்கள். அந்தத் தரப்புகளுக்கு வழங்கப்பட்ட சக்தி அனுமதிப் பத்திரங்கள் காலாவதியாகி வருவதை சுட்டிக் காட்டுகின்றன. அதிதகளவான அத்தகைய கருத் திட்டங்கள் தீர்வுகளின்றி இன்னும் முடங்கிக் கிடக்கின்றன.

அதே போன்று, 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ஒரு திருத்தம், சிறிய மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகள் மற்றும் கூரையின் மீது நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய சூரிய சக்தி முறைமைகள் அடங்கலாக, ஏதாவது ஒரு தரப்பிடமிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கு போட்டிக் கேள்விமனு அழைத்தல்

பின்பற்றப்படுதல் வேண்டும் என்பதை தேவைப்படுத்தியது. இலங்கை மின்சார சபை (இ.மி.ச.), இந்த வரையறைகளில் தொழிற்பட்டு, இரண்டு காற்று சக்தி மின்னுற்பத்திக் கருத் திட்டங்களுக்கும் மற்றும் இரண்டு சூரிய சக்தி மின்னுற்பத்திக் கருத் திட்டங்களுக்கும் (அவை ஒவ்வொன்றும் 10 மெ.வொ. சக்தி உற்பத்திக் கொள்திறனுடையது) போட்டிக் கேள்வி நடைமுறையை பின்பற்றியதால், திணி கட்டணத் திட்டத்தினூடாக கொள்வனவு செய்யப்படும் மின்சாரத்தின் செலவை அரைவாசிக்கு குறைத்தது. எவ்வாறாயினும், இந்தக் கருத் திட்டங்களுக்கான காணித் துண்டுகளைப் பெற்றுக் கொள்ளல், மிகவும் கடினமாக மாறி, செயற்படுத்துகையில் நீண்ட காலத் தாமதங்களுக்கு வழிவகுத்தது.

60x1 மெ.வொ. சூரிய சக்தி மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளுக்கான கேள்வி மனுக்கள் அழைத்தலும் முதலீட்டுத் தரப்புகள் மத்தியில் பரந்த நன்மதிப்பை பெற்றிருந்தது. கேள்வி மனு அழைத்தல் நடைமுறையிலுள்ள சிக்கல்வாய்ந்த தன்மையினால், கேள்வி மனு ஒப்பந்தங்களை வழங்கும் விடயம், எதிர்பார்த்த காலத்தை விடவும் அதிக காலத்தை எடுத்தது.

மின்சார செலுத்துகை முறைமையில் முதலீடுகளின் தேவையை உணர்த்துவதற்கும் மற்றும் நிலையான சக்தி முதலீடுகளுக்கு நிதியளிக்கும் வகையில் குறைந்த நிதியிடும் ஆகுசெலவை ஈர்ப்பதற்கும் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். கொள்வனவு விலை நிர்ணயத்தை பாதிக்கின்ற சட்டப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணாமலும் மற்றும் கருத் திட்டத்தின் செயற்படுத்துகைக்கு உகந்த ஒரு சமூக - அரசியல் சூழலை ஏற்படுத்தாமலும், மிக நெருங்கிய எதிர்காலத்தில் அதிகம் எதுவும் நிகழும் என எதிர்பார்க்க முடியாது.

7. 2018 ஆம் ஆண்டிற்கும் அதற்கு அப்பாலும் எதிர்காலத் திட்டங்கள்

சக்தி வினைத் திறன் மேம்பாடு மற்றும் சக்திப் பாதுகாப்பு முன்னணியில், நிர்மாணத் துறை மற்றும் கைத்தொழில் துறை ஆகிய துறைகளை இலக்காகக் கொள்கின்ற கட்டாய நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தும் வகையில், 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தில் கிடைக்கக் கூடிய சட்ட ஏற்பாடுகள் வலுப்படுத்தப்படும். சக்தி வினைத் திறன் கட்டிட அடிப்படையிலான புதிய ஒரு சக்தி செயல் திறன் விதிக்கோவை, இந்த நிகழ்ச்சித் திட்டங்களினூடாக, வர்த்தக கட்டிடங்களின் நிமித்தம் கட்டாய அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும். நிலைபெறுதகு வதிவிடங்களின் நிமித்தம் அதையொத்த ஒரு வழிகாட்டலும் தன்னார்வ தெரிவு முறையாக அறிமுகப்படுத்தப்படும்.

கட்டிடங்களை இலக்காகக் கொள்கின்ற இந்த நிகழ்ச்சித் திட்டங்களுக்கு புறம்பாக, பாரிய கைத்தொழில் துறையில் இலக்குக் கொள்கின்ற கட்டாய சக்தி முகாமைத்துவத் திட்டமும் கூட செயற்படுத்தப்படும். இந்த நிகழ்ச்சித் திட்டம் குறித்தொதுக்கப்பட்ட கைத்தொழில்களையும் மற்றும் கட்டிடங்களையும் முன்கூட்டி நிர்ணயிக்கப்பட்ட கால இடைவெளிகளில், அவற்றின் சக்தி செயல் திறன், சக்தி மேம்பாட்டுத் திட்டங்களின் நோக்கம், மற்றும் அத்தகைய பரிகார நடவடிக்கைகளை செயற்படுத்துதல் முதலிய அம்சங்களை மதிப்பிடுமாறு தேவைப்படுத்தும்.

இலங்கை மின்சார சபையுடன் (இ.மிச.) நடத்தப்பட்ட நீண்ட கலந்துரையாலின் பின்னர், 2020 ஆம் ஆண்டளவில் NRE இன் வகிபங்கை சாத்தியமான விதத்தில் 20% மின்னுற்பத்தி இலக்கை அடையக் கூடிய வகையில் வியாபிக்கும் குறிக்கோளுடன் மீளப்புதுப்பிக்கத்தகு சக்திற்கான

ஒரு நிலைபெறுதகு ஆரம்பத்தின் தேவை உணரப்பட்டது. இது கணிய எண்ணெய் மைய சக்தி முறைமையை ஒரு மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மைய முறைமைக்கு பரிவர்த்தனை செய்யக் கூடிய இறுதி இலக்காகிய தேசிய சக்திக் கொள்கை மற்றும் திறமுறைகள் நகல் ஆவணத்தில் எதிர்பார்க்கப்பட்டவாறு 2050 ஆம் ஆண்டளவில் இலங்கை ஒரு காபன் நடுநிலை நாடாக மாறுவதற்கு இது வழிவகுக்கும். சேர்க்க வேண்டிய கொள்திறன், தேவையான முதலீடு, மற்றும் ஒவ்வொரு தொழில் நுட்பத்திலிருந்தும் பெறப்படும் சக்தி என்பன பற்றிய விபரங்கள் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

தொழில் நுட்பம்	சிறிய நீர்வலு	உயிரணுத் திணிவு சக்தி	காற்று சக்தி	சூரிய சக்தி	மொத்தம்
சக்திக் கொள்திறன் சேர்வுகள்	95.00	40.00	654.00	678.20	1,467.20
முதலீடு (இ.ரூ.பி.)	22.09	18.60	145.02	106.65	292.36
சக்தி ஜி.வொ.ம./ ஆண்டு	349.52	280.32	2,124.48	1,194.90	3,949.22

அண்ணளவாக மொத்தம் 300 பில்லியன் இ.ரூ. பெறுமதியான இந்த முதலீடுகளை உணரத்தும் நிமித்தம், அடுத்து வரும் தசாப்தத்தில் அரசாங்கம் உட்கட்டமைப்பு வசதிகளிலும் மற்றும் முறைமைகளிலும் அண்ணளவாக 30 பில்லியன் இ.ரூ. நிதியை செலவிடுவதற்கு நேரிடும்.

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை
2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்றுக்

(சகல பெறுமானங்களும் இலங்கை ரூபாவில்)

	குறிப்பு	2017	2016
வருமானம்			
இயக்கச்செயற்பாடு சார்ந்த வருமானம்	**2**	295,154,682.92	341,238,731
_இயக்கச்செயற்பாடு சாராத வருமானம்	**3**	270,591,538.80	103,869,179
மொத்த வருமானம்		**565,746,221.73**	**445,107,910**
செலவினங்கள்			
கருத் திட்ட/செயற்பாட்டு வருமானங்கள்	**4**		
மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி	**4.1**	227,448,436.01	105,639,464
சக்தி முகாமைத்துவம்	**4.2**	16,485,744.59	26,543,131
அறிவு முகாமைத்துவம்	**4.3**	20,506,781.98	26,659,199
உபாயத்திட்டச் செயற்பாடுகள்	**4.4**	4,856,913.07	7,618,652
		269,297,875.65	**166,460,446**
மீண்டெழும் செலவினங்கள்	**5**		
சம்பளங்களும் கொடுப்பனவுகளும்	**5.1**	89,676,107.49	89,359,231
பிரயாணச் செலவுகளும் வாழ்க்கைப்படி	**5.2**	1,439,234.15	1,553,237
வழங்கல்கள்	**5.3**	4,418,297.51	4,472,982
பராமரிப்பு சார்ந்த செலவு	**5.4**	8,486,841.87	8,583,142
ஒப்பந்த சேவைகள்	**5.5**	35,339,902.55	35,931,662
தேய்மானம் சார்ந்த செலவு	**5.6**	92,808,653.51	123,361,618
ஏனைய மீண்டெழும் செலவுகள்	**5.7**	12,577,013.87	8,921,899
		244,746,050.95	**272,183,771**
மொத்தச் செலவினங்கள்		**514,043,926.60**	**438,644,217**
மிகை/பற்றாக்குறை		**51,702,295.13**	**6,463,693**

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைக்காகவும் மற்றும் அதன் சார்பாகவும்

....	....	....
பணிப்பாளர் (நிதி)	**பணிப்பாளர் நாயகம்**	**தலைவர்**

5 முதல் 9 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் மற்றும் 9 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்குகளுக்கான குறிப்புகுளும் நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகங்களாகும். இந்த நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதும் அதனை முன்வைப்பதும் பணிப்பாளர்கள் சபையின் கூட்டுப் பொறுப்பாகும்.
இந்த நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர்கள் சபையினால் அங்கீரிக்கப்பட்டுள்ளன.
பணிப்பாளர்கள் சபையினது குறஉறுப்பினர்களின் கையொப்பங்கள் கீழே இடப்பட்டுள்ளன.

பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்களின் பெயர்	**கையொப்பம்**
1 எஸ். தர்ஷன்	
2 மாலனி குமாரிஹாமி	

01

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை
2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள்
(சகல பெறுமானங்களும் இலங்கை ரூபாவில்)

	குறிப்பு	2017	2016
சொத்துக்கள்			மீளெடுத்துரைக்கப்ட
நடைமுறையல்லாத சொத்துக்கள்			
சொத்துக்கள், பொறித் தொகுதிகள், உபகரணங்	9		
சுயாதீன சொத்துக்கள்	9.1	877,417,702.70	861,825,491
குத்தகை அடிப்படையிலான சொத்துக்கள்	9.2	42,035,080.08	43,563,628
கட்புலனாகாத சொத்துக்கள்	10	4,969,259.80	6,631,346
நிறைவடையாத பணிகள்	11	35,699,243.00	19,885,854
முதலீடுகள்	12	84,907,163.74	77,770,893
கடன்களின் மீளறவீடு	13	49,780,000.50	51,327,709
மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்		**1,094,808,449.83**	**1,061,004,921**
நடைமுறைச் சொத்துக்கள்			
கிடைக்க வேண்டிய தொகைகள்	14	21,557,401.67	21,201,585
ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்	15	37,990,919.21	46,952,362
காசும் காசு ஒப்புரவுகளும்	16	392,179,336.96	346,032,869
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**451,727,657.84**	**414,186,816**
மொத்தச் சொத்துக்கள்		**1,546,536,107.66**	**1,475,191,737**
உரித்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்			
உரித்துக்கள்			
திரண்ட நிதி	17	22,100,336.00	22,100,336
மிகை/பற்றாக்குறை		99,679,846.55	85,482,536
பிற்போடப்பட்ட மானியங்கள்	18	809,739,764.08	881,213,250
இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதி	20	318,204,589.88	288,663,394
நிலைபெறுதகு சக்தி உத்தரவாத நிதி		89,899,766.70	81,935,978
திரண்ட மீள்மதிப்பீடு		101,217,000.00	-
மொத்த உரித்துக்கள்		**1,440,841,303.21**	**1,359,395,494**
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்			
பணிக்கொடைப் பொறுப்புக்கள்		20,213,314.36	16,844,582
ஆ.அ.வ. கடன் (L 2892 SRI)		49,780,000.50	36,447,709
ஆ.அ.வ. கடன் (L 2733 SRI)		2,020,356.00	16,900,356
மொத்த நடைமுறையல்லாத பொறுப்புக்கள்		**72,013,670.86**	**70,192,647**
நடைமுறைப் பொறுப்புக்கள்			
ஏனைய கொடுமதிகள்	19	28,631,649.21	40,773,862
தேறிய வைப்பு - காணிகள் சுவீகரித்தல்		5,049,485.00	4,829,735
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		**33,681,134.21**	**45,603,597**
உரித்துக்களினதும் பொறுப்புக்களினதும் மொத்தப் பெற		**1,546,536,108.28**	**1,475,191,737**

5 முதல் 21 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் மற்றும் குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கும் ஒரு பாகமாகும்

02

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை

2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சம பங்குகளின் வித்தியாசம் தொடர்பான கூற்று

(சகல பெருமானங்களும் இலங்கை ரூபாவில்)

விபரம்	திரண்ட நிதி	தேறிய மிகை/ பற்றாக்குறை	பிற்போடப்பட்ட மானியம்	மீள்மதிப்பீட்டு நிலுவை	இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதி	சக்தி உத்தரவாத நிதி	එකතුව
2016.01.01 ஆம் திகதிற்கான நிலுவை	**22,100,336**	**88,848,196**	**985,822,817**	**-**	**205,446,714**	**76,591,020**	**1,378,809,083**
அதிகரிப்புகள்/குறைவுகள் - 2016 ஆம் ஆண்டு	-	6,463,693	(104,609,567)	-	87,810,523	5,344,958	**(4,990,393)**
முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள்	-	(879,123)	-	-	-	-	**(879,123)**
நட்டங்கள் மற்றும் இழப்புகள்	-	(157,454)	-	-	-	-	**(157,454)**
2016.12.31 ஆம் திகதிற்கான நிலுவை	**22,100,336**	**94,275,312**	**881,213,250**	**-**	**293,257,237**	**81,935,978**	**1,372,782,113**
முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள்	-	(8,792,776)	-	-	(4,593,843)	-	**(13,386,619)**
2017.01.01 ஆம் திகதிற்கான மீளெடுத்துரைக்கப்பட்ட நிலுவை	**22,100,336**	**85,482,536**	**881,213,250**	**-**	**288,663,394**	**81,935,978**	**1,359,395,494**
அதிகரிப்புகள்/குறைவுகள் - 2017 ஆம் ஆண்டு	-	51,702,295.13	(71,473,485.42)	-	-	-	**(19,771,190.29)**
சக்தி உத்தரவாத நிதியத்திற்கு மேற்கொள்ளப்பட்ட மாற்றல்கள்	-	(7,963,788.70)	-	-	-	7,963,788.70	-
நிதியத்திற்கு மேற்கொள்ளப்பட்ட மாற்றல்கள்	-	(29,541,195.88)	-	-	29,541,195.88	-	-
காணிகளின் மீள்மதிப்பீடு	-	-	-	101,217,000.00	-	-	**101,217,000.00**
2017.12.31 ஆம் ஆண்டிற்கான நிலுவை	**22,100,336.00**	**99,679,846.55**	**809,739,764.08**	**101,217,000.00**	**318,204,589.88**	**89,899,766.70**	**1,440,841,303.21**

5 முதல் 21 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் மற்றும் குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கும் ஒரு பாகமாகும்

03

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை
2017 திசம்பர் 31 ஆம் திகதயில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல்கள் பற்றிய கூற்று

(சகல பெறுமானங்களும் இலங்கை ரூபாவில்)

	குறிப்பு	2017	2016
காசுப் பாய்ச்சல்கள் - இயக்கச்செயற்பாடுகள்			(மீளெடுத்துரைக்கப்பட்ட)
குறித்த ஆண்டு காலப் பகுதியிலுள்ள மிகைகள்/(பற்றாக்குறை)		51,702,295.13	5,427,116
பின்வருவனவற்றுக்கான சீரக்கல்கள்			
இழப்புகளும் நட்டங்களும்		-	157,454
வட்டி வருமானம்	3 , 8	(20,285,998.08)	-
நிதி ரீதியான தேய்மானம் (பெற்ற நிதிகளின் நிமித்தம்)	7	(91,280,105.14)	(123,361,618)
சக்தி நிதியத்திற்கு மேற்கொள்ளப்பட்ட மாற்றல்கள்		-	(38,573,814)
ஊழியர் பணிக்கொடைக்கான நிதியேற்பாடு		4,265,245.36	5,621,087
பணிக்கொடைக் கொடுப்பனவுகள்		(896,513.00)	(782,260)
தேய்மானம்	5.6	92,808,653.51	123,361,618
மூலதன வித்தியாசங்களுக்கு முன்னருள்ள இயக்கச்செயற்பாட்டு இலாபம்		**36,313,577.78**	**(28,150,417)**
(அதிகரிப்புகள்/குறைவுகள்) - ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்		8,605,626.00	(23,934,085)
(அதிகரிப்புகள்/குறைவுகள்) - நடைமுறைப் பொறுப்புக்கள்		(11,922,462.61)	2,365,983
இயக்கச்செயற்பாடுகளிலிருந்து ஈட்டிய தேறிய காசுப் பாய்ச்சல்		**32,996,741.17**	**(49,718,519)**
காசுப் பாய்ச்சல்கள் - முதலீட்டுச் செயற்பாடுகள்			
சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் செ	9.1	(3,993,230.22)	(5,168,444)
கட்புலனாகாத சொத்துக்கள்		-	(8,345,683)
நிறைவு பெறாத பணிகள்	11	(15,813,389.00)	(6,141,226)
FD மற்றும் TB ஆகியவற்றிலுள்ள முதலீடுகள்	12	(7,136,270.74)	-
கிடைத்த வட்டி	3 , 8	20,285,998.08	(3,161,729)
அபிவிருத்தித் தரப்புகளுக்கு வழங்கிய கடன்கள்		1,547,708.09	(60,539,709)
முதலீடு சார்ந்த செயற்பாடுகளுக்காக பயன்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்க		**(5,109,183.79)**	**(83,356,791)**
காசுப் பாய்ச்சல்கள் - மூலதனச் செயற்பாடுகள்			
பிற்போடப்பட்ட மானியங்கள்	18	19,806,619.08	18,752,051
இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதி		-	126,384,337
திரண்ட நிதி		-	-
நிலைபெறுதகு சக்தி உத்தரவாத நிதி		-	5,344,958
நிதிகளின் மீளச்செலுத்துகை - வெளிநாட்டு முதலீட்டுத் தரப்புகள்		-	62,560,065
ஆ.அ.வ. கடன் (L 2892 SRI)	13	13,332,291.50	-
ஆ.அ.வ. கடன் பயன்பாடு (L 2733 SRI)	13	(14,880,000.00)	-
நிதி சார்ந்த செயற்பாடுகளிலிருந்து ஈட்டிய தேறிய காசுப் பாய்ச்சல்		**18,258,910.58**	**213,041,410**
காசும் காசு ஒப்புரவுகளிலுமுள்ள தேறிய அதிகரிப்புகள்		**46,146,467.96**	**79,966,100**
குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள காசும் காசு ஒப்புரவுகளும்	16	**346,032,869.00**	**266,066,769**
குறித்த ஆண்டு இறுதியிலுள்ள காசும் காசு ஒப்புரவுகளும்		**392,179,336.96**	**346,032,869**

5 முதல் 21 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் மற்றும் குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கும் ஒரு பாகமாகும்.

04

2017.12.31 ஆம் திதிற்கான நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புகள்

1. கூட்டிணைந்த தகவல்கள்

1.1 பொது

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை (நி.வ.அ.ச.) 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. இந்த சபை கொழும்பு 07 என்ற முகவரியிலுள்ள ப.ச.ஞா.மா.ம. மண்டபத்தின் 05 ஆம் இலக்கக் கட்டிடத்தொகுதியில் அமைந்துள்ளது.

1985 இன் 02 ஆம் இலக்க சக்திப் பாதுகாப்பு நிதியச் சட்டமானது (ச.பா.நி.) 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகர சபைச் சட்டத்தினால் நீக்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதிற்கான ச.பா.நி. சகல சொத்துக்களும் பொறுப்புக்களும் 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆம் திகதி செயல்வலுப்பெறும் வகையில் தானாகவே நி.வ.அ.ச. சபைக்கு மாற்றப்பட்டன.

இ.நி.வ.அ.ச. சபையின் கீழ் இயங்கி வந்த ஒளியேற்றலுக்கான பிராந்திய நிலையம் (ஒ.பி.நி.) மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சிலிருந்து கிடைத்த அறிவுரைகளின்படி இலங்கை மின்சார சபைக்கு மாற்றிக்கையளிக்கப்பட்டது. அதற்கிணங்க, குறித்த ஒ.பி.நி. சொத்துக்களும் மற்றும் பொறுப்புகளும் 2012 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் இ.மி.ச. சபைக்கு மாற்றப்பட்டதுடன் அந்த நிலையத்தின் ஊழியர்களும் அவ்வாறே அன்றைய தினம் மாற்றப்பட்டனர்.

1.2 அதிகர சபையின் முக்கிய செயற்பாடுகள்

மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களை அபிவிருத்தி செய்வதற்கும், சக்தி அபிவிருத்திப் பிரதேசங்களைப் பிரகடனப்படுத்துவதற்கும், சக்தி வினைத்திறன் மற்றும் சக்திப் பாதுகாப்பு ஆகிய நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கும், நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கும், சக்திப் பாதுகாப்பையும், சக்தியின் நம்பத் தகுதன்மையையும், சக்தி விநியோக ஆகுசெலவு பயனையும் மற்றும் தகவல் முகாமைத்துவத்தையும் மேம்படுத்துவதற்கும் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை தாபிக்கப்பட்டுள்ளது.

1.3 அதிகார சபையின் நிதியங்கள்

2007 இன் 35 ஆம் இலக்க இ.நி.வ.அ.ச. சட்டத்தின் பிரகாரம், 3 நிதியங்களை இயக்கி நிருவகிப்பதற்கு இ.நி.வ.அ.ச. தேவைப்படுத்தப்படுகின்றது. அத்தகைய நிதியங்கள் பின்வருமாறு காணப்படும்:

1.3.1 அதிகார சபை நிதியம்

ஆரம்ப மூலதனத்தையும், சக்தி அனுமதிப்பத்திரக் கட்டணங்களையும், கடன்களையும், குத்தகைகளையும், வாடகைகளையும் மற்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய வருமதிகளையும் வைப்புச் செய்யும் பொருட்டு இந்த நிதியம் நிருவகிக்கப்படுகின்றது. அதிகார சபை குறித்த சட்டத்தின் பிரகாரம் அதிகாரத்தத்துவங்களைப் பிரயோகித்து தனது தொழிற்பாடுகளையும் கடமைகளையும் மேற்கொண்டு நிறைவேற்றும் போது அதிகார சபைக்கு ஏற்படும் செலவுகளை ஈடுசெய்வதற்கு அத்தகைய நிதியிலிருந்து அத்தகைய செலவுகளுக்கான சகல நிதிகளும் செலுத்தப்படுதலும் வேண்டும்.

1.3.2 இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதியம்

காபன் சொத்துக்கள், விண்ணப்பக் கட்டணங்கள், குத்தகை வாடகைகளிலிருந்து கிடைக்கும் பணம், தொழில்சார் கட்டணங்களிலிருந்து கிடைக்கும் பணம், அரச கட்டணம் மற்றும் செஸ் வரியிலிருந்து கிடைக்கும் வருமானம் என்பவற்றை முகாமை செய்வதனூடாக கிடைக்கும் நிதிகளை வைப்புச்செய்யும் நிமித்தம் இந்த நிதியம் பேணப்படுகின்றது.

நிலைபெறுதகு சக்தி நிதியத்தின் வைப்புத் தொகைகள் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்தி பொறித்தொகுதிகள், சக்தி வினைத்திறன் உபகரணங்கள், தொழில்நுட்பங்கள் எரிபொருள் சுவிட்சிங் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன தொடர்பான செலவுகளுக்கும் மற்றும் கிராமிய சக்தி சேவைகளுக்கான ஊக்குவிப்பு தொடர்பான செலவுகளுக்கும் பயன் படுத்தப்படும்.

மீளப்புதுப்பிக்கத்தகு சக்திப் பாதுகாப்புப் பொறித்தொகுதிகளுக்கான மானியங்கள், சக்தி வினைத்திறனுடைய மின்னுபகரணங்களையும் தொழில்நுட்பங்களையும் ஊக்குவிப்பதற்கான மானியங்கள், எரிபொருட்களை நகர்த்துவதற்கான மானியங்கள்,

சக்தி விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களுக்கான செலவுகள் மற்றும் சக்திப் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான ஊக்குவிப்பு நிதிகள் என்பவற்றுக்கு இந்த நிதியத்திலிருந்து செலவுகள் செய்யப்படுதல் வேண்டும்.

1.3.3 நிலைபெறுதகு சக்தி உத்தரவாத நிதியம்

சக்தி வினைத்திறன் தொடர்பான கருத்திட்டங்களை மேற்கொண்டு நிறைவேற்றும் பொருட்டு கடன் வசதிகளுக்காக விண்ணப்பிக்கும் முதலீட்டுத் தரப்புகளின் சர்பாக உத்தரவாதமளிப்பது இந்த நிதியத்தின் நோக்கமாகும். குறித்த சட்டத்தின் பிரகாரம், திரண்ட நிதியிலிருந்து கிடைக்கும் ஆரம்ப மூலதனம், வருடாந்த தவணைக் கட்டணங்கள், வழங்கப்படும் உத்தரவாதங்களுக்கான வட்டிகள், அதிகார சபையின் நிதியத்திலிருந்து கிடைக்கும் நிதிகள் என்பன இந்த நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

1.4 ஊழியர்களின் எண்ணிக்கை

2017.12.31 ஆம் திகதிற்கான ஊழியர்களின் எண்ணிக்கை - 103

2.1 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் பற்றிய சுருக்கம்

2.1.1 கணக்குகள் தயாரித்தல் அடிப்படை மற்றும் இணக்கப்பாடு பற்றிய கூற்று

2017 திசம்பர் 31 ஆம் திகதிற்கான இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் (இ.நி.வ.அ.ச.) ஐந்தொகை, வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, ஒப்புரவு மாற்றம் பற்றிய கூற்று மற்றும் கணக்குகளுக்கான குறிப்புகள் என்பன இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கும் அதே நேரம் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கும் இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

இ.நி.வ.அ.ச. நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்கள் வரலாற்று ஆகுசெலவின் வரலாற்று ஆகுசெலவு அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. பொருத்தமானவிடத்து, கணக்கீட்டுக் கொள்கைகள் கணக்குகளுக்கான அடுத்து வருகின்ற குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2.1.2 ஒப்பீட்டுப் புள்ளிவிபரங்கள்

நடைமுறை நிதியாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளிலுள்ள மாற்றங்களை உறுதிசெய்யும் பொருட்டு ஒப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் சீராக்கப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டிற்கான ஒப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் குறிப்பு 24 இன் பிரகாரம் மீளெடுத்துரைக்கப்பட்டுள்ளன.

2.2.1 - அரசாங்க மானியங்கள் மற்றும் மானிய உதவி வெளிப்படுத்துகை தொடர்பான கணக்கீடு

அரசாங்க மானியங்கள், மூலதன மானியங்கள் மற்றும் மீண்டெழும் மானியங்கள் என இரண்டு வகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஊழியர்களின் சம்பளங்கள், கட்டிட வாடகைகள் முதலியன போன்ற மீண்டெழும் செலவுகளை ஈடுசெய்வதற்கு மீண்டெழும் மானியம் பயன்படுத்தப் படுகின்றது. நிகழ்ச்சித்திட்டங்களுக்கான (செயற்பாடுகள்) செலவுகளையும் மற்றும் நிலையான சொத்துக்களின் கொள்வனவுக்கான செலவுகளையும் ஈடுசெய்வதற்கு மூலதன மானியம் பயன்படுத்தப்படுகின்றது. செயற்பாடு/நிகழ்ச்சித்திட்டம் சார்ந்த செலவுகளில் மீண்டெழும் மற்றும் மூலதன செலவுகள் அடங்குவதால் அத்தகைய செலவுகள் மூலதன மானியத்திலிருந்து மேற்கொள்ளப்படுகின்றன.

நிலையான சொத்துக்களின் கொள்வனவுக்காகப் பயன்படுத்தப்படும் அரசாங்க மூலதன மானியங்கள் சொத்துக்களின் பயனுள்ள பாவனை காலத்தின் முறையான நியாயமான ஒரு அடிப்படையில் வருமானமாக இனங்காணப்படுகின்ற பிற்போடப்பட்ட வருமானமாகக் கருதப்படுகின்றன.

செயற்பாடுகள்/நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றுடன் தொடர்பான மானியங்கள் செயற்பாடுகள் /நிகழ்ச்சித்திட்டங்கள் சார்ந்த செலவுகளுக்கான மூலதன மானியம் என்ற தலைப்பின் கீழ் வருமானக் கூற்றில் கடனாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

2.2.2 - வெளிநாட்டு உதவிக்கான கணக்கீடு

இ.நி.வ.அ.ச. பல வெளிநாட்டு உதவி கருத்திட்டங்களை மேற்கொண்டு நிறைவேற்றுகின்றது. கடன்கள் மற்றும் மானியங்களின் வடிவில் ஆ.அ.வ. மற்றும் UNDP ஆகியவற்றிலிருந்து பெரும்பாலான உதவி பெறப்படுகின்றது. எவ்வாறாயினும்,

இ.நி.வ.அ.ச. இன் பரிந்துரையின் பேரில் CBSL மற்றும் ஆ.அ.வ. ஆகியவற்றால் நேரடியாக விநியோகங்கள் மற்றும் கடன்கள் ஆகியவற்றுக்கு பணம் செலுத்தப்படுகின்றது. நிதிக் கூற்றுக்களில் அவை காட்டப்பட்டுள்ளன.

2.2.3 - **நீண்டகால முதலீடுகளுக்கான கணக்கீடு**

முதலீடுகள் அரசாங்கத்தின் திறைசேரி உண்டியல்களிலும் தேசிய சேமிப்பு வங்கி வைப்புகளிலும் வைப்புச்செய்யப்பட்டு ஆகுசெலவில் எடுத்துரைக்கப்படுகின்றன. குறித்த ஆண்டு இறுதியில் நிலையான வைப்புக்களிலுள்ள முதலீடுகளிலிருந்தும் மற்றும் திறைசேரி உண்டியல்களிலிருந்தும் கிடைக்க வேண்டிய வட்டித் தொகைகள் அந்தந்த நிதியத்திற்கு வரவுவைக்கப்படுகின்றன. ஆனால் முதலீடு மாத்திரம் அடுத்துவரும் ஆண்டில் உண்மையான வட்டி கிடைத்த பின்னர் மாத்திரம் பற்று வைக்கப்படுகின்றது.

2.2.4 - **வருமான இனங்காணல்**

வருமானம், சக்தி அனுமதிப்பத்திரக் கட்டணங்கள், மின்சார விற்பனை, பயிற்சிப் பாடநெறிக் கட்டணங்கள், கண்காட்சிகளிலிருந்தும் கருவிசாதனங்களின் வகையிலிருந்தும் கிடைக்கும் வருமானம் மற்றும் ஏனைய வருமானம் என்பவற்றைப் பிரதிபலிக்கின்றது.

சக்தி நிலைபெறுதகு உத்தரவாத நிதியத்திலிருந்து கிடைக்கும் வட்டியின் பாகம் வருமானமாக கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் மற்றொரு பாகம் மீளமுதலீடு செய்யப்பட்டுள்ளது. நிதியத்திற்கு வருமானத்தை ஈட்டுவதற்கு / பராமரிப்பு ஆகுசெலவை ஈடுசெய்வதற்கு அந்த நிதிப் பாகம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

2.2.5 - இடைநேர் பொறுப்புக்களும் இடைநேர் சொத்துக்களும்

2008 மார்ச் மாதம் 31 ஆம் திகதிய அமைச்சரவையினது தீர்மானத்தின் பிரகாரம் மரபுரீதியற்ற மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்தித் தரப்புகளிடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக மதிப்பிடப்பட்ட 897 மில்லியன் ரூபா தொகையான ஒரு நிதியை இ.நி.வ.அ.ச. இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டும். CESS ஊடான சம்பாத்தியங்கள், அரச கட்டணங்கள் முதலியவற்றிலிருந்து அல்லது திறைசேரியிலிருந்து நிதிகள் கிடைக்காவிட்டால், தற்பொழுது இந்தக் கொடுப்பனை செலுத்தித்தீர்ப்பதற்கு இ.நி.வ.அ.ச. சபையிடம் எந்த வருமான வழியும் கிடையாது. இவை பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு காணப்படுகின்றன. ஆகையால், இது ஒரு இடைநேர் பொறுப்பாக மாத்திரம் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

2.2.5 - இ.நி.வ.அ.ச. தனது அம்பாந்தோட்டை சூரிய மின் உற்பத்தி பொறித்தொகுதிகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தை இ.மி.ச. சபைக்கு மாத அடிப்படையில் விற்பனை செய்கின்றது. ஆனால் 2015 இன் கடைசி சில மாதங்களில் விற்பனை செய்த மின்சாரத்திற்கான கொடுப்பனவு மாத்திரம் 2016 ஆம் ஆண்டு மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சின் தலையீட்டின் பின்னரே செலுத்தப்பட்டது.

2.3 சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

2.3.1 ஆகுசெலவும் விலைமதிப்பீடும்

நிலையான சொத்துக்கள் குறைந்த திரண்ட ஆகுசெலவு தேய்மான அடிப்படையில் எடுத்துரைக்கப்படுகின்றன. நிலையான சொத்துக்களுக்கான தேய்மானத்திற்கான ஏற்பாடு நேர் நிரல் முறையியலைப் பயன்படுத்தி கணிப்பிடப்படுகின்றது.

2.3.2 நிலையான செத்துக்களின் அகற்றல்

முறிந்து விழுந்த உடப்பு காற்று சக்திக் கோபுரம் தேவையான அங்கீகாரத்தை பெற்ற பின்னர் மீள்விலைமதிப்பீடு செய்யப்பட்டு பதிவழிக்கப்பட்டுள்ளது.

2.3.3 தேய்மானம்

நிலையான சொத்துக்களின் தேய்மான வீதங்கள் அந்த சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பாவனை காலத்தின் அடிப்படையில் காணப்படும். திருத்தத்திற்கு உட்படவும் கூடும். தற்போதைய வீதங்கள் பற்றிய கீழே தரப்பட்டுள்ளன.

ஆண்டிற்கான தேய்மான வீதம் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

<u>விடயம்</u>	<u>தேய்மான வீதம்</u>
தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள்	25%
மோட்டார் வாகனங்கள்	20%
புகைப்படப் பிரதியெடுக்கும் இயந்திரம்	25%
கணனிகள்	33.33%
மின்சாரப் பொருட்கள்	25%
வாசிகசாலைப் புத்தகங்கள்	20%
சக்தி உபகரணங்கள்	33.33%
கண்காட்சி உபகரணங்கள்	25%
காற்று சக்திக் கோபுரங்கள்	20%
கட்டிடங்கள், நிர்மாணங்கள்	5%

சூரிய சக்தி/சிறிய நீர்வலு கருத்திட்டங்கள் :

A. சூரிய சக்திப் பலகைகள்	5%
B. உருக்கு நிர்மாணங்கள்	10%
C. கட்டிடங்கள்	5%
D. சுவிட் ஜியர்	20%
E. உட்திணி சாதனங்கள்	20%
F. மின்மாற்றிகள்	5%
G. மின்சார இலத்திரனியல் சாதனங்கள்	33%
I. துப்புரவேற்பாடு, ஈயக்கம்பி பொருத்துக்கள்	5%
J. கேபெல்கள்	20%
K. தளபாடங்கள், பொருத்துக்கள், அலுவலக உபகரணங்கள்	25%
L. கருவி சாதனங்கள்	33%
M. இயந்திராதிகள்	20%
H. ஏனையவை	20%

2.4 பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்
2.4.1 பணிக்கொடை

பணிக்கொடைக்கு உரித்துடைய சகல ஊழியர்களுக்கும் அந்தந்த ஊழியர் தொடர்பில் குறித்த நிதியாண்டிற்கான கடைசி மாத சம்பளத்தின் அடிப்படையில் அரை மாத சம்பளத்திற்கு சமனான ஒரு தொகை பணிக்கொடைக்கென ஒதுக்கப்படுகின்றது.

2.4.2 ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி.

ஊழியர்கள் அந்தந்த நியதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைய ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. ஆகியவற்றுக்கு பங்களிக்க உரித்துடையவர்களாவர். இ.நி.வ.ச. ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. ஆகியவற்றுக்கு செலுத்தும் அத்தகைய பங்களிப்புத் தொகை முறையே 12% மற்றும் 3% ஆகிய வீதங்களில் காணப்படும்.

2.4.3 மகாவலிக் காணி

அம்பாந்தோட்ட சூரிய சக்திப் பேட்டைக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட 50 ஏக்கர் அளவான மகாவலிக் காணி இன்னும் விலைமதிப்பீடு செய்யப்படவில்லை. ஆகையால், அந்தக் காணி கணக்குகளில் ஒரு சொத்தாக உள்ளடக்கப்படவில்லை.

2.4.4 பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரம்

இந்த நிதிக் கூற்றுக்கள் அதிகார சபையின் பணிப்பாளர்கள் சபையினால் 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. POE/E/SLSEA/FS/01/2017/07 ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 17 October 2018

The Chairman

Sri Lanka Sustainable Energy Authority

Report of the Auditor General on the Transactions of the Sri Lanka Sustainable Energy Authority for the year ended 31 December 2017

The audit of operations of the Sri Lanka Sustainable Energy Authority for the year ended 31 December 2017 was carried out under my direction in pursuance of provisions in Article 154(1) of the Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka read in conjunction with Section 13(1) of the Finance Act, No 38 of 1971 and Section 50(3) of the Sri Lanka Sustainable Energy Authority Act, No 35 of 2007. The financial statements for the year 2017 which should be presented as per the Section 13 (6) of the Finance Act had not been presented even up to 15 August 2018. My observations, which I consider should be presented to the parliament in terms of Article 154(6) of the Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka relating to the functions of the fund during the year under review, appear in this report.

1.2 Responsibility of the Management for Financial Statements

Management is responsible for the preparation and fair presentation of financial statements of the Fund in accordance with Sri Lanka Public Sector Accounting Standards and for such internal control as the management determines is necessary to enable the preparation of financial statements that are free from material misstatements, whether due to fraud or error.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව   இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.   No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34   +94 11 2 88 72 23   ag@auditorgeneral.gov.lk   www.auditorgeneral.gov.lk

2. Financial Statements

2.1 Presentation of Financial Statements

According to the Section 6.5.1 of the Public Enterprises Circular No. PED/12 dated o2 June 2003, the financial statements and the draft annual report should be furnished to the Auditor General within 60 days after the close of the financial year. However the financial statements for the year 2017 had not been furnished to the Auditor General even up to 30 August 2018.

2.2 Existence of Assets and Liabilities

A summary of assets, liabilities, revenue and expenditure of the Authority shown in the audited financial statements as at 31 December 2016 is given below.

Item of Financial statements	Amount
	Rs.
Assets	
Non- current Assets	1,080,797,130
Current Assets	417,284,131
Total Assets	1,498,081,261
Equity and Liabilities	
Equity	1,372,782,112
Liabilities	
Non- current Liabilities	79,404,647
Current Liabilities	45,894,502
Total Equity and Liabilities	1,498,081,261

Total Income	445,107,910
Total Expenditure	439,680,794
Surplus	5,427,116

2.3 Accounts receivable and Payable

When assigning management and assets of the Regional Center for Lightning (RCL) to the Lanka Electricity Board in November 2012 by the Sri Lanka Sustainable Energy Authority, an outstanding lease rent of Rs. 8,033,270 payable to the Bandaranayaka Memorial International Conference Hall Foundation had been paid and it had not been recovered from the Lanka Electricity Board up to 30 August 2018.

2.4 Non - compliance with Laws, Rules Regulations and Management decisions.

The following non- compliances were observed in audit.

Reference to laws, Rules and Regulations	Non – compliance
a) Sustainable Energy Authority Act No.35 of 2007	
Section 46 (3)	Contrary to the objectives of the Energy Fund, a sum of Rs. 54,263,517 had been withdrawn by the Authority from investment of the Fund in the years 2015, 2016 and 2017 for purchasing a land to construct an office building for the Sustainable Energy Authority and for preparing plans for that building.

b) Financial Regulations of the Democratic Socialist Republic of Sri Lanka.	
i. Financial Regulation 454	Inventory books had not been maintained as per the financial regulations.
ii. Financial Regulation 757 (1)	Physical verifications of assets had not been carried out according to the relevant format.
c) Treasury Circulars	
i. Circular No. 842 dated 19 December 1978	As per the Circular, the assets register had not been maintained properly and up to date in respect of fixed assets totaling Rs.1,961,896,952.
ii. Circular No. IAI/2002/02 dated 28 November 2002	A fixed assets register had not been maintained in respect of computers, accessories and soft wares valued at Rs.14,973,433
d) Public Administration Circulars	
Circular No. 28/2011 dated 12 December 2011	Although only the officers of the Sri Lanka Engineering Service are entitled for the professional allowances, a sum of Rs.7,980,000 had been paid by the Authority as professional allowances from August 2016 to May 2018 for officers who were not entitled to the Sri Lanka Engineering Service but engaged in the post of engineer of the Authority without obtaining the approval of the Management Service Department.

2.5 Transactions not Supported by an Adequate Authority

The following observations are made.

a) Out of the Funds received under the programme of "Switch Asia" from the "Uropian Union" a sum of Rs.3,135,202 had been paid as professional allowances for all officers of the Authority in the year 2010 and 2011 contrary to the terms of the Public Enterprises Circular No.95 of June 1994. Even though the Secretary to the Ministry had directed on 03 December 2012 to recover this illegal payment back from the officers or responsible officers, it had not been done even up to 30 August 2018.

b) Although a sum of Rs. 98,215 had been paid as salaries to the post of Director General under the category of HM 2-3 as per the Circular of the Department of Management Service No. 2/2016, according to the section 52 (4) of the Act without obtaining approval of the Management Service Department, a sum of Rs.250,000 per month had been paid to the new Director recruited for a period of 01 year on contract basis.

3. Operating Review

3.1 Performance

3.1.1 Planning

The following observations are made.

a) The responsibility of the Board of Directors is to prepare a corporate plan for a period of at least 3 years and to operate the Institute as to achieve proposed targets accordingly because the activities of the Institute should be managed with a short and long term vision. However a corporate plan had not been prepared by the Authority as per the paragraph 5.1.2 of the Public Enterprises Circular No. PED/12 dated 2 June 2003.

b) Although an annual action plan had been prepared by the Authority, a report as at the end of the year under review by reviewing the progress had not been prepared.

c) A human resource development plan had not been prepared by the Authority.

3.1.2 Operating and Review

The following observations are made in connection with achieving targets.

a) Energy Audit and Providing Energy Services

The following observations are made in connection with hiring energy equipment to external parties by the Authority as per the Sri Lanka Sustainable Energy Authority Act No. 35 of 2007.

i. Although equipment purchased during the period of 2008- 2012 are being used at present, those equipment had not been repaired. Therefore it could not be satisfied about the quality and the accuracy of the information obtained using this measuring equipment.

ii. Out of the equipment mentioned above, actions had not been taken to dispose or repair the equipment identified as defective in the board of survey 2017 or to purchase modern equipment.

iii. The rates for hiring energy measuring equipment had been decided by the Board of Directors of the Authority in the year 2010. However those rates had not been revised up to the year 2018.

iv. Only one engineer and one engineering assistant were working in the staff of the Energy Service Section. As a result it was observed in audit that supplying of services and taking over equipment could not be carried out properly. Therefore supplying of services had dropped down and taking over the measuring equipment had to be done without examining. Hence some instances were observed that equipment had been taken over with defects.

b) A total provision of Rs.74.787 million had been made from the sustainable Energy Fund for 3 Solar Energy Projects and 3 Solar Power Efficiency Improvement Projects which were expected to be implemented during the year under review. However total provision had been saved relating to 4 projects as at 31 December 2017 due to non-implementing of activities of 4 projects and performance of 2 projects were remained in a range of 2 to 0.2 per cent.

3.2 Management Activities

The following observations are made

a) A land had been obtained incurring a sum of Rs. 45,856,451 on 22 June 2015 from the Urban Development Authority under 30 years lease in order to construct a head office for the Institute. Due to entering in to an agreement without obtaining legal advice, a condition had been entered in to the agreement that if it is failed to complete development activities within 2 years, the ownership of the leased property will be transferred to the lessor. Although two and half years had lapsed as at 30 September 2018, only planning of the building had been done.

b) A sum of Rs.160, 090 had been paid by the authority as gratuity to a retired employee who had been recruited on contract basis, the service period had exceeded five years and retired on May 2018. However annual provisions had not been made in this regard.

c) The report relating to the investigation carried out in connection with deficiencies occurred in the salary conversion at the beginning of the Sustainable Energy Authority had been presented to the Authority on 03 February 2017. However recommendations included in the aforesaid report had not been implemented by the Institution up to now. According to that report the Secretary to the Ministry as the Chief Accounting Officer had informed to recover salaries and allowances amounting to Rs.2, 171,760 overpaid deviating the circular instructions since 01 October 2007 to 30 September 2011 from relevant officers. Nevertheless actions had not been taken to recover or rectify them by the Authority.

d) According to an agreement entered into on 28 September 2007 a sum of Rs.7,956,800 had been paid to an external party in the year 2007 to develop 03 petro type electric vehicles within 18 months. However 10 years had been lapsed up to 30 August 2018, the developer had failed to develop even one vehicle and actions had not been taken by the Authority to get developed 03 vehicles or to get recovered the money paid.

e) Wind Towers

According to the MEASNET Site Assossonent Guideline 2 April 2016, data collected on continuous basis throughout a year are sufficient for creating wind power plant and obtaining data for 2-3 years is enough to examine the co-relation. Accordingly data had been obtained from 06 towers established before the year 2012. However preparing Energy resources maps regarding wind power and plans using those data had not been completed even up to 31 August 2018.

f) According to the Cabinet Decision dated 21 March 2008 new fees tariff had been implemented by the Lanka Electricity Board under the "cost based tariff" for Non - traditional Renewable Energy Developers and accordingly it had determined to increase 90 per cent of the cost by the Lanka Electricity Board and the rest 10 per cent by the Sustainable Energy Authority. However actions had not been taken by the Authority to prepare any methodology to settle the sum of Rs.897, 025,999 to Lanka Electricity Board.

3.3 Idle and Underutilized Assets

The following observations are made.

a) A sum of Rs.4,548,176 in which the rest of the amount received under the "Switch Asia Programme" in a current account and amount relating to Energy Fund more than Rs.150,000,000 in a saving account maintained in two state banks had been deposited without using for any investing activity over a number of years.

b) A cab and a motor bicycle owned by the Authority had remained idle more than 03 years and the Lanka Automobile Society had recommended to dispose the said cab according to the assessment report dated 17 June 2015. However necessary actions had not been taken to repair or dispose those vehicles even up to 30 August 2018 and it was observed that the cab was decaying in an open space.

c) Wind Towers of Sampoor and Mullipuram removed on the recommendation to re-establish had been transported to the supplier's premises in Kappettiwalana area without any agreement and payments had been released to the supplier without having any document to confirm that equipment removed from those towers had been handed over to the Authority. Further the Authority had failed to take actions to reuse said removed property or any other suitable solution.

d) Equipment valued at Rs.915, 625 out of the equipment valued at Rs.1, 775,025 purchased in February 2016 for Nadukuda Wind Towers had not been taken to use until August 2018 and other equipment had been fixed in a delay of 11 months.

3.4 Staff Administrations

The following observations are made.

a) According to the paragraph 9.3 of the Public Enterprises Circular No: PED/12 dated 02 June 2003, a recruitment procedure had not get prepared and approved for the Authority.

b) The cadre approved by the Department of Management Services for the Authority as at 31 December 2017 was 136 and the actual cadre was 103. Accordingly 33 vacancies were remained and vacancies of 03 Director Posts, 04 posts of Divisional Heads and 12 posts of Management were included in it.

c) Appointments had been made in acting basis for the above vacancies of 03 Directors and 03 Divisional Heads out of 04 by the Chairman in the years 2013 and 2014 without obtaining the approval of the Board of Directors as the Appointing Authority of the permanent posts deviating the terms of paragraph 13.1 (b) of chapter 11 of the Establishment Code of the Democratic Socialist Republic of Sri Lanka. Contrary to the paragraph 13.7 of chapter 11 and paragraph 12.2.6. of chapter VII of the Establishment Code a sum of Rs.2,903,361 had been paid as acting allowances from the year 2013 to the year 2017.

d) According to the Public Enterprises Circular No. PED/50 dated 28 July 2008 and Public Enterprises Circular No.PED/01/2015 dated 25 May 2015, without obtaining the approval of the Board of Directors a sum of Rs.2, 610,800 had been paid as fuel allowances since the year 2013 to the year 2016 whilst a sum of Rs.4, 210,000 had been paid as transport allowances for the period since the year 2015 to the year 2017 to a Director included in the 03 Divisional Heads posts.

e) All activities such as maintaining wind towers, collecting data from towers, preparing data from soft wares and maintaining files had been limited to one technical officer at the commencement of the year 2017. As a result performance targets could not be achieved as planned for the year 2017 and it was observed that there was a risk to the future performance.

4. Sustainable Development

4.1 Achieving Sustainable Development Goals

According to the "2030" Agenda for Sustainable Development Goals of the United Nations, proper criteria had not been identified through the action plan to measure the progress and variations between the targets and achievements of affordable and pure energy supply.

5. Accountability and Good Governance

5.1 Procurement and Contract Process

5.1.1 Procurement

The following observations are made in connection with preparing procurement pan by the Authority for the year.

a) Although a sum of Rs.341, 409 million had been estimated from the Procurement Plan for the year 2017, out of the Procurement, planned, Procurement activities valued at Rs.94.476 million had only been made during the year. Accordingly it was observed that the requirement of the institute had been over estimated by the Authority when preparing the Procurement Plan.

b) Although time frames had been identified in the Procurement Plan, Procurement had not been made systematically within those time periods.

c) According to the Procurement Plan of the year 2017, even though it had been planned to carryout 50 supplies, only 06 supplies had been carried out.

6. Systems and Controls

Deficiencies in systems and controls observed during the course of audit were brought to the notice of the Chairman of the Authority from time to time. Special attention is needed in respect of the following areas of control.

Areas of Systems and Controls	Observations
Accounting	Computerized ledgers not being introduced as possible as to analyze expenditure incurred, under the various expenditure heads.

Financial Control	I. There were non performing cash balances II. Proper delegation of work not been made relating to prepare salary registers, checking and signing salary cheques. III. Authority for signing cheques had been delegated without enacting any financial limit when naming officers for signing cheques. IV. Activities relating to checking payment vouchers, signing cheques, preparing salary registers and preparing bank reconciliations not being assigned to separate people V. Signatures not being put for checking and approving journal vouchers and confirmations for journal entries not been attached to the voucher.
Debtor Administration	Debtors and other receivables not being collected without delay.
Human Resources Management	Human Resources not being managed efficiently as balancing the amount and activities for achieving targets of the authority.
Implementation of Projects	Project activities not being implemented efficiently and immediately as planned for achieving expected objectives of the projects.

Assets Management	I. Evaluation of Property plant and equipment, and documentation not been carried out properly and not being utilized efficiently to achieve objectives of the Authority.
	II. Inventory registers not being maintained Fixed assets register relating to receiving and issuing not being maintained among divisions.
Management of Information Systems	No proper procedure to secure data and information.
Vehicle Administration	Fuel consumption not being tested after the year 2014.

Sgd./ H.M. GAMINI WIJESINGHE
Auditor General

H.M. Gamini Wijesinghe

Auditor General

2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை நிலைபெறுதகு வலு அதிகா சபையின் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதி அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு விசாரணைகளுக்கான பதில்கள்

2.1 நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பணம்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வின் நிமித்தம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

RCL இற்கு செலுத்திய மீதித் தொகையான 8,033,270/= ரூபாவை அமைச்சில் நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் இலங்கை மின்சார சபை செலுத்த உடன்பட்டது.

2.4 சட்டங்கள், விதிமுறைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் ஒவ்வாமை

(அ) திறைசேரி வருடாந்தம் எமது அதிகார சபையின் கட்டிடங்களுக்கு 40 மில்லியன் ரூபா நிதியை செலவிடுகின்றது. ஆகையால், தனக்கென சொந்தமான ஒரு கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு 2015 ஆம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்டது. அதன் முதல் கட்டமாக, ஒரு காணித் துண்டைக் கொள்வனவு செய்வதற்கு அதிகார சபையின் நிதிகளிலிருந்து 54,263,517/= ரூபா செலவு செய்யப்பட்டது. எனினும், இந்தக் கருத் திட்டம் எதிர்காலத்தில் ஆ.அ.வ. நிதி உதவியில் மேற்கொள்ளப்படும் போது இந்த நிதியை மீளளிப்புச் செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஆ) (i) பொருட்பதிவேட்டுப் புத்தகங்கள் பேணப்பட்டு வருகின்றன.

(ii) 2017 ஆம் ஆண்டிற்கான பௌதீக பொருட்கள் கணக்கெடுப்பு மதிப்பீடுகள் ஏற்கெனவே நிறைவு செய்யப்பட்டுள்ளன.

(இ) (i) 2016 ஆம் ஆண்டிற்கான பொருட்கள் கணக்கெடுப்பு தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2016-2017 ஆம் ஆண்டுகளுக்கான பொருட்கள் கணக்கெடுப்பு தொடர்பான அறிக்கைகளை தயாரிக்கும் பணி ஏற்கெனவே நிறைவு செய்யப்பட்டுள்ளது. ஆகையால், இதனை 2018 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் சீராக்க முடியும்.

(ii) கணனிகள், துணைப்பாகங்கள் மற்றும் மென்பாகங்கள் என்பன தொடர்பான நிலையான சொத்துக்கள் பட்டியல் பேணப்பட்டுள்ளது.

(ஈ) 2012.01.01 ஆம் திகதியிலிருந்து இலங்கை பொறியியல் சேவைக்கு இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு வரவுசெலவுத்திட்ட முன்மொழிவின் பிரகாரம் 15,000/= ரூபா மாதாந்தக் கொடுப்பனவை செலுத்த திறைசேரி உடன்பட்டுள்ளது. இது தொடர்பில், தேவையான அறிவுரை 28/2011 ஆம் இலக்க 2011.12.12 ஆம் திகதிய சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

நிலைபெறுதகு வலு அதிகார சபையில் பணியாற்றுகின்ற பொறியியலாளர்களினால், மேற்குறித்த தொழில் சார்ந்த கொடுப்பனவைக் கோருகின்ற ஒரு வேண்டுகோள்

மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சின் செயலாளருக்கு அவரின் அங்கீகாரத்தின் நிமித்தம் அனுப்பி வைக்கும் பொருட்டு அன்றிருந்த பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சின் செயலாளர் இந்த அதிகார சபையின் இந்தப் பொறியியலாளர்களுக்கான இந்த தொழில் சார்ந்த கொடுப்பனவை சிபாரிசு செய்துள்ளார். அவரின் சிபாரிசுக் கடிதம் பணிப்பாளர் நாயகத்திற்கு குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அதிகார சபையில் பணியாற்றுகின்ற இந்தப் பொறியியலாளர்களுக்கான இந்த தொழில் சார்ந்த கொடுப்பனவு, 2016.07.08 ஆம் திகதி நடைபெற்ற இந்த அதிகார சபையின் பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தில் அவர்களுக்கு இந்த சுற்றறிக்கையின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

எனினும், மேற்குறித்த தொழில் சார்ந்த கொடுப்பனவை செலுத்துவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம், அதன் பின்னர் (2016.08.09) நடைபெற்ற பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தில் குறித்த அந்தப் பணிப்பாளர்கள் சபையின் அத்தகைய தீர்மானம் உறுதிசெய்யப்பட்ட நேரத்தில் அது இடைநிறுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க, அந்தத் தீர்மானம் பற்றி முகாமைத்துவ சேவைகள் திணைக்கத்திற்கு அறிவிக்ககப்பட்டு, அதன் அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அடுத்த கூட்டத்தில் (2016.10.06) இந்தக் கொடுப்பனவை நிறுத்தாமல் தொடர்ச்சியாக வழங்க வேண்டும் எனவும் மற்றும் அதன் நிமித்தம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் உரிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆகையால், பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்துடன் தொழில் சார்ந்த அந்தக் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான ஒரு கோரிக்கை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனினும், இதற்கு முறையான அங்கீகாரத்தை வழங்க முடியாது என முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. அதனைக் கருத்திற் கொண்டு அதற்கான ஒரு பதில் வழங்கப்படும்.

இந்தப் பிரச்சினை தொடர்ந்தும் காணப்படுவதால், 2017.08.15 ஆம் திகதி கௌரவ மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சருடன் மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கருத் திட்டங்கள் தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் இந்த விடயம் பற்றி கலந்துரையாடப்பட்டது. தாமதியாமல் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும், அத்தகைய அங்கீகாரம் கிடைக்கும் வரை இந்தக் கொடுப்பனவை தொடர்ச்சியாக செலுத்துமாறும் அந்தக் கூட்டத்தில் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் கிடைப்பதிலுள்ள தாமதத்தினால் பொறியியலாளர்களின் உள்ளங்களில் எழலாம் எனும் சந்தேகத்தைத் தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு, ஒரு அமைச்சரவைப் பத்திரத்தினூடாக ஒரு விஷேட அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான ஒழுங்குகளை இந்த அதிகார சபை ஏற்கெனவே மேற்கொண்டுள்ளது.

2.5 போதியளவான அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கள்

(அ) பதவியணியினருக்கு செலுத்தப்பட்ட இந்த கொடுப்பனவுக்கான இணக்கப்பாட்டை கோரி மின்வலு சக்தி அமைச்சினது செயலாளரின் மூலமாக 2012-12-05 ஆம் திகதி திறைசேரிக்கு ஒரு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. மேலும், பொதுத் தொழில் முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தின் 13 ஆம் இலக்க அறிவுரைகளின் பிரகாரமும் சுற்றாடல் மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சின் செயலாளரினூடாகவும் 2013.01.04 ஆம் திகதி, திறைசேரியின் இணக்கப்பாட்டை கோரி மேலும் ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், இது பற்றிய முழுமையான விபரங்கள் அடங்கிய ஒரு கடிதமும் 2014.12.02 ஆம் திகதி சுற்றாடல் மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சின் செயலாளரினூடாக பொது தொழில் முயற்சிகள் பற்றிய குழுவுக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரதிகள் திறைசேரிக்கும் மற்றும் கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களத்திற்கும் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், இது பற்றி விபரங்களை சமர்ப்பித்து, அங்கீகாரத்தை கோரி திறைசேரிக்கு ஒரு கடிதம் மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சினது செயலாளரின் மூலம் 2016.12.06 ஆம் திகதி குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், 2012.03.08 ஆம் திகதி, மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சின் செயலாளர் இந்த விடயத்தை தெளிவுபடுத்தி பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்கத்திற்கு ஒரு கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார். அதற்கிணங்க, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம், கருத் திட்டத்திற்கு பங்களித்த தொழில் நிபுணர்களுக்கு ஒரு தொழில் சார்ந்த கொடுப்பனவாக வழங்குவதற்கு ஒரு வெளிநாட்டுக் கருத் திட்டத்திலிருந்து கிடைத்த பணம் குறித்த அந்தக் கருத் திட்டத்தின் வெற்றிக்கு பங்களித்த இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் ஊழியர்களுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது. அந்தக் கொடுப்பனவு எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டது என்பன பற்றிய ஒரு முழுமையான அறிக்கை 2017 நவம்பர் மாதம் 06 ஆம் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

(ஆ) 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தின் 52 (4) பிரிவின் பிரகாரம், அந்த உரிய சம்பளக் கொடுப்பனவு பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்திற்கு அமைய தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும், இரண்டாவது தடவை நீடிப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அபிப்பிராயம்/அனுமதி கோரப்பட்டுள்ளது.

3.0 இயக்கச் செயற்பாடு சார்ந்த மீளாய்வு

3.1.1 திட்டமிடல்

(அ) கூட்டிணைந்த திட்டம்

அதிகார சபையின் ஆரம்பத்தில் வகுத்தமைக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க, நாட்டின் சக்திப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் இலக்குக் கொள்கின்ற இந்த அதிகார சபையின் நீண்டகால தூரநோக்குக்கும் மற்றும் செயற்பணிக்கும்

அமைவாக நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. 2015-2025 எனும் ஒரு பத்து ஆண்டுத் திட்டமும் அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆகையால், நிகழ்ச்சித் திட்டங்களும் கருத் திட்டங்களும் இந்தத் திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் அடிப்படையில் செயற்படுத்தப்படுகின்றன. அவ்வப்பொழு அமைச்சிலிருந்து கிடைக்கும் அறிவுரைகளின் பிரகராம், ஒவ்வொரு காலத்திற்கும் பொருத்தமான நிகழ்ச்சித் திட்டங்களும் செயற்படுத்தப்படுகின்றன.

இந்த சூழ்நிலையில், இந்த அதிகார சபைக்கான புதிய ஒரு கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படவில்லை. 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை இந்த அதிகார சபைக்கான ஒரு கூட்டிணைந்த திட்டத்தை தேவைப்படுத்துவதாகவில்லை என்பது அவதானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) **<u>செயல் திட்டம்</u>**

2017 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்து பொருத்தமான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. கூறப்பட்ட அந்த அறிக்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை தொடர்பில் அதன் ஏற்புடைய தன்மையின் நிமித்தம் எமது அமைச்சினூடாக மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(இ) **<u>மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டம்</u>**

ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டதன் பின்னர் ஒரு மனித வள அபிவிருத்தித் திட்டத்தையும் மற்றும் செயலாற்றுகை அடிப்படையிலான ஒரு பயிற்சித் திட்டத்தையும் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

3.1.2 <u>இயக்கச் செயற்பாடும் மீளாய்வும்</u>

(a) **<u>சக்திக் கணக்காய்வும் மற்றும் சக்தி சார்ந்த சேவைகள் வழங்கலும்</u>**

1. நியம அளவீட்டுக்கு தேவையான உபகரணங்களும், குறைபாடுடைய அத்தகைய உபகரணங்களும் இனங்காணப்பட்டிருந்தன. குறைபாடுடைய அந்த உபகரணங்கள் அவற்றின் முகவர்நிலையங்களினூடாக முற்றிலும் பழுதுபார்க்கப்படுதல் வேண்டும். சில உபரணங்களை வெளிநாடுகளினூடாக மாத்திரம் நியமப்படுத்த வேண்டியுள்ளன. குறித்த நோக்கத்தின் நிமித்தம் அதிக செலவு ஏற்படும் என்பதால், அத்தகைய பழைய உபகரணங்களுக்கு பதிலாக புதிய உபகரணங்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஒரு சில உபகரணங்கள் இலங்கை நியமங்கள் மற்றும் கட்டளைகள் நிறுவகத்தினால் (இ.நி.க.நி.) நியமப்படுத்தப்பட்டுள்ளன. அத்தகைய உபகரணங்களின் செவ்வைத்தன்மை இ.நி.க.நி. மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

2. குறைபாடுடைய உபகரணங்கள் 2017 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டு பெறுகையின் நிமித்தம் தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், அந்தப் பெறுகை

விடயத்தில் நிலவிய தாமதத்தினால் 2017 ஆம் ஆண்டில் அதனை மேற்கொள்வதற்கு சாத்தியப்படவில்லை. குறைபாடுடைய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு 2018 ஆம் ஆண்டில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3. சக்தி வினைத் திறன் வாய்ந்த சேவைகளை விநியோகிக்கும் கம்பனிகளுக்கும் (ESCO), சக்தி முகாமைத்துவ கம்பனிகளுக்கும், கைத்தொழில்களுக்கும் மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அத்தகைய உபகரணங்கள் நியாயமான ஒரு விலையில் வழங்கப்படுவதால், இந்த உபகரணங்கள் பயன்படுத்தப் படுகின்றன. ESCO கம்பனிகள் சக்திக் கணக்காய்வுத் துறைக்கு பெரும் சிறப்புப் பணியை நிறைவேற்றுகின்றன. அத்தகைய கம்பனிகள் இலாபமின்றி இத்தகைய சேவையை வழங்குகின்றன. ஆகையால், இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார அத்தகைய கம்பனிகளை ஊக்குவித்தல் சக்தி வினைத்திறனை மேம்படுத்துதல் ஆகிய நோக்கத்தில், இந்த சேவையை விஸ்தரிப்பதன் மூலமாக நாட்டின் சக்தி வினைத் திறனை மேம்படுத்துவதற்கான நடடிவ்ககையை எடுக்கும் நிரலிலுள்ளது. மேற்குறித்த விடயங்களின் அடிப்படையில், இந்த உபகரணங்களை வாடகைக்கு விடுவதற்கான கட்டணத்திற்கு 2010 ஆம் ஆண்டிலிருந்து மாற்றம் எதுவும் கொண்டுவரப்படவில்லை.

4. எதிர்காலத்தில் தேவையான சேவைகளை வழங்குதல், தரவுகளை சேகரித்தல் மற்றும் பேணுதல் என்பவற்றின் நிமித்தம், இந்த அதிகார சபையின் திருத்திய ஆட்சேர்ப்புத் திட்டத்தைக் கொண்டு, தேவையான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படவுள்ளது. ஆதலால், சுட்டிக் காட்டப்பட்டுள்ள மேற்குறித்த குறைபாடுகளை தவிர்த்துக் கொள்ளும் நிமித்தம் தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) <u>கருத் திட்டத்தின் செயற்படுத்துகை முன்னேற்றம்</u>

i. <u>RE/03/01 - ஒரு ஸ்மார்ட் க்றிட் பற்றிய ஆய்வவு</u>

ஒரு ஸ்மார்க் க்றிட் முறைமையை அறிமுகப்படுத்தும் பொருட்டு உரிய நிறுவனங்களுடன் ஒரு அடிப்படைக் கலந்துரைாடல் நடத்தப்பட்டது. அதற்கிணங்க, அத்தகைய முறைமையை தாபித்தல் மற்றும் ஒரு ஸ்மார்ட் க்றிட் முறைமையைக் கொண்டு தொழிற்பாடு எவ்வாறு இயக்கப்படும் என்பது தொடர்பான ஒரு பூர்வாங்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏற்கெனவேயிருக்கின்ற ஒரு முறைமைக்கு ஸ்மார்ட் க்றிட் வசதிகளை வழங்கும் போது, ஏற்கெனவேயிருக்கின்ற தொழில் நுட்பத்திற்கு பொருத்தமான முறையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். புதிய முறைமையை அபிவிருத்தி செய்வதில் காணப்படும் செயன்முறை சார்ந்த பிரச்சினைகள் போன்ற அம்சங்களைக் கருத்திக் கொள்ளுகின்ற போது, ஏற்கெனவேயிருக்கின்ற முறைமையை பார்க்கிலும் புதிய நிர்மாணத்தின் நிமித்தம் இந்த முறைமையை அறிமுகப்படுத்துவது இலகுவானதாகும். செயன்முறை நிலையில், ஸ்மார்க் க்றிட் வசதியுடைய ஒரு முறைமைக்கு அதன் பொருத்தப்பாடு மிகவும் கடினமாக இருக்கும். ஆகையால், முறையாக படிப்படியாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு சிறப்புப் பணியாக இது இனங்காணப்பட்டது.

ii. **RE/08 - IFC சூரிய சக்திக் கருத் திட்டம்**

பாரிய அளவான மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கருத் திட்டங்களை ஆரம்பிக்கும் நிமித்தம் நிதிகள் ஒதுக்கப்பட்டாலும், பூனாகரியில் ஒரு கருத் திட்டமும் மற்றும் மொனராகல்லில் ஒரு கருத் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டன. இந்தக் கருத் திட்டங்களை செயற்படுத்துவதற்கு அதிக அளவில் செலவாகும். எமது அதிகார சபை IFC உடன் இணைந்து, இந்த முதலீட்டின் நிமித்தம் சர்வதேச ரீதியில் முதலீட்டுத் தரப்புகளை ஈர்க்கும் வகையில் ஒரு நடவடிக்கையை எடுத்தது. அதற்கிணங்க, கருத் திட்டம் சார்ந்த இத்தகைய செயற்பாடுகள் ஒரு குறுங்காலத்திற்கு மேற்கொள்ளப்பட்டன. குறித்த நிறுவனம் அதன் உதவியை திடீரென நிறுத்தி விட்டது. ஆகையால், எம்மால் ஒதுக்கப்பட்ட அந்த நிதியை குறித்த காலப் பகுதியினுள் எம்மால் செலவிடுவதற்கு முடியவில்லை.

iii. **RE/10 - அம்பாந்தோட்டை சூரிய சக்திப் பேட்டை**

அம்பாந்தோடடையில் ஒரு மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்திப் பேட்டையை தாபிப்பதற்கு நிதிகள் ஒதுக்கப்பட்டன. அதற்கிணங்க, ஒரு காணி ஒரு சக்தி அபிவிருத்திப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டது. எனினும், அம்பாந்தோட்டைக்கு புதிய ஒரு அபிவிருத்தித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதால், எமது கருத் திட்டத்தின் பிரகாரம் எம்மால் தொழிற்படுவதற்கு முடியவில்லை.

iv. **EM/05 - துறை சார்ந்த குறித்த நிகழ்ச்சித் திட்டங்கள்**

EM/05/02 - ஹோட்டல் துறையில் சக்திப் பாவனை வினைத் திறன் மேம்பாடு

மத்திய, தென் மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களிலிருந்து ஒரு மாகாணத்தைத் தேர்ந்தெடுத்து அந்த மாகாணத்தில் நடத்தப்படும் முகமாக குறித்த நிகழ்ச்சித் திட்டம் திட்டமிடப்பட்டிருந்தது. எமது திட்டத்தின் பிரகாரம், இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை, பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களிலிருந்தும் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தும் நிறுவனங்களிலிருந்தும், (LNB)/ உசாதுணை சார்ந்த சேவைகள் (QCBS) பெறுகை முறையியலின் கீழ் இது தேர்ந்தெடுக்கப்பட வேண்டி இருந்தது. இதற்கான செலவு, நாம் தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டிற்கு இணங்க 2 மில்லியன் ரூபாவுக்கு அதிகளவில் காணப்பட்டது. எனினும், கழித்தலின் கீழ், பொதுத் திறைசேரியிலிருந்து இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைக்கு கிடைத்த நிதி (2017 வரவுசெலவுத் திட்டம்) 1.5 மில்லியன் ரூபாவாகும்.

இந்த நிகழ்ச்சித் திட்டம் ஒரு வதிவிட நிகழ்ச்சித் திட்டமாக செயற்படுத்துவற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இதற்கான செலவு வழமையான கேள்வி நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப்படுமாக இருந்தால், அதனை தீர்ப்பனவு செய்து கொள்ள முடியாது என்பது தெளிவாக தென்பட்டது. ஆதலால், கேள்வி நடைமுறையின் கீழ் ஒரு வெளிக்கள நிறுவனத்தைக் கொண்டு இந்த நிகழ்ச்சித் திட்டத்தை நடத்தும் போது அதில் கஷ்டம் இருக்கும். ஆகையால், இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை தனது சக்தி முகாமைத்துவப் பிரிவினூடாக அதனை நடத்தத் தீர்மானித்தது.

சக்தி முகாமைத்துவப் பிரிவில் வரையறுக்கப்பட்ட அளவான பொறியியலாளர்களும் மற்றும் ஏனைய ஊழியர்களும் பணியாற்றுவதாலும், அதே போன்று கணக்காய்வு, உசாதுணை சேவை, விழிப்புணர்வு சார்ந்த செயற்பாடுகள் முதலியவற்றிலும் அவர்கள்

ஈடுபட வேண்டியிருப்பதாலும், 2017 ஆம் ஆண்டில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை நடத்த முடியவில்லை.

v. **<u>EM - 06 விதரினூடான நியம அபிவிருத்தி</u>**

மேற்குறித்த கருத் திட்டத்தின் நிமித்தம் 2016 ஆம் ஆண்டில் நிதிகள் ஒதுக்கப்பட்டன. எனினும், பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அங்கீகாரத்தை பெறல், பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்திற்கான சபைப் பத்திரத்தைத் தயாரித்தல், பொருத்தமான புரிந்துணர்வு ஒப்பந்தங்களைத் தயாரித்தல் முதலிய பூர்வாங்க சிறப்புப்பணிகள் 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. இது ஒரு ஆராய்ச்சி மட்டத்திலுள்ள ஒரு சிறப்புப் பணியாகும். ஆகையால், உரிய கருத் திட்டம் தொடர்பான பல தொழில் நுட்ப மட்டப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. உரிய செலவினத்தை மிகவும் செவ்வையாக மதிப்பிடும் பொருட்டு கணிசமான அளவு காலம் எடுக்கப்பட்டிருந்தது. இந்தக் கருத் திட்டத்தின் நிமித்தம் பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரம் 2018 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதத்தில் பெறப்பட்டது. அது தொடர்பான உரிய பு.ஒ. 2018 ஆம் ஆண்டு மே மாதத்தில் கைச்சாத்திடப்பட்டது. இந்த சிறப்புப் பணியை விரைவில் நிறைவு செய்யும் நிமித்தம் எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

vi **<u>ST- 02 பெற்றோல் எரிபொருள் நிரப்பு நிலையம் பற்றிய நாடளாவிய மதிப்பாய்வு</u>**

இந்த மதிப்பாய்வை திட்டமிடுவதில், இலங்கையில் இயங்கும் 1500 இற்கும் அதிகமான எரிபொருள் நிரப்பு நிலையங்களை உரிய முறையில் பிரதிநிதிப்படுத்தும் வகையில் ஒரு மாதிரியைத் தேர்ந்தெடுப்பதற்கான ஒரு தேவை இருந்திருந்தது. இந்த மாதிரியை நிர்ணயிக்கும் பொருட்டு, 2016 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட ஏறக்குறைய 186,000 மாதிரி மதிப்பாய்வுகளின் தரவுகளை பகுப்பாய்வு செய்யும் நிமித்தம் எம்மை தேவைப்படுத்தியிருந்தது. குடிசன மதிப்பீட்டு புள்ளி விபரங்கள் திணைக்களத்தின் உதவியைக் கொண்டு, இந்தப் பகுப்பாய்வை 2017 ஆம் ஆண்டில் எமது அதிகார சபையினால் நிறைவு செய்ய முடிந்தது. ஆகையால், குறித்த மதிப்பாய்வை அந்த ஆண்டில் மேற்கொள்ள முடியவில்லை. இந்த அறிக்கை எமது அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டுள்ளதால், இந்த மதிப்பாய்வு எதிர்காலத்தில் செயற்படுத்தப்படும் என தயவுடன் அறியத் தருகின்றோம்.

3.2 **<u>முகாமைத்துவ செயற்பாடுகள்</u>**

(அ) இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைக்கும் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் 1.8 ஆம் பிரிவின் பிரகாரம், 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆம் திகதியிலிருந்து இரண்டு வருட காலத்திற்குள் அபிவிருத்தி சார்ந்த குறித்த செயற்பாடுகளை இந்த அதிகார சபை நிறைவு செய்ய தவறுகின்ற பட்சத்தில், அத்தகைய ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டு, குத்தகைக்கு எடுத்த அந்த சொத்து குத்தகைக்காரருக்கு தானாக சொந்தமாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், உரிய தரப்பிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள ஏறக்குறைய இரண்டு வருடங்கள் கழிந்துள்ளன. விடயம் அவ்வாறிருந்த போதிலும், கௌரவ அமைச்சரினதும், பிரதி அமைச்சரினதும், செயலாளரினதும் அனுசரணையில், இதன் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்கும் முகமாக 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், அடிக்கல் உத்தியோகபூர்வமாக நடப்பட்டது.

(ஆ) நிரந்தர சேவையிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையைக் கருத்திற் கொண்டு, வருடாந்த பணிக்கொடை இந்த அதிகார சபையினால் கணிப்பிடப்படுகின்றது. அது அவ்வாறு செய்யப்படுவதற்கு காரணம், ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப் பட்ட உத்தியோகத்தர்களின் சேவை காலம் எஞ்சிய குழு ஊழியர்களை உருவாக்கி அவ்வப்பொழுது கருத்திற் கொள்ளப்படுவதாலாகும். எனினும், சேவை அவசியத்தின் அடிப்படையில் இந்த உத்தியோகத்தரின் 5 வருட தொடர்ச்சியான சேவையை கருத்திற் கொண்டு, இந்த உத்தியோகத்தருக்கான பணிக்கொடைய செலுத்த இந்த அதிகார சபை கடைமப்பட்டிருந்தது.

(இ) இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை அதன் ஆரம்பத்திலிருந்து தனது ஊழியர்களின் சம்பளப் பரிவர்த்தனையில் காணப்பட்ட தவறுகள் அடிப்படையிலான அந்த விசாரணை அறிக்கையை ஏற்றுக் கொள்ளக் கூடாது என பணிப்பாளர்கள் சபை தீர்மானித்துள்ளது. புதிய ஒரு விசாரணைக் குழுவையும் நியமிப்பதற்கும் மற்றும் அதன் அறிக்கையின் அடிப்படையில் மேல் நடவடிக்கையை எடுப்பதற்கும் இந்த அதிகார சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தீர்மானித்தது.

(ஈ) இந்தக் கருத் திட்டத்துடன் தொடர்புடைய வெளிக்களத் தரப்புகள் இந்த சிறப்புப் பணியிலிருந்தும் தொடர்ச்சியாக விலகிச் செல்கின்றன. ஆகையால், குறித்த அந்தத் தரப்புகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரின் திணைக்களம் வழங்கியுள்ள அறிவுரைகளுக்கு இணங்க, ஒரு நடுத்தீர்ப்பாளரின் சேவையை பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை தயவுடன் அறியத் தருகின்றோம்.

(உ) காற்று சக்தி வள மதிப்பாய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சக்தி வள வரைபடத்தைத் தயாரிக்கும் நிமித்தம் கீழ்காணும் சில நடவடிக்கைகளை பின்பற்றுவது அவசியமாகும்.

- முதலில் தரவுகளை சேகரித்தல்
- தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல்
- தரவுகளின் அளவுக்கு ஏற்ப தொடர் ஒழுங்கை தயாரித்தல்
- வரைபடத்தைத் தயாரிப்பதற்கான உரிய மென்பாகத்திற்கான இடைநேர் தரவுகளைத் திட்டமிடுதல்

இதற்கு போதியளவு காலம் தேவைப்படுகின்றது. குறித்த இந்த ஒழுங்கு தற்பொழுது முறையாக ஒழுங்குபடுத்தப்பட்டு வருகின்றது. கணிசமான ஒரு காலத்தின் பின்னர், காற்று வள சாத்திய வரைபடத்தைத் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் நிமித்தம் 08-10 மாத காலம் தேவைப்படும்.

(ஊ) ஆகுசெலவு அடிப்படையிலான கட்டணத்திற்கும் மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்திப் பொறித் தொகுதிகளுக்கென சாதாரண சக்திக் கலவைக்கு செலுத்தப்பட்ட 90% தவிர்ப்பு ஆகுசெலவிலுள்ள வித்தியாசத்திற்கும் ஏற்ப செலுத்திய கொடுப்பனவுகள் இந்தத் தொகையால் கருதப்படுகின்றன. 2010 ஆம் ஆண்டில் உரிய நிறுவனங்களினால் கட்டணங்களைத் தயாரிப்பதில் ஏற்பட்ட இந்தப் பற்றாக்குறையை பூர்த்தி செய்யும் நிமித்தம் நிதியேற்பாடு கோரப்பட்டுள்ளது. மின்சார நுகர்வோரிடமிருந்து இந்தப் பணத்தை அறவிடுவதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு 2010 ஆம் ஆண்டில்

உடன்பட்டுள்ளது. அதன் நிமித்தம் எதிர்கால நடவடிக்கையை எடுக்க வேண்டிய அவசியமில்லை என்பது எமது அதிகார சபையின் அபிப்பிராயமாகும்.

3.3 <u>செயலிழந்த மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்</u>

(அ) சுவிச் ஏசியா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் எஞ்சியிருக்கின்ற நிதிகள், இந்த நிதி விடயம் பற்றிய ஒரு விசாரணையை COPE குழு தற்பொழுது மேற்கொண்டு வருவதால், ஏதாவது முதலீட்டு நோக்கங்களுக்கு இன்னும் பயன்படுத்தப்படவில்லை.

(ஆ) உங்களின் நகல் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு அதிகார சபையின் 54 - 3189 ஆம் இலக்க கெப் வண்டி இது வரை சுமார் 2 ½ வருட காலமாக இயங்காமல் இருந்து வருகின்றது. இது தொடர்பில் 2015.06.17 ஆம் திகதி Automobile Association of Ceylon எனும் நிறுவனத்திலிருந்து ஒரு மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அந்த வாகனத்தைப் பழுதுபார்ப்பதால் எந்தவித பொருளாதார நன்மையும் கிடையாது என்பதால் அதனை அகற்றுவதற்கு அந்த அறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. ஆகையால், இந்த அதிகார சபையின் முகாமைத்துவ சபையுடன் கலந்துரையாடிய பின்னர் அந்த வாகனத்தை அகற்றும் பொருட்டு, கூறப்பட்ட அந்த வாகனம் அதிகார சபையின் பெறுகைப் பிரிவுக்கு 2018.02.27 ஆம் திகதி குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மூன்று நபர்களை உள்ளடக்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஆகையால், அந்தக் குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர், மேலும் தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப் படும்.

(இ) இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை BMICH மண்டபத்தில் அமைந்திருப்பதால், அதற்கு களஞ்சிய வசதிகளில்லை. மேலும், அகற்றப்பட்ட துணைப் பாகங்களை அம்பாந்தோட்டைக்கு எடுத்துச் செல்ல அதிக பணம் செலவாகும். ஆகையால், சேவை வழங்கும் தரப்புகளின் வளாகங்களிலுள்ள அத்தகைய துணைப் பாகங்கள் எமது மேற்பார்வையின் கீழ் பாதுகாப்பாக காணப்படுகின்றன. அவற்றுக்கு கொடுப்பனவு ஏதும் மேற்கொள்ளப்படமாட்டாது. அகற்றப்பட்ட அத்தகைய அதிகமான பொருட்கள் மீளப்பயன்படுத்தக் கூடிய நிலையில் இல்லை. ஆனாலும், அவை இன்னும் எமது அதிகார சபையின் பாதுகாப்பிலுள்ளன.

(ஈ) இந்த உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட வேண்டியிருந்த காரணத்தால், அவற்றைக் கொள்வனவு செய்வதற்கு சற்று காலம் எடுத்தது. மேலும், தேவையான உபகரணங்கள் தொகையாக கொள்வனவு செய்யப்பட்டன. அத்தகைய உபகரணங்களின் கொள்வனவு ஆகுசெலவு 1,775,025 ரூபாவாகும். எனினும், 915,625 ரூபா பெறுமதியான உபகரணங்கள் நடுக்குடா காற்று சக்திக் கோபுர நிலையத்தில் நிறுவப் பட்டுள்ளன. ஏனைய உபகரணங்கள் தேவைப்படும் போது நிறுவும் நிமித்தம் எமது அதிகார சபையிலுள்ளன.

3.4 <u>பதவியணி நிருவாகம்</u>

(அ) ஆட்சேர்ப்புத் திட்டம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. அந்த ஆட்சேர்ப்புத் திட்டம் தற்பொழுது திருத்தப்பட்டு வருகின்றது.

(ஆ) புதிய ஒரு ஆளணி (170) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் ஏற்கெனவே இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைக்கு 2018.06.06 ஆம் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஆட்சேர்ப்புத் திட்டம் இல்லை என்பதால், எமது அதிகார சபையுடன் இணைந்த ஆட்சேர்ப்பு விடயங்கள் தற்காலிமாக நிறுத்தப் பட்டுள்ளன. 2018.09.19 ஆம் திகதி நடைபெறவிருக்கின்ற பணிப்பாளர்கள் சபைக் குழுக் கூட்டத்தில், புதிய ஆட்சேர்ப்புத் திட்டம் சமர்ப்பிக்கப்படும். ப.ச. இன் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர், அந்த ஆட்சேர்ப்புத் திட்டம் DMS இற்கு அதன் அங்கீகாரத்தின் நிமித்தம் சமர்ப்பிக்கப்படும்.

(இ) அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்கள் இந்த அதிகார சபையை விட்டும் விலகிச் செல்வதைத் தவிர்த்துக் கொள்வதற்கும் மற்றும் அதிகார சபையினது தேவைகளின் அடிப்படையில் இந்த அதிகார சபைச் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கும் என்ற ஒரு நோக்கில் பதில் அடிப்படையிலான இந்த நியமனங்கள் செய்யப்பட்டன. மேலும், இந்த நியமனங்கள் துணைச் சேவைகள் பிரிவின் தலைவராகிய பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் (நிருவாகப் பிரிவுக்கு பொறுப்புடைய) சிபாரிசு பேரில், பணிப்பாளர்கள் சபையின் தலைவராகிய இந்த அதிகார சபையின் தலைவரினால் செய்யப்பட்டுள்ளன (இதனை உரிய கோவைகளைப் பரிசீலிப்பதன் மூலம் உறுதிசெய்துகொள்ள முடியும்). ஆட்சேர்ப்புத் திட்டம் இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை என்பதால், உங்களுடைய தலைமையில் எமது அதிகார சபையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது, இந்த உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதிலுள்ள கடினம் பற்றி உங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் முறையான ஒரு ஆட்சேர்ப்புத் திட்டம் அங்கீகரிக்கப்படவில்லை என்பதால், நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கு இயலாதிருந்த காரணத்தினால் பதில் அடிப்படையிலான குறித்த இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன. மறுசீரமைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் முடிவுற்ற பின்னர், ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, 'உங்களின் நியமனம் நிரந்தரமாக்கப்படும்' என மேலும் உங்களுக்கு அறியத்தரப்படுகின்றது என ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் 2014.11.10 ஆம் திகதி வழங்கப்பட்ட நியமன காலத்தை நீடிக்கும் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க, இந்த நிறுவனத்தின் ஆட்சேர்ப்புத் திட்டம் இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை என்பதால், பதில் அடிப்படையிலான அந்த நியமனங்களை நிரந்தரமாக்கும் சாத்தியமில்லை. ஆட்சேர்ப்புத் திட்டம் அங்கீகரிக்கப் படும் வரை, அத்தகைய நியமனங்கள் நிரந்தமாக்கப்படுதல் கூடாது என இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் தொழிற்சங்கமும் கூறுகின்றது.

(ஈ) இந்த அதிகார சபைக்கு சரியான ஒரு ஆட்சேர்ப்புத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு இருக்கவில்லை. இந்த விடயத்தின் காரணமாக, இந்த அதிகார சபையிலிருந்து அதிக மனித வளங்கள் விலகிச் செல்லும் ஒரு போக்கு அவதானிக்கப்பட்டது. ஆகையால், பதில் அடிப்படையில் நியமனங்களை மேற்கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது. ஆகையால், அந்த உரிய பதவிகளுக்குரிய கொடுப்பனவுகளை செலுத்த நேர்ந்துள்ளது. HM-1-1 என்ற சம்பள வகுதியில் வருகின்ற 14 பதவிகள் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைக்கு ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளன. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள குறித்த வழிகாட்டல்களுக்கு இணங்க பதில் அடிப்படையில் நியமனங்கள் கிடைத்த உத்தியோகத்தர்கள் அவர்களின் தேவையான

தகைமைகளை பூர்த்தி செய்துள்ளனர். ஆகையால், பதில் நியமன அடிப்படையில் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளை, குறித்த ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அங்கீகாரம் கிடைத்தவுடன் அவர்களுக்கு நிரந்த நியமனங்களை வழங்கி, இரத்துச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். பதில் கடமை அடிப்படையில் நியமனம் பெற்றிருந்த அந்த உத்தியோகத்தர்களில் மேலும் மூன்று உத்தியோகத்தர்கள் HM-1-1 சம்பள வகுதியில் வருகின்றனர். PED/1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 2015.05.25 ஆம் திகதியிலிருந்து உத்தியோகபூர்வ வாகனங்களை அனுபவிப்பதற்கும் மற்றும் பொருத்தமான எரிபொருள் கொடுப்பனவுகளை பெறுவதற்கும் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆகையால், பதில் கடமை அடிப்படையில் அத்தகைய இரண்டு உத்தியோகத்தர்களுக்கு வாகனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன (பதில் கடமை அடிப்படையில் துணைச் சேவைகள் பிரிவுக்கு நியமிக்கப்பட்ட தலைவர் அவரின் சேவையிலிருந்து ஏற்கெனவே பதவியை இராஜனாமா செய்துள்ளார்).

(உ) 2017 ஆம் ஆண்டிற்கான ஒரு தரவு விகிதத்தைத் தயாரிப்பதற்கு போதியளவு காலம் தேவைப்படுகின்றது. இந்த சிறப்புப் பணியை நிறைவேற்றுவதற்கு போதியளவான ஊழியர்கள் இல்லை. ஆகையால், இந்த அதிகார சபையின் ஆட்சேர்ப்புத் திட்டத்தை தயாரிக்கும் பணி 2016 ஆம் ஆண்டிலிருந்து நிகழ்ந்து வருகின்றது. ஆகையால், இந்த நடபடிமுறையை மேற்கொள்ளும் நிமித்தம் மனித வளங்களைப் பெற்றுக் கொள்ள இயலாது.

4. <u>நிலையான அபிவிருத்தி</u>

4.1 <u>நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைதல்</u>

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தியும் மற்றும் சக்திப் பாதுகாப்பும் முக்கியமான அம்சங்களாகும். இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையினால் செயற்படுத்தப் படும் ஒட்டுமொத்த நிகழ்ச்சித் திட்டங்களும் மற்றும் கருத் திட்டங்களும் இந்த இரண்டு பிரிவுகளையும் உள்ளடக்கி மேற்கொள்ளப்படுகின்றன. ஆகையால், இந்த அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட சகல நிகழ்ச்சித் திட்டங்களும் அந்த நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு பங்களித்துள்ளன.

5. <u>பொறுப்புக் கூறும் தன்மையும் நல்லாட்சியும்</u>

5.1 பெறுகையும் மற்றும் ஒப்பந்த நடைமுறையும்

(அ) இந்த அதிகார சபையின் செயல் திட்டத்திற்கு இணங்க பெறுகைத் திட்டம் தயாரிக்கப் பட்டது. அத்தகைய செயல் திட்டத்தை செயற்படுத்துவதற்கு தேவையான ஏனைய காரண விடயங்களில் ஒரு சில குறைபாடுகள் இருந்திருந்தன. ஆகையால், கூறப்பட்ட அந்தத் திட்டத்தை முழுமையாக செயற்படுத்த முடியவில்லை. எனவே, இந்த குறைபாடு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையைக் கருத்திற் கொண்டு, இந்தத் திட்டத்தை தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத் தருகின்றோம்.

(ஆ) இந்த அதிகார சபையின் முழு ஆற்றலையும் உள்ளடக்கக் கூடிய வகையில் தேவையான ஊழியர்களை ஆட்சேர்த்துக் கொள்ள முடியவில்லை. ஆகையால், கூறப்பட்ட திட்டத்தை

உரிய நேரத்தில் செயற்படுத்துவதில் கடுமையான ஒரு பிரச்சினை எழுந்துள்ளது. குறித்த ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கான அங்கீகாரம் கிடைத்த பின்னர், தேவையான அளவுடைய ஊழியர்களை அதிகரித்த பின்னர், இந்த நிலையை சரிபடுத்திக் கொள்ள முடியும் என தயவுடன் அறியத் தருகின்றோம்.

(இ) இந்த அதிகார சபை பல பிரிவுகளில் தனது சேவைகளை வழங்குகின்றது. ஆகையால், இந்த அதிகார சபைக்கு பல நிறுவனங்களுடனும், அமைச்சுகளுடனும் மற்றும் ஏனைய தரப்புகளுடனும் சம்பந்தப்படுவதற்கு நேர்ந்துள்ளது. எனவே இந்த சிறப்புப் பணிகள் அடுத்த ஆண்டிற்கு முன்னர் தயாரிக்கப்படவுள்ள ஒரு வருடாந்த திட்டத்தினுள் அல்லது பெறுகைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்படுவதற்கானவையாகும். இத்தகைய வெளிக்கள ரீதியான செயற்பாடுகளை கட்டுப்படுத்த எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றோம்.

6. <u>முறைமைகளும் கட்டுப்பாடும்</u>

(அ) கணனிமயப்படுத்தப்பட்ட ஒரு பேரேட்டு முறைமையை அறிமுகப்படுத்த தேவையான ஒழுங்குகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த மென்பாகம் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் உரிய தரப்புகளினால் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

(ஆ)

(i) திறைசேரியுடன் கலந்துரையாடிய பின்னர், அத்தகைய நிதிகளை எதிர்காலத்தில் முதலீடு செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ii) உதாரணமாக நிருவாகப் பிரிவினால் வழங்கப்படும் அடிப்படை சம்பளம், சம்பளப் படியேற்றம், கொடுப்பனவற்ற லீவிலுள்ள ஊழியர்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் கொடுப்பனவுகள் முதலியன தொடர்பில் தரப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் நிதிப் பிரிவினால் சம்பளப் பட்டியல் தயாரிக்கப்படுகின்றது.

கனிஷ்ட நிபுணர் (நிதி) சம்பளங்கள் தொடர்பான சம்பளப் பட்டியல்களைத் தயாரித்து அத்தகைய பட்டியல்களைப் பரிசீலனை செய்வார். அத்தகைய விடயங்களைப் பரிசீலனை செய்வதில் ஒரு முகாமைத்துவ உதவியாளரின் சேவை பெறப்படுகின்றது. ஆகையால், அத்தகைய பட்டியல்களில் எதிர்காலத்தில், அவரின் கையொப்பத்தையும் இடும் வகையிலான ஒரு முறையியலைப் பின்பற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இத்தால் அறியப்படுத்துகின்றோம்.

நிதிப் பிரிவின் தலைவர் அடங்கலாக ஏனைய காசோலைகளில் கைச்சாத்திடுவதற்கு அதிகாரமுடைய ஒரு உத்தியோகத்தரினால் ஒவ்வொரு நேரத்திலும் சம்பளத்திற்கான காசோலைகளில் கையொப்பமிடப்படுகின்றது. இது ஒருபோதும் அந்த கனிஷ்ட (நிதி) நிபுணரினால் செய்யப்படுவதில்லை.

குறித்த ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திலிருந்து அங்கீகாரம் கிடைக்கும் வரை, இந்த சகல பணிகளையும் நிறைவேற்றுவதற்கு மேலும் இந்த இரண்டு உத்தியோகத்தர்கள் நிர்பந்திக்கப்பட்டுள்ளனர். கூறப்பட்ட அங்கீகாரம் கிடைத்த பின்னர், வெற்றிடம் நிலவுகின்ற பதவிகளுக்கு புதிய உத்தியோகத்தர்களை

ஆட்சேர்த்துக் கொள்வதன் மூலமாக இதனை முன்பிருந்த நிலைக்குக் கொண்டுவர முடியும்.

(iii) இந்த அதிகார சபை ஆரம்பிக்கப்பட்ட 2007 ஆம் ஆண்டிலிருந்து, நிதிப் பெறுமான அடிப்படையிலான காசோலகைளில் கையொப்பமிடும் ஒரு முறையியல் பின்பற்றப் படவில்லை. அதிகாரப் பகிர்வுப் பட்டியல் தயாரிக்கப்படுகின்ற நேரத்தில் இதனை சீர்செய்ய 2019 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(iv) தற்பொழுது நிறைவேற்றுத் தரமுடைய ஒரேயொரு பதவி இருப்பதால், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை செவ்வைபார்த்தல், காசோலைகளில் கையொப்பமிடுதல், மற்றும் சம்பளப் பட்டியல்களையும் வங்கி இணக்கல் கூற்றுக்களையும் தயாரித்தல் முதலிய அம்சங்களுடன் சம்பந்தப்பட்ட சகல பணிகளையும் நிறைவேற்றுவதற்கு கனிஷ்ட நிபுணர் (நிதி) நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார். குறித்த ஆட்சேர்ப்புத் திட்டம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் உதவியுடன் தற்பொழுது தயாரிக்கப் பட்டு வருகின்றது. அத்தகைய ஆட்சேர்புத் திட்டம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், அதனையடுத்து நிலவும் வெற்றிடங்களை நிரப்பி, இந்தப் பகிர்ந்தளிப்பு பணிகளை சரியாக நிறைவேற்ற முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(v) உங்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சகல நாளாந்த பதிவுகளும் திரு தசநாயக்க பிரிவுத் தலைவராக இருந்த காலப் பகுதியில் அவரினால் கையொப்பமிடப்பட வேண்டியிருந்த உறுதிச்சீட்டுக்களாகும். எனினும், அவை கணக்கீடு செய்யப்பட்ட போது, அவர் அவரின் கையொப்பத்தை இடுவதற்கு மறுத்தார். ஆகையால், அவற்றை சீர்செய்த பின்னர், அவை நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட நேரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. குறித்த அந்த நாளாந்த பதிவுகள் தயாரிக்கப்படும் நாளிலேயே எதிர்காலத்தில் தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

(இ) இலங்கை மின்சார சபை மாத்திரமே எமது அதிகார சபைக்கு பொறுப்புடைய கடன் தரப்பாகும். அத்தகைய நிறுவனங்களுக்கு கடிதங்களை அனுப்புவதன் மூலம் ஏனைய கிடைக்க வேண்டிய தொகைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஈ) இந்த அதிகார சபையின் ஆட்சேர்ப்புத் திட்டம் முடிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பின்னர், செயலாற்றுகை அடிப்படையில் ஒரு மனித வள அபிவிருத்தித் திட்டத்தையும் ஒரு பயிற்சித் திட்டத்தையும் தயாரிப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

(உ) குறித்த ஆண்டு காலப் பகுதியினுள், இந்த அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் பதவி பல தடவைகளில் மாற்றப்பட்டுள்ளது. அதன் விளைவாக, குறித்த நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்ச்சியாக செயற்படுத்துவது கடினமாகும். இந்த நிலைமை அவை திட்டமிடப்பட்டுள்ளவாறு கருத் திட்டம் சார்ந்த செயற்பாடுகளை வினைத் திறன் வாய்ந்ததாக மேற்கொள்வதில் பாதகமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

(ஊ) சொத்துக்களின் முகாமைத்துவம் தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் மீது கவனம் செலுத்தப்படும். முடியுமான வரை

அத்தகைய விடயங்களை வினைத் திறன் வாய்ந்ததாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(எ) இந்த அதிகார சபையின் புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தில் தனியான ஒரு தகவல் தொழில் நுட்பப் பிரிவு உள்ளடக்கப்பட்டுள்ளது. அத்தகைய பிரிவு தாபிக்கப்பட்ட பின்னர் இது தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஏ) 2018 ஆம் ஆண்டிற்கான எரிபொருள் தொடர்பான இணக்கல் அறிக்கை தயாரிக்கப் பட்டு அதிகார சபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பொருத்தமான இணக்கல் நடபடிமுறையை வருடாந்தம் மேற்கொள்ளும் பொருட்டு எதிர்காலத்தில் தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தினது 14 (2) (இ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி தயாரித்து வழங்கும் கணக்காய்வு அறிக்கை

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதிற்கான ஐந்தொகை மற்றும் அந்தத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரித்துக்கள் மாற்றல் பற்றிய கூற்று, மற்றும் காசுப் பாய்ச்சல்கள் பற்றிய கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய தெளிவுபடுத்தல் பற்றிய விளக்கங்கள் என்பவற்றின் சுருக்கங்கள் அடங்கிய 2017 ஆம் ஆண்டின் திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை சட்டத்தின் 50 (3) ஆம் பிரிவு ஆகியவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும், இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ளடங்கிய ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. குறித்த நிதி அதிகார சட்டத்தின் 14 (2) (இ) பிரிவின் பிரகாரம், இந்த அதிகார சபையின் வருடாந்த அறிக்கையுடன் சேர்த்து வெளிப்படுத்த வேண்டும் என நான் கருதும் எனது அபிப்பிராயங்களும் மற்றும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.2. நிதிக் கூற்று தொடர்பாக முகாமைத்துவத்திற்கு இருக்கின்ற பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்களை, இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமான விதத்தில் அதனை சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகளினால் அல்லது பொருண்மையான பிறழ்வுகளினால் ஏற்படக் கூடிய பொய்யான கூற்றுக்கள் இன்றி போதியளவு உண்மையான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டை நிர்ணயித்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்புக்களாகும்.

1.3. கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வு அபிப்பிராயத்தின் அடிப்படையில், இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் ஒரு அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொப்பாகும். என்னால், உன்னத கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களை (ISSAI 1000-1810) தழுவி, இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க, எனது கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. ஒழித்துக்கட்டல் தொடர்பான கோட்பாடுகளின் தேவைப்பாடுகள் அனுசரிக்கப்படுகின்றனவா மற்றும் நிதிக் கூற்றுக்கள் போதியளவு பொய்யான கூற்றுக்கள் இன்றி காணப்படுகின்றனவா என்பது தொடர்பில் நியாயமான ஒரு உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, கணக்காய்வை திட்டமிட்டு செயற்படுத்துவதற்கு நான் இந்த நியமங்களை எதிர்பார்க்கின்றேன்.

நிதிக் கூற்றுக்களில் காணப்படும் பெறுமானங்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் தொடர்பான கணக்காய்வுக்கான சான்றுகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளும் நிமித்தம், நடைமுறையை செயற்படுத்தல் விடயம் கணக்காய்வில் உள்ளடக்கப்படுகின்றது. தேந்தெடுத்த நடைமுறைகள், மோசடிகளினால் அல்லது பொருண்மையான பிறழ்வுகளினால் நிதிக் கூற்றுக்களில் உருவாகக் கூடிய போதியளவு பொய்யான கூற்றுக்களின் அவதான விடயங்களை மதிப்பிடுவது அடங்கலாக கணக்காய்வாளரினது தீர்ப்பின் அடிப்படையில் அமைந்திருக்கும். அத்தகைய அவதான விடயங்களை மதிப்பிடும் போது, சமயோசித ரீதியில் உகந்த கணக்காய்வு நடைமுறையை திட்டமிடும் பொருட்டு, இந்த அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கும் மற்றும் நியாயமான முறையில் அதனை சமர்ப்பிப்பதற்கும் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடு கணக்காய்வாளரினால் கருத்திற் கொள்ளப்பட்டாலும், இந்த அதிகார சபையினது உள்ளகக் கட்டுப்பாட்டின் ப ய ன் த

கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையினது மூலப்பிரதி சிங்களப் பிரதியாகும். ஆகையால், மொழிபெயர்ப்புகளுக்கு இடையில் ஏதாவது ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள வாசகம் மேலோங்கி நிற்கும்.

கு தன்மை தொடர்பில் ஒரு அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு மற்றும் பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை ஆகியவற்றின் மதிப்பீடு மட்டுமன்றி நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பணம் தொடர்பான மதிப்பீடும் கணக்காய்வில் உள்ளடக்கப்படும். கணக்காய்வின் நோக்கெல்லையையும் மற்றும் அளவையையும் தீர்மானிக்கும் பொருட்டு, 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் பிரிவுகளினால் கணக்காய்வாளர் அதிபதிற்கு அதிகாரத்தத்துவங்கள் உரித்தளிக்கப்படுகின்றன.

எனது கணக்காய்வுக்கான ஒரு அடிப்படையை முன்வைக்கும் பொருட்டு, என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுக்கான சான்றுகள் போதுமானவையாகவும் மற்றும் பொருத்தமானவையாகவும் காணப்படுகின்றன என நான் நம்புகின்றேன்.

1.4. தகுதி வாய்ந்த அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் தகுதிபெறுகின்றது.

2. நிதிக் கூற்றுக்கள்

2.1. தகுதி வாய்ந்த கணக்காய்வு அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க, நிதிக் கூற்றுக்களிலிருந்து, 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதிற்கு இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் நிதி நிலை மற்றும் அந்த திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி சார்ந்த செயற்பாடுகள், மற்றும் காசுப் பாய்ச்சல்கள் என்பவற்றின் உண்மையான மற்றும் நியாயமான ஒரு நிலை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2. நிதிக் கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயம்

2.2.1. நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆம் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் பற்றிய சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், நிதி ஆண்டு முடிவடைந்து, 60 நாட்களுக்குள், நிதிக் கூற்றுக்களும் மற்றும் நகல் வருடாந்த அறிக்கையும் கணக்காய்வாளர் அதிபதிற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்றிருந்த போதிலும், மீளாய்வு ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் அதிபதிற்கு சமர்ப்பிக்கப்பட்ட போது, இந்த அதிகார சபையினால், இரண்டு தடவைகளும், அதாவது 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதியும் மற்றும் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ஆம் திகதியும் முறையாக பணிப்பாளர் சபையின் அனுமதி இன்றி, நகல் அறிக்கையும் நிதிக் கூற்றுக்களும் சமர்ப்பிக்கப்பட்டதால், அவை நிராகரிக்கப்பட்டன. அதன் பின்னர், உரியவாறு நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பது 11 மாதங்கள் கழிந்து, அதாவது 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 17 ஆம் திகதியாகும்.

2.2.2. இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்கள்

07 ஆம் இலக்க இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க, முழுமையாக தேய்மானம் கணிப்பிடப்பட்ட, ஆனாலும் மேலும் பாவனையில் ஈடுபடுத்தக் கூடிய சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பன தொடர்பில் வெளிப்படுத்தல் செய்ய வேண்டும் என இருந்த போதிலும், இந்த அதிகார சபையினால் 2017 ஆம் ஆண்டு இறுதியளவில், முழுமையாக தேய்மானம் கணிப்பிடப்பட்டுள்ள 382,274,438 ரூபா பெறுமதியான சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பன தொடர்பில் அத்தகைய

வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. அதே போன்று, ஒரு மதிப்பீட்டுத் தவறு இருந்திருந்தால், அந்த மதிப்பீட்டு ரீதியான தவறு 03 ஆம் இலக்க இ.அ.து.க.நி. இன் பிரகாரம், சீராக்கப்பட்டு மீண்டும் தகுதியான முறையில் கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3. கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழ்காணும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் அதிபதியின் கணக்காய்வு அறிக்கையின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பின்வரும் குறைபாடுகள் 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியிலும் கூட சீராக்கப்படாமை அவதானிக்கப்பட்டது.

(i) இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையினால் அதற்கு ஒரு அலுவலகக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிக்கும் பொருட்டு, நீண்டகால குத்தகையின் அடிப்படையில், 45,856,451 ரூபா செலவிடப்பட்டு, 2015 ஆம் ஆண்டில் ஒரு காணித் துண்டு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அந்தக் காணித் துண்டை குத்தகைக்கு பெற்றுக் கொள்வது தொடர்பில், சக்தி நிதியத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 47,000,000 ரூபா நிதி, மூலதனக் கிடைப்பனவாக அன்றி, மிகைக் கட்டணக் கிடைப்பனவாக இனங்காணப்பட்டு, 2015 ஆம் ஆண்டின் நிதி சார்ந்த செயலாற்றுகைக் கூற்றில், பிற வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக, இந்த ஆண்டின் மிகை, 47,000,000 ரூபாவால் மிகைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ii) அதிகார சபையினால் மூலதனச் செலவினத்தின் நிமித்தம் பெற்றுக் கொள்ளப்பட்ட 60,000,000 ரூபா நிதியிலிருந்து செலவு செய்யப்பட்ட மூலதனச் செலவு கழிக்கப்பட்டு, நிலுவை மிகைக் கட்டண வருமானமாக நிதி சார்ந்த செயலாற்றுகைக் கூற்றில் வரவுவைக்கப்பட்டிருந்தது. இதில் கட்புலனாகாத சொத்துக்களின் கொள்வனவு தொடர்பில் செய்யப்பட்ட 8,345,683 ரூபா செலவுக்கு பதிலாக, தவறான முறையில் பொய்யாக 9,242,483 ரூபா கழிக்கப்பட்டு, எஞ்சிய 41,247,949 ரூபா, நிதி சார்ந்த செயலாற்றுகைக் கூற்றில் வரவுவைக்கப்பட்டதன் காரணமாக, 896,800 ரூபா குறைவாக நிதி சார்ந்த செயலாற்றுகைக் கூற்றில் வரவுவைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக, 2016 ஆம் ஆண்டில், மிகை அந்தப் பெறுமானத்திலேயே, குறைவாக கணக்குக் காட்டப்பட்டிருந்தது. குறித்த மீளாய்வு ஆண்டிலும் கூட, இதனை சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கடன்களை மீளறவிடும் பொறுப்பு அதிகார சபைக்கு ஒப்படைக்கப்படாத, 51,800,357 ரூபா தொகை, அதாவது ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் நிலைபெறுதகு சக்திப் பிரிவுக் கட்டம் 2 கருத் திட்டம் மற்றும் தூய சக்தி மற்றும் மின்சார வலையமைப்பு வினைத்திறன் மேம்பாட்டுக் கருத் திட்டம் ஆகிய கருத் திட்டங்களின் கீழ், வழங்கப்பட்டிருந்த கடன், இந்த அதிகார சபையினால் பெற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கடனாக, நடைமுறையல்லாத பொறுப்புக்களின் கீழ் நிதி நிலைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(உ) ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் நிலைபெறுதகு சக்திப் பிரிவுக் கட்டம் 2 கருத் திட்டம் மற்றும் தூய சக்தி மற்றும் மின்சார வலையமைப்பு வினைத்திறன் மேம்பாட்டுக் கருத் திட்டம் ஆகிய கருத் திட்டங்களுக்கு என தனியான ஒரு கருத் திட்டக் கணக்கு தயாரிக்கப்பட்டாலும், அந்தக் கருத் திட்டங்களுடன் தொடர்புடைய 135,957,929 ரூபா வருமானம் மற்றும் 136,200,923 ரூபா செலவு ஆகியன, 2017 ஆம் ஆண்டின், அதிகார சபையினது வருமானக் கூற்றில், இயக்கச் செயற்பாடு சாராத வருமானம் மற்றும் செலவினம் என கணக்குக் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) குறித்த மீளாய்வு ஆண்டிற்கு, தேய்மான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போது, இந்த அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட

தேய்மான ஏற்பாடுகள், குறித்த கொள்கைகளுக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(எ) குறித்த மீளாய்வு ஆண்டின் போது, சக்தி நிதியத்திற்கு வரவுவைக்க வேண்டிய 29,541,196 ரூபா மற்றும் சக்தி உத்தரவாத நிதியத்திற்கு வரவுவைக்க வேண்டிய 7,963,788 ரூபா வட்டி வருமானம் ஆகியன, நிதி சார்ந்த செயலாற்றுகைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த காரணத்தால், குறித்த ஆண்டின் மிகை 37,504,984 ரூபாவால் அதிகமாக மிகைத்துக் காட்டப்பட்டிருந்தது.

2.3. தெளிவுபடுத்தப்படாத வித்தியாசங்கள்

உத்தரவாத நிதியத்தின் 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதிற்கான நிலுவை மற்றும் அந்த திகதிற்கான முதலீட்டு நிலுவை ஆகியவற்றுக்கு இடையில் 372,333 ரூபா தெளிவுபடுத்தப்படாத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

2.4. கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டில், 09 மாகாணங்கள் தொடர்பாக, வலயக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு, அறிவு முகாமைத்துவ கருத் திட்டத்தின் கீழ் 13,348,087 ரூபா முற்பணம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அதில், 6,882,412 ரூபா முற்பண நிதியை 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலும், தீர்ப்பனவு செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வு ஆண்டு இறுதியில், பிற கொடுப்பனவுகளாக, கணக்குகளில் காட்டப்பட்டிருந்த 7,280,210 ரூபா தொகைக்கு இடையில், 5 வருடத்திற்கு அதிக காலமாக இருந்து வருகின்ற 3,052,237 ரூபா தொகை மற்றும் 4,227,873 ரூபா செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளில் சமர்ப்பிக்கப்படாத 173,696 ரூபா பெறுமதியான காசோலை அடங்கலாக 01 வருடம் முதல் 04 வருடம் வரை முன்கொணரப்பட்டிருந்தன. இந்தத் தொகைகளை தீர்ப்பனவு செய்து கொள்வதற்கு அல்லது அதன் நிமித்தம் வேறு ஒரு பொத்தமான நடவடிக்கையை எடுப்பதற்கு இந்த அதிகார சபை குறித்த மீளாய்வு ஆண்டு முடிவடையும் வரையிலும் எந்தவிதமான ஒழுங்குகளையும் மேற்கொண்டிருக்கவில்லை. திரண்ட செலவினமாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்த 11,842,517 ரூபா தொகையில், 7,322,281 ரூபா 05 வருடங்களுக்கு அதிக காலம் முன்கொணரப்பட்டிருந்தாலும், அந்தத் தொகையை தீர்ப்பனவு செய்து கொள்வதற்கு அல்லது வருமானத்திற்கு வரவுவைப்பதற்கு அதிகார சபையினால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.5. சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் ஒவ்வாமை

கணக்காய்வின் போது, அவதானிக்கப்பட்ட ஒவ்வாமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு:

சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான குறிப்பு	ஒவ்வாத சந்தரப்பங்கள்
(அ) திறைசேரி சுற்றறிக்கை	
(i) 1978 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை	குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம், 1,929,329,521 ரூபா பெறுமதியான நிலையான சொத்துக்களுக்கான பட்டியல் முறையாக இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.
(ii) 2002 ஆம் ஆண்டு 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை	6,631,346 ரூபா பெறுமதியான கணனிகள், கணனித் துணைப் பாகங்கள் மற்றும் கணனி மென்பாகங்கள் என்பன தொடர்பில் நிலையான சொத்துக்கள் பட்டியல் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொதுத் தொழில் முயற்சிகள் பற்றிய சுற்றறிக்கை 2003 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க சுற்றறிக்கை	 நிதிக் கூற்றுக்களுடன் சேர்த்து நகல் வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் அதிபதிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3. நிதி சார்ந்த மீளாய்வு

3.1. நிதி சார்ந்த பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்கு இணங்க, மீளாய்வு ஆண்டிற்கு, அதிகார சபையின் நிதி சார்ந்த பெறுபேறு 51,702,295 ரூபா மிகையாக இருந்தது. அதனுடன் ஒப்பிடும் போது, கடந்த வருடத்தில் அதையொத்த மிகை 6,463,693 ரூபாவாக காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, மீளாய்வு ஆண்டின் நிதி சார்ந்த பெறுபேறு, 45,238,602 ரூபாவால் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த அறிக்கையின் 2.1.3 (ஔ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தப் பெறுமானம் 37,504,984 ரூபா தவறான கணக்கீடு, இவ்வாறு நிதி சார்ந்த பெறுபேற்றில் அதிகரிப்பு ஏற்பட்டதற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

3.2. பங்களிப்பு

மீளாய்வு ஆண்டினதும் மற்றும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி சார்ந்த பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்யும் போது, தொடர்ச்சியாக மிகை ஏற்பட்டிருந்தாலும், 2013 ஆம் ஆண்டு மற்றும் 2014 ஆம் ஆண்டு ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், அது நூற்றுக்கு 68 வீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும் ஊழியர்களின் சிரமம், அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட வரி, மற்றும் தேய்மானம் என்பவற்றை கருத்திற் கொள்ளும் போது, அதிகார சபையின் 2014 ஆம் ஆண்டினுள், 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, பங்களிப்பின் வீழ்ச்சி, நூற்றுக்கு 5 வீதமாக காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டில், அது 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, நூற்றுக்கு 18 வீதத்தினால் அதிகரித்திருந்தது. 2016 ஆம் ஆண்டின் பங்களிப்பு, 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, நூற்றுக்கு 22 வீதத்தினால் குறைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. 2.1.3 (அ) (i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, 2015 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றில் இடம்பெற்ற தவறான கணக்கீடு, இதற்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தது. தேய்மானம் 32 மில்லியன் ரூபாவால் குறைந்திருந்தமை மற்றும் 2.1.3 (ஔ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தவறான கணக்கீட்டின் காரணமாக, மிகை 45 மில்லியன் ரூபாவால் அதிகரித்திருந்தமை, மீளாய்வு ஆண்டின் பங்களிப்பு, கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது, நூற்றுக்கு 5 வீதத்தினால் அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்திருந்தன. எவ்வாறாயினும், தவறான கணக்கீட்டுப் பெறுமானத்தை நீக்கி கணக்கீடு செய்யும் போது, 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2017 ஆம் ஆண்டின் பங்களிப்பு நூற்றுக்கு 11 வீதத்தினால் குறைந்துள்ளது.

4. இயக்கச் செயற்பாடு சார்ந்த மீளாய்வு

4.1. முகாமைத்துவ செயற்பாடுகள்

மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பணியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முற்பணம் 15,948,876 ரூபா பெறுமதியான 8 செயற்பாடுகள் பல ஆண்டுகளாக செயற்படுத்தப்படாதிருக்கின்றமை மற்றும் அவற்றின் நிமித்தம் எந்த விதமான செலவுகளும் செய்யப்படாதிருத்தல் ஆகிய விடயங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவு செய்வதற்கு அல்லது அவை தொடர்பாக நடவடிக்கையை எடுப்பதற்கு அதிகார சபை எந்த விதமான ஒழுங்குகளையும் மேற்கொண்டிருக்கவில்லை.

5. பாதீட்டுக் கட்டுப்பாடு

கீழ்காணும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வரவுசெலவுத்திட்டத்தின் மூலம், மூலதனச் செலவுகளுக்கு என 13,000,000 ரூபா நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தாலும், அந்த நிதியில் சுமார் 5,674,522 ரூபா செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, மூலதன ஒதுக்கீடுகளில் 7,325,478 ரூபா நிதி அதாவது நூற்றுக்கு 56 வீதம், உரிய கருமங்களின் நிமித்தம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கப்பட்டிருக்காவிட்டாலும், மேற்குறித்த எஞ்சிய நிதியேற்பாடுகளிலிருந்து கட்டிடங்களையும் மற்றும் காணியையும் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, 3,701,140 ரூபா செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வு ஆண்டினது 04 மூலதனக் கருத் திட்டங்களுக்குரிய வரவுசெலவுத்திட்ட செலவினம் 381,762,247 ரூபா மற்றும் உண்மையான செலவினம் 133,204,389 ரூபா ஆகியவற்றின் காரணமாக, குறித்த நிதியேற்பாடுகளில் அதாவது நூற்றுக்கு 65 வீதம் மீதமாகவுள்ளமை அவதானிக்கப்பட்டது. ஆகையால், வரவுசெலவுத்திட்ட ஆவணம் பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

6. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும் தொடர்பான குறைபாடுகள் பற்றி அவ்வப்பொழுது, அதிகார சபையின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டது. கீழ்காணும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் பிரிவில் விசேஷட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்கீடு

(அ) கட்புலனாகாத சொத்துக்களின் தேய்மானம் கணிப்பிடுவது தொடர்பான குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பேரேடு இணக்கல் செய்யப்பட்டு, ஆண்டு இறுதியின் நிலுவை சுட்டிக் காட்டப்பட்டிருக்காத சந்தரப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(இ) பேரேட்டில் பதியப்பட்ட கணக்கீட்டுக் குறிப்புகள் அநேகமான சந்தர்ப்பங்களில் பதிவழிக்கப்பட்டிருந்தன. எனினும், அவற்றில் குறுங்-கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை அல்லது அந்தக் குறிப்புகள் மீண்டும் பதியப்பட்ட குறிப்புகளாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017 ஆம் ஆண்டின் நாளாந்த உறுதிச்சீட்டுக்கள் பரிசீலனை செய்யப்பட்டதற்கு மற்றும் அத்தகைய பரிசீலனை பின்பற்றப்பட்டதற்கு கையொப்பமிடப்பட்டிருக்காத பல சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. நாளாந்தக் குறிப்புகள் சான்றுபடுத்தப்பட்டு, ஆவணங்கள் நாளாந்த உறுதிச்சீட்டுக்களுடன் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

<u>2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவு அடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 14(2) (இ) பிரிவின் கீழ் தயாரித்து அனுப்பப்பட்டிருக்கின்ற கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான பதில்கள்</u>

2. நிதிக் கூற்றுக்கள்

2.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

இந்த அதிகார சபையின் ஒரு உள்ளக நிருவாகப் பலவீனமாக இனங்காணப் பட்டுள்ள நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல் எனும் தலைப்பின் கீழ் சுட்டிக் காட்டப்பட்டுள்ள கணக்குகள் நிறைவு செய்யப்பட்டாலும் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டிருக்கின்றமை என்ற விடயம் இந்த சபையினது ஊழியர்களின் பற்றாக்குறையினால் ஏற்பட்டதாகும். நிதிப் பிரிவில் ஒரு பகுதித் தலைவர் இல்லாமையானது இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல் 2018 ஆம் ஆண்டு இரண்டு சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டாலும், போதியளவில் பணிப்பாளர்கள் சபையின் அனுமதி பூர்த்தி செய்யப்படவில்லை என்பது குறிப்பிடப்பட்டது. ஆகையால், சரியான முறையில் அனுமதியின் நிமித்தம் குறிப்பீடு செய்யப்படும் போது கணிசமான அளவு காலம் எடுத்தது. சரியான அனுமதிகளுடன் நிதிக் கூற்றுக்கள் 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் கணக்காய்வாளர் அதிபதிற்கு அனுப்பப்பட்டுள்ளன. மேற்குறித்த தாமதத்தையும் தவறையும் நிவர்த்தி செய்து கொள்வதற்கு இந்த அதிகார சபை தேவையான நடவடிக்கையை எடுத்துள்ளது.

2.2.2

07 ஆம் இலக்க இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் முழுமையாக தேய்மான ஏற்பாடு செய்யபட்ட எனினும் மேலும் பாவிக்கக் கூடிய சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றினது அளவுத்திறன் பெறுமானங்கள் கணிக்கப்பட்டு வருகின்றன. 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் இதை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2015 ஆம் ஆண்டில் சக்தி நிதியத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 47,000,000 ரூபா நிதியை அடிப்படையாகக் கொண்டு இந்த அதிகார சபைக்கு அலுவலக கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு என குத்தகை அடிப்படையில் ஒரு காணித் துண்டு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அந்த நிதி பெற்றுக் கொள்ளப்பட்டதன் பேரில் வரும் மிகைக்கட்டணம் ஒரு கிடைப்பனவாக கணக்கிடப்பட்டுள்ளதால், 2015 ஆம் ஆண்டின் நிதி சார்ந்த வருமானம் 47,000,000 ரூபா அளவால் அதிகரித்து காட்டப்பட்டுள்ளது.

கணக்காய்வில் குறிப்பிடப்பட்டது போல், மிகைக்கட்டணம் ஒரு கிடைப்பனவாக இனங்காணப்பட்டு, 2105 ஆம் ஆண்டின் நிதி செயலாற்றுகைக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பெறுமானத்தினால் 2015 ஆம் ஆண்டின் நிதிப் பெறுபேறுகளில் அதிகமாக மதிப்பிடப்பட்டுள்ள 47,000,000 ரூபா தொகையை, சரியான முறையில் நிலை மாற்றல் வித்தியாசக் கூற்றுக்களினூடாக எதிர்வரும் நிதி செயலாற்றுகை கூற்றுக்கு சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

நிலைபெறுதகு வலு அதிகார சபையின் கணக்குகளை சீராக்குகின்ற ஏட்டுக் குறிப்புகள்

தேறிய மிகை (Net surplus) பற்று - ரூ. 47,000,000
செலுத்த வேண்டிய கணக்கு - சக்தி நிதியம் (Energy Fund) பற்று-ரூ. 47,000,000

ii) கணக்காய்வாளர் அதிபதியின் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப் பட்டுள்ள 2016 ஆம் ஆண்டின் இறுதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட திறைசேரியின் நிதிக் கிடைப்பனவுகள், வருமானமாக இங்காணப்பட்ட நேரத்தில், ஏற்பட்டிருந்த ஒரு கணக்கீட்டுத் தவறினால் முதலீடு சார்ந்த சொத்துக்களினது கொள்வனவுகளின் பெறுமானம் 896,800 ரூபா மிகையாக கணக்கிடப்பட்டதால், 2016 ஆம் ஆண்டிற்கான நிதி சார் செயலாற்றுகை 896,800 ரூபா தொகையினால் குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

குறைவாக மதிப்பிடப்பட்டுள்ள அந்தத் தொகையானது 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களிலும் சீராக்கப்படவில்லை. ஆகையால், 2018 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்ககளில் அந்தத் தவறை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

சீராக்குகின்ற ஏட்டுக் குறிப்புகள்

- பிற்போடப்பட்ட மானியம் - 2016 பற்று - ரூ.896,800
- தேறிய மிகை கடன் - ரூ. 896,800

ஈ) ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற நிலைபெறுதகு சக்திப் பிரிவுக் கட்டம் 2 கருத் திட்டமானது, தூய சக்தி மற்றும் மின்சார வலையமைப்பு மேம்பாட்டுக் கருத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடனின் அடிப்படையில் அதிகார சபையினால் செயற்படுத்தப்பட்டிருந்த ஒரு கருத் திட்டமாகும். இது நடைமுறையல்லாத பொறுப்பின் கீழ் நிதிக் கூற்றில் காட்டப்பட்டிருந்ததை கணக்காய்வாளர் அதிபதி சுட்டிக் காட்டியவாறு 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களிலிருந்து பதவழிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

உ) கருத் திட்டங்களுக்குரிய வனமானத்தையும் மற்றும் செலவினத்தையும் கூட கணக்காய்வாளர் அதிபதி சுட்டிக் காட்டியுள்ளவாறு வருமான கூற்றிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஊ) 2017 ஆம் ஆண்டிலும் முன்னைய ஆண்டுகளில் பின்பற்றப்பட்ட தேய்மானக் கொள்கைகள் பின்பற்றப்பட்டன. 2017 ஆம் ஆண்டிற்கு தேய்மான ஏற்பாடு செய்யப்பட்ட நேரத்தில், இந்த அதிகார சபையின் முழுமையாக ஆண்டு ரீதியாக தேய்மான ஏற்பாடு செய்யப்பட வேண்டிய சொத்துக்கள் பற்றிய விபரங்களை பெற்றுக் கொள்வதிலுள்ள கஷ்டத்தின் காரணமாக முன்னைய ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட தேய்மான ஏற்பாட்டு அடிப்படையில் தேய்மானம் கணிப்பிடப்பட்டது. இந்த அதிகார சபையின் சொத்துக்களினது பட்டியலை இற்றைப்படுத்தும் விடயம் மேற்கொள்ளப் படுவதால், இது 2019 ஆம் ஆண்டளவில் படிப்படியாக சரியான நிலைக்கு மாறும்.

எ) மீளாய்வு ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கு வட்டி வருமானமாக 37,504,984 ரூபா தொகை செயலாற்றுகைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த இனங்காணப்பட்ட நிதித் தொகை, சரியான நிலைமாறல் விதியாசங்கள் கூற்றினூடாக சக்திப் பாதுகாப்பு நிதியத்திற்கும், உத்தரவாத நிதியத்திற்கும் வரவுவைக்கப்பட்டுள்ளது. சரியான முறையில், வட்டி வருமானம் வேறு பிற வருமானத்தின் கீழ், இந்த அதிகார சபையினது வருமான அளவுக்கு/நிதி சார் செயலாற்றுகை அளவுக்கு எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும். அதற்கான காரணம் யாதெனில், இந்த அதிகார சபையின் நிதியினூடாக இந்த அதிகார சபைக்கு கிடைக்க வேண்டிய வட்டி வருமானமாகும். அது உருவாகியிருப்பது சக்தி நிதியத்தினூடாகவும் மற்றும் உத்தரவாத நிதியத்தின் நிதிப் பாவனை ஊடாகவும் என்பதால், மொத்த வருமானம் நிலைமாறல் வித்தியாசங்கள் கூற்றினூடாக உரிய நிதியத்தின் கணக்குகளுக்கு வரவுவைக்கப்பட்டதால், நிதிக் கூற்றில் இது சரியான முறையில் பதியப்பட்டுள்ளது என்பது எமது அபிப்பிராயமாகும்.

மேலும், இந்த அதிகார சபையின் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மூலமான சம்பாத்தியம்/சக்தி முகாமைத்துவ மூலமான சம்பாத்தியம் ஆகியவை பிற வருமானமாக இனங்காணப்பட்டுள்ள வட்டி வருமானம் இந்த அதிகார சபையின் நிதிப் பாய்ச்சலினூடாக உருவாகும் வருமானமாகும். முன்னைய நிதி ஆண்டுகளில், அந்தத் தொகை நிதி சார்ந்த செயலாற்றுகைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக, வருமானம்/நிதி சார்ந்த பெறுபேறுகள் குறைவாகக் கணக்கிடப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, மொத்த வருமானம் நிதிக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. சரியான முறையில் ஈட்டிய அந்த வருமானம், நிலைமாறல் வித்தியாசங்கள் கூற்றினூடாக உத்தரவாத நிதியத்திற்கும், இந்த அதிகார சபையின் நிதிக்கும் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.3 கணக்காய்வு அறிக்கையில், தெளிவுபடுத்தப்படாத வித்தியாசங்களின் கீழ் சுட்டிக் காட்டப்பட்டுள்ள உத்தரவாத நிதியத்தின் நிலுவை மற்றும் முதலீட்டு நிலுவை ஆகியவற்றுக்கு இடையில் காணப்படும் 372,333.00 ரூபா தொகை வித்தியாசத்தை 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.4 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) கல்வி வலய நிகழ்ச்சித் திட்டத்திற்கு என பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள முற்பண நிதித் தொகையை தீர்ப்பனவு செய்யும் விடயம் மந்தமாக நிகழ்ந்து வருவதால், அதனை முறைப்படுத்தும் பொருட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தீர்ப்பனவுகளை செய்யத் தவறியிருக்கின்ற நிறுவனங்களுக்கு ஏற்கெனவே கடிதம் மூலம் இது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. அதிகமானவை அது தொடர்பில் காட்டியிருந்த அக்கறையின் அடிப்படையில், முற்பணங்கள் தீர்ப்பனவு செய்து கொள்ளப்பட்டன. மேலும் தீர்ப்பனவு செய்து கொள்ளவுள்ள முற்பண நிதிகள் தொடர்பில் மீண்டும் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்து, அதன் போதும், தீர்ப்பனவு செய்யப்படவில்லை எனில், அதிகார சபையினது AMC குழுவினூடாக மேல் நடவடிக்கைகளின் நிமித்தம் அறிவுரைகளை நாட எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஆ) 5 வருடங்களுக்கும் அதிக காலம் நிலுவையாக இருந்து வருகின்ற ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் திரண்ட செலவினம் என்பன தொடர்பாக உரிய விநியோகத் தரப்புகளுக்கு இணக்கல் தொடர்பான ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்த நிதித் தொகைகளை நீர்ப்பனவு செய்து கொள்ள தேவையான நடவடிக்கை எடுப்பட்டு வருகின்றது.

2.5 சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் ஒவ்வாமை

(அ) திறைசேரியின் சுற்றறிக்கை

(i) திறைசேரியினது சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பட்டியல் இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றது.

(ii) கணனிகளின் துணைப் பாகங்கள் மற்றும் மென்பாகங்கள் என்பன தொடர்பான சொத்துக்கள் பட்டியலும் பேணப்படுகின்றது.

3.0 நிதிப் மீளாய்வு

3.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வு ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கு வட்டி வருமானமாக 37,504,984 ரூபா தொகை செயலாற்றுகைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த இனங்காணப்பட்ட நிதித் தொகை, சரியான நிலைமாறல் விதியாசங்கள் கூற்றினூடாக சக்திப் பாதுகாப்பு நிதியத்திற்கும், உத்தரவாத நிதியத்திற்கும் வரவுவைக்கப்பட்டுள்ளது. சரியான முறையில், வட்டி வருமானம் வேறு பிற வருமானத்தின் கீழ், இந்த அதிகார சபையினது வருமான அளவுக்கு/நிதி சார் செயலாற்றுகை அளவுக்கு எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும். அதற்கான காரணம் யாதெனில், இந்த அதிகார சபையின் நிதியினூடாக இந்த அதிகார சபைக்கு கிடைக்க வேண்டிய வட்டி வருமானமாகும். அது உருவாகியிருப்பது சக்தி நிதியத்தினூடாகவும் மற்றும் உத்தரவாத நிதியத்தின் நிதிப் பாவனை ஊடாகவும் என்பதால், மொத்த வருமானம் நிலைமாறல் வித்தியாசங்கள் கூற்றினூடாக உரிய நிதியத்தின் கணக்ககளுக்கு வரவுவைக்கப்பட்டதால், நிதிக் கூற்றில் இது சரியான முறையில் பதியப்பட்டுள்ளது என்பது எமது அபிப்பிராயமாகும்.

மேலும், இந்த அதிகார சபையின் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மூலமான சம்பாத்தியம்/சக்தி முகாமைத்துவ மூலமான சம்பாத்தியம் ஆகியவை பிற வருமானமாக இனங்காணப்பட்டுள்ள வட்டி வருமானம் இந்த அதிகார சபையின் நிதிப் பாய்ச்சலினூடாக உருவாகும் வருமானமாகும். முன்னைய நிதி ஆண்டுகளில், அந்தத் தொகை நிதி சார்ந்த செயலாற்றுகைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக,

வருமானம்/நிதி சார்ந்த பெறுபேறுகள் குறைவாக கணக்கிடப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, மொத்த வருமானம் நிதிக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. ஆகையால், இங்கு கணக்கீடு செய்யப்படவில்லை. இந்த அதிகார சபையின் மொத்தப் பெறுபேறுகள் சரியான முறையில் உரியவாறு கணக்குகளில் காட்டப்பட்டுள்ளன.

4.0 செயற்பாட்டு மீளாய்வு

4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களுடன் தொடர்பான செயற்பாடுகள் மற்றும் அத்தகைய செயற்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய தற்போதைய நிலை என்பன தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

இலக்கம்	செயற்பாடு	நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
1	மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மூலவளங்கள் மதிப்பீட்டுக் கருத்திட்டம்	பகவந்தலாவ காற்று சக்தி கோபுரத்தை நிர்மாணித்தல் பணி, காணி தொடர்பான பிரச்சினையினால் தாமதிக்கப்பட்டது. அந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட்டு, குறித்த நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டன. கருத்திட்டம் ஏற்கெனவே நிறைவு செய்யப்பட்டுள்ளது.
2	ADB Quantum Leap கருத்திட்டம்	கருத்திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.
3	சூரிய சக்தி மின்னுற்பத்தி வினைத்திறன் வாய்ந்த பாவனைக்கான நுண் மின்சார முறைமை	நகல் இறுதி அறிக்கை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் நிறுவனத்தின் மூலமாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள அவதானிப்புகளை அடிப்படையாகக் கொண்டு, குறித்த இறுதி அறிக்கை பணிப்பாளர்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.
4	மின்சக்தியில் இயங்கும் வினைத்திறன் வாய்ந்த வாகனங்கள் கருத்திட்டம்	இந்தக் கருத்திட்டம் தொடர்பில் ஏற்பட்டுள்ள தாமதங்கள் பற்றி மத்தியஸ்த சபைக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
5	சாம்பூர் காற்று அளவீட்டு கோபுரம்	கருத்திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.
6	நடுக்குடா காற்று அளவீட்டு கோபுரம்	கருத்திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.
7	தூய சக்தி முறைமைகள் மேம்பாட்டுக் கருத்திட்டங்கள்	கருத்திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.
8	வினைத்திறன் வாய்ந்த கட்டிடங்களுக்கான உசாதுணை உதவிகளை மீளாய்வு செய்தல்	கருத்திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

5. பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வாளர் அதிபதியினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு பாதீட்டுத் திட்டத்தின் அடிப்படையிலான ஒரு நிதிக் கட்டுப்பாட்டை செயற்படுத்தும் வகையில் தேவையான ஒரு முறையியலை தயாரித்து அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

6. முறைமைகளும் கட்டுப்பாடும்

கணக்காய்வாளர் அதிபதியினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரிவுகளில் விஷேட கவனத்தை செலுத்தி, அதனை குறித்த இலக்கை அடையக் கூடிய வகையில் குறிப்பீடு

செய்வதற்கும், குறித்த பலவீனங்களை இனங்கண்டு அவற்றை சீராக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். இங்கு சுட்டிக் காட்டப் பட்டுள்ள கணனி பேரேட்டு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு முதல் அந்த முறைமையின் மூலமாக கணக்கீட்டு விடயங்கள் மேற்கொள்ளப்படும்.